Volume: 5 Issue - 12

2014

# வைகறை வெளிச்சம்


₹20


மு.குலாம் முஹம்மது






## எகிப்து-மரணத்தின் மடியில் இக்வான்கள் தொடரும் லட்சிய பயணங்கள்




## 26/11 நூல் வெளியீடு & கர்கரே விருது வழங்கும் நிகழ்ச்சி

# அதிர்ச்சியான நிகழ்ச்சிகளைக் கண்டு நிலைகுலையும் குழந்தைகள்



தொடர் – 9

**குழந்தைகள்** 93 பேர் கும்பகோணத்தில் கரிந்து போனார்கள்.

இந்தச் சம்பவம் சகிக்க இயலாதது. ஆனால், தொலைக்காட்சியும் பத்திரி கைகளும் அதைப் படம் போட்டுக் காட்டின.

இந்த கோரங்களைக் குழந்தைகள் பார்க் கும்போது அவர்களின் எண்ணங்கள் அலை பாயும் அத்தோடு அவர்களின் மனநிலைகள் பாதிக்கப்படும்.

இவை நிகழ்ச்சியோடு சம்பந்தப்படா தவர்களைப் பற்றியது.

இனி இந்த நிகழ்ச்சிகளோடு சம்பந்தப் பட்ட குழந்தைகள், இந்தக் கோரத்தைக் கண்ணால் கண்டவர்கள், நேற்றுவரை தன்னோடு தவழ்ந்தவர்கள் தன்னோடு விளை யாடியவர்கள் பிணமாக, கருகிப்போன நிலைகள் இவற்றைக் கண்டு கலங்கி நிற்ப வர்கள்.

இப்படி பீதிவயப்பட்டிடும் குழந்தை களை எப்படிக் கையாள்வது? அவர்களிட மிருந்து ஒட்டுமொத்தமாகச் செய்திகளை மறைத்து விடுவதா அல்லது அவர்களுக்குப் புரிய வைத்து, அவர்களைப் பீடித்திருக்கும் அச்சங்களை அகற்றுவதா?

இந்தக் கேள்விக்கு விடை காணும் முன் கும்பகோணம் தீ விபத்தில் உயிர் தப்பிய குழந்தைகளின் மனநிலை எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்வது நல்லது.

**குழந்தைகளின் மனநிலை**

“என்னுடைய வகுப்பறை நான்காவது மாடியில் இருக்கிறது. அதனால் எனக்கும் ஏதாவது நிகழுமா?” இது கும்பகோணம் நிகழ்வுகளை நேரில் பார்க்காத பட்ட ணத்தில் படிக்கும் குழந்தையின் மன நிலையைப் பீடித்திருக்கும் பீதி.

ஆமாம்! அன்னாந்து பார்த்து ஆச்சர் யப்படும் அளவுக்கு உயர்ந்து நிற்கும் பட்ட ணத்து பள்ளிக்கூடங்கள் இதுவரை பெருமையாகவே பேசப்பட்டு வந்தன. ஆனால், இப்போது பயத்தோடு பார்க்கப் படுகின்றன.

எங்கள் (ஸ்கூல்) பள்ளிக்கூடம், மிகப் பெரியது எனப் பெருமை பேசிய குழந் தைகள், மிகப் பெரிய பள்ளிகளின் மூன்றாவது மாடி ‘மரணத்தின் வாயிலா?’ எனப் பேசிடத் தலைப்பட்டு விட்டன.

அந்தப் பள்ளி ஆசிரியைகள், ஆசிரி யர்கள் ஏன் ஓடினார்கள்? அவர்கள் நல்லவர் களல்ல.

இந்தக் கேள்வியும் அதற்கான பதிலும் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் குலத் திற்குப் பேரிடி.

ஆமாம்! குழந்தைகளை மீட்கும் பணியில் உயிரைத் தந்த ‘ஆசிரியைகள்’ விருதைப் பெற எந்த ஆசிரியரும் முன்வர வில்லையே!

இவர்களைத் தாயாக, காப்பாளராக எண்ணி தங்கள் குழந்தைகளை ஒப்படைத்த தாய்மார்களுக்கு ஆத்திரம்; ஆதங்கம்.

ஆக, ஆசிரியர்களை கண்ணியமாகப் பார்த்த காலங்கள் மங்கி வருகின்றன. ஆசிரியர்கள் ஓடி வருவதைத் தவிர்த்து குழந்தைகளுக்கு உதவி இருக்கலாம். அத்தோடு இந்தக் குழந்தைகளையும் அடுத்த வர்களுக்கு உதவும்படி ஏவி இருக்கலாம். இதன் மூலம் ஓர் சிறந்த முன்மாதிரியைக் காட்டி இருக்கலாம். இதனால் இந்த சோகத்தை சாதனையாக திருப்பிட முயற்சி செய்திருக்கலாம். ஆனால், எதுவுமே நடக்கவில்லை. ஆசிரியர்கள் எப்படி இருக்கக் கூடாது என்பதன் மறுபதிப்பே இது.

**குழந்தைகளின் மனநிலை வேறு விதமாக வளருகின்றன**

"நான் அழுது கொண்டே இருந்தேன்" என்கின்றது மற்றொரு குழந்தை. இப்படி பேதலிக்க குழந்தைகளுக்குச் சில பரிந் துரைகள் செய்கின்றார்கள் மனநோய மருத்துவர்கள். அவற்றை இங்கே சுருக்க மாகத் தருகின்றோம்.

குழந்தைகளிடம் நடந்தவற்றை மறைக்க வேண்டாம். அவர்களிடம் நடந்தவற்றை நடந்தபடியே சொல்லுங்கள். இது என்ன நடந்தது என்பதைப் பற்றிய குழப்பத்தை அகற்றும். நம்மிடமிருந்து எதையோ மறைக் கின்றார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு வர வேண்டாம்.

அத்தோடு குழந்தைகளிடம் இன் னொன்றையும் சொல்லி வையுங்கள். இது போன்ற நிகழ்வுகள் நடக்காமல் தடுத்திட மிக எளிதான வழிகள் இருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொடுங்கள்.

சில முன்னெச்சரிக்கையான நடவடிக் கைகளை எடுத்தால் இது போன்ற அசம்பா விதங்கள் நடக்காது என்றே அடித்துக் கூறலாம்.

அனைத்து தரப்பிலும் நடந்த தவறு களைச் சுட்டிக் காட்டுங்கள். இந்தத் தவறுகள் மீண்டும் நிகழ்ந்திடாமல் தடுத்திட அரசு விரைந்து எடுத்துவரும் நடவடிக்கை களையும் சொல்லுங்கள். இதனால் இது போன்ற நிகழ்வுகள் இனி நடக்காது என்பதையும் அவர்களிடம் சொல்லுங்கள்.

இப்போது தமிழக அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகள் குழந்தை களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

> பீதிவயப்பட்டிடும் குழந்தை களை எப்படிக் கையாள்வது? அவர்களிட மிருந்து ஒட்டுமொத்தமாகச் செய்திகளை மறைத்து விடுவதா அல்லது அவர்களுக்குப் புரிய வைத்து, அவர்களைப் பீடித்திருக்கும் அச்சங்களை அகற்றுவதா?

அது போல் தேசிய அளவில் உருவாகி இருக்கும் அனுதாபங்கள் ஜாதி, மத உணர்வுகளைக் கடந்து மக்கள் அனைவரும் ஒன்றாய்க் காட்டும் அக்கறையையும் எடுத்துச் சொல்லுங்கள்.

இதனால் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்தவை உங்களுக்கு ஒருபோதும் நடக்காது என்பதையும் சொல்லி வையுங்கள்.

**மனநிலை வல்லுநர்களின் ஆலோசனை**

திறந்து பேசுவது நல்லது. மறைத்து மூடி வைப்பது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

குழந்தைகளிடம் உண்மையை விளக்கி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் விபத்துகளை தடுக்கும் முறைகளையும் எடுத்துச் சொல்லலாம்.

இதன் மூலம் குழந்தைகள் பொறுப்பு மிகுந்த குழந்தைகளாக வளரும்.

இஃது கும்பகோணம் நிகழ்வுக்கு மட்டுமல்ல. இது போன்ற எல்லா எதிர் பாராத அசம்பாவிதமான நிகழ்வுகளுக்கும் பொருந்தும்.

MGM

# சைக்கிள் பழுதுபார்ப்பவர் இந்தியன் முஜாஹிதீன்களின் தளபதியான கதை



**அந்த** ஏழை முஸ்லிமிற்கு வயது 55. பெயர் ஹபீல் அஹ்மத். அவர் பிஹார் மாநிலத்தின் ஷிவ்தாரா என்னுமிடத்தைச் சார்ந்தவர். அது தர்பாங்கா என்னுமிடத்திற்குப் பக்கத்திலுள்ள ஓர் இடம்.

இந்த தார்பாங்கா என்னுமிடத்திலுள்ள முஸ்லிம் இளைஞர்கள்தாம் மிகவும் அதிகமாகக் குறிவைக்கப்படுகின்றார்கள்.

ஹபீல் அஹ்மத், காலை முதல் இரவின் பிற்பகுதி வரை உழைத்தால் ரூபாய் நூறு சம்பாதிக்கலாம். பெப்ருவரி 22ஆம் நாள் (2012) அவர் தன் கடையைத் திறப்பதற்குச் சென்று கொண்டிருந்தார். ஒரு சாதாரண வேன் வந்து நின்றது. சாதாரண உடையில் சிலர் இறங்கினார்கள். ஹபீல் அஹ்மத் அவர்களிடம் ஏதோ பேசிட வேண்டும் என்றார்கள்.

வேனின் பக்கம் அழைத்துச் சென்றார்கள். பேசிக் கொண்டிருந்தபடியே வேனில் ஏற்றினார்கள். அப்படியே கொண்டு சென்றார்கள்.

அடுத்த நாள் தொலைக்காட்சிகளில் இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பு ஆள் சேர்த்துக் கொண்டிருந்த முக்கிய நபர் அதிபயங்கரமான தீவிரவாதி கைது செய்யப்பட்டார் என்ற செய்தியோடு அவர் காட்டப்பட்டார்.

டெல்லி சிறப்புக் காவல்படையின் அசாதாரண சாதனைகளில் பெரிதாகப் பரப்பப்பட்டது. அதன் பின் ஹபீல் அஹ்மத் என்ன ஆனார் என்பது தெரியவே இல்லை.

பிளஸ் 2 படித்து ஜெயித்த அவருடைய மகன் படிப்பை இழந்தான்.

குடும்பம் தெரு முனைக்குத் தள்ளப்பட்டது. காவல்துறையின் இந்த அராஜகங்களை எதிர்ப்பவர் எவருமில்லை.

http://twocirclesnet/2012mar10bicycle_repair mechanic_darbhanga_in-recruted-delhi-police

### அப்துல் ரஹ்மானின் அன்னை

பீகாரிலுள்ள தர்பாங்கா என்ற இடத்தில் முஸ்லிம் இளைஞர்கள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றார்கள்.

அப்படி கைது செய்யப்பட்ட ஓர் அப்பாவி இளைஞனின் தாயாரைச் சந்திக்கச் சென்றோம். வீட்டில் உள்ளவர்கள் அத்தனை பேரும் சொன்ன ஒரே பதில் வீட்டின் கதவுகள் திறக்கப்படுவதில்லை. வெளியே பூட்டி இருக்கின்றார்கள். சாவி தொலைந்து விட்டது.

உண்மையில், வீட்டின் சாவி தொலைந்து போகவில்லை. வீட்டின் கதவைத் திறக்க யாரும் விரும்பவில்லை. அதுதான் உண்மை. ஏனெனில், அந்த அம்மாவின் மகன் கைது செய்யப்பட்ட நாள் முதல், பேட்டி எடுக்க வருபவர்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றார்கள். நிவாரணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இந்த விரக்தியில் அந்தத் தாய் நிரந்தரமாகப் பத்திரிகையாளர்களுக்கு தன் வீட்டின் கதவைப் பூட்டி விட்டாள்.

ஆனால், இந்த பத்திரிகையாளர்கள் (மும்தாஜ்ஆலம் பலாஹி) அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் வழி அந்தக் கதவைத் திறக்க வைத்து விட்டார். ஏனெனில், இந்தப் பத்திரிகையாளர், அந்த வட்டாரத்திலுள்ள முக்கிய முஸ்லிம் பிரமுகர்களை அழைத்துக் கொண்டு அங்கே சென்றிருந்தார்.

அந்த அன்புச் சகோதரியின் மகன் அப்துல் ரஹ்மான் படிப்பில் மிகைத்த ஆர்வம் தென்னிந்தியாவில் கல்வி பிகார் மக்களின் நல்லெண்ணம். அந்த எண்ணம் அப்துல் ரஹ்மானுடனும் தொற்றிக் கொண்டது. ஆகவே, தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்தவுடன் அவன், சென்னை வந்து

தன்னுடைய இன்ஜினீயரிங் படிப்பைத் தொடர்ந்திட வேண்டும் என முடிவு செய்தான்.

தாயாரும் உதவி செய்திடவே அவன் சென்னை வந்தவுடன் B.Tech என்ற இன்ஜினீ யரிங் படிப்பின் முதல் வருடத்தில் இணைந் தான். அவன் CBSE பாடத்திட்டத்தில் முதல் மாணவனாகத் தேறியதால் அவனுக்கு மிகவும் எளிதாக கல்லூரியில் இடம் கிடைத்தது.

ஆனால், அவன் சற்றும் எதிர்பாராத அளவில் நமது டெல்லி சிறப்புக் காவல் பிரிவைச் சார்ந்த காவலர்கள் செப்டம்பர் 27ஆம் நாள் 2011ஆம் ஆண்டு அவனை அப்படியே அலாக்காகத் தூக்கிச் சென்று விட்டார்கள்.

கைது செய்த பின்புதான் அவனுக்கு தான் செய்த குற்றங்கள் புரிந்தது. ஆமாம், முதல் குற்றம்: அவன் ஓர் முஸ்லிம். இரண்டாவது குற்றம்: குஜராத்தில் தார்பங்கி எனும் இடத்தைச் சேர்ந்தவன்.

அவனுடைய குடும்பத்தைச் சார்ந்த வர்கள் அவன் நன்றாகப் படிப்பான் என்ப தைத் தவிர வேறு எந்தக் குற்றத்தையும் அவன் செய்துவிடவில்லை என்கிறார்கள்.

தார்பாங்காவில் கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் பல. அதில் டான்பாஸ்கோ என்ற கல்வி நிறுவனம் மிகவும் புகழ்பெற்றது. அதில் படிக்க இடம் கிடைத்தால் அதையே கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருது வார்கள். மாணவர்களும் பெற்றோர்களும். அந்த டான்பாஸ்கோவில் பத்தாம் வகுப்பு வரை முடித்துவிட்டு ரோஸ் பொது பள்ளிக் கூடத்தில் அவன் +2 வரை படித்தான். இந்த ரோஸ் பொதுப் பள்ளியும் அந்த இடத்தில் கீர்த்தியும் கித்தாய்ப்பும் பெற்றது.

**டான் பள்ளிக் கூடத்தின் முதல்வர் கூறுகின்றார்:**

பொறுப்பைப் பெறுவது என்பது சிறந்த கல்வியாளர் ஒருவரால்தான் முடியும். அதையும் ஓர் முஸ்லிமே பெற்றிருந்தார். அவரது பெயர் செய்யித் அன்வர், ஹஸன் ஆபிசி. அப்துல் ரஹ்மானின் வீட்டிற்கும் இந்தப் பள்ளிக்கூடத்திற்கும் இடையே உள்ள இடைவெளி ஒரு கிலோ மீட்டர்தான். அவர் மாணவன் அப்துல் ரஹ்மானை மட்டுமல்ல, மொத்த குடும்பத்தையுமே புகழத் தொடங்கிவிட்டார்.

அவன் மிகவும் சிறந்த மாணவன், படிப்பில் மட்டுமல்ல, பண்பிலும்தான். அவனைப் பாராட்டிட எங்களிடம் வார்த் தைகள் இல்லை. உண்மையில் அவனுடைய இதர சகோதரர்களும், படிப்பிலும் பண்பார்ந்த குணத்திலும் நல்லவர்கள். நான் தனிப்பட்ட முறையில் அந்தக் குடும்பத்தை நன்றாக அறிவேன். அவர்கள் ஓர் சிறந்த குடும்பம். அவர்களிடம் டாக்டர்களும் இன்ஜினீயர்களும் உண்டு.

நர்சரி என்ற குழந்தைப் படிப்பு முதல், பத்தாம் வகுப்பு வரை அவன் இங்கேயே படித் தான். நன்றாகப் படித்தான். நற்குணங்களில் மிகைத்து நின்றான்.

எந்த நிலையிலும் எங்களிடம் அவனைப் பற்றி புகார் எதுவும் வந்ததில்லை. அவன் கைது செய்யப்பட்டு விட்டான் என்ற செய்தியை அறிந்து நாங்கள் கதி கலங்கிப் போனோம். நிச்சயமாக எங்களால் அதை நம்பிட இயலவில்லை. இதை யாரும் நம்பிடக் கூடாது. இன்றைக்கும் நான் நம்பிடவில்லை; என்றைக்கும் நான் நம்பிட மாட்டேன். அவனை வேண்டுமென்றே தீவிரவாத வழக்குகளில் இணைத்திருக்கிறார்கள். அல்லது திணித்திருக்கிறார்கள். அவனுடைய குடும்பமே கண்ணியமானது. அந்தக் குடும் பத்தை அனைவரும் நன்றாக அறிவார்கள்.

> முஸ்லிம் இளைஞர்கள், பல்வேறு போட்டித் தேர்வுகளிலும் வென்று தங்கள் திறமையை நிலைநாட்டி வருகின்றார்கள். வேறு பல்கலைக் கழகங்களில் பயிலும் இவர்களைக் கைது செய்வதன் மூலம் முஸ்லிம் இளைஞர்களுக்கு சிறந்த பல்கலைக் கழகங்கள், படிக்க இடந்தராத நிலை வரலாம். இதை திட்டமிட்டே செய்கின்றார்கள்.

அவன் படித்த டான் பாஸ்கோ முதல்வர் அவன் மெட்ரிகுலேஷன் தேர்வில் முதல் வகுப்பில் தேறினான். அவனுடைய தம்பியும் முதல் வகுப்பிலேயே தேறினான். அவனுடைய இளைய தம்பி பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றான்.

**அடிக்கடி தார்பங்காவில் ஏன் இந்த கைதுகள்?**

இப்படியொரு கேள்வியை அந்த பள்ளி முதல்வரிடம் கேட்டபோது அவர், "இங்கே உள்ள முஸ்லிம்கள் கல்வியில் மிகவும் வேக மாக முன்னேறி வருகின்றார்கள். குறிப்பாக இன்ஜினீயரிங் கல்வியிலும், கம்ப்யூட்டர் கல்வியிலும் மிகவும் முன்னே சென்று கொண்டிருக்கின்றார்கள். இந்த முஸ்லிம் இளைஞர்கள் கல்வியில் முன்னேறிடக் கூடாது என்பதில் சிலர் மிகவும் கவனமாக இருக்கின்றார்கள். அதனால்தான் படித்த முஸ்லிம் இளைஞர்களாகப் பார்த்து கைது செய்கின்றார்கள். பொய்யாக, தீவிரவாத வழக்குகளில் சேர்க்கின்றார்கள்.

இங்கே உள்ள முஸ்லிம் இளைஞர்கள், பல்வேறு போட்டித் தேர்வுகளிலும் வென்று தங்கள் திறமையை நிலைநாட்டி வரு கின்றார்கள். வேறு பல்கலைக் கழகங்களில் பயிலும் இவர்களைக் கைது செய்வதன் மூலம் முஸ்லிம் இளைஞர்களுக்கு சிறந்த பல்கலைக் கழகங்கள், படிக்க இடந்தராத நிலை வரலாம். இதை திட்டமிட்டே செய்கின்றார்கள். இதனால் மொத்த முஸ்லிம் சமுதாயமும் கல்வியில் பின்னுக்குத் தள்ளப்படும் என்கின்றார்.

முஸ்லிம் இளைஞர்களை தீவிரவாத வழக்குகளில் இணைப்பதை நிறுத்துங்கள்

ஜாமியா பல்கலைக் கழக ஆசிரியர் களின் ஐக்கிய குழுமம் வேண்டுகோள்

இந்த வழக்கை கவனியுங்கள்:

தக்வீ, நக்வீ, அஹ்மத் ஆகியோர் டெல்லியிலுள்ள அபுல் பசல் என்கிளேவ் என்ற குடியிருப்புப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தக்வீ, ஒரு பெட்டி படுக்கைகள் விற்பனை செய்யும் கடை ஒன்றை, காலின்டி குஞ்ச், சரிதா விகார் சாலையில் நடத்திக் கொண் டிருக்கின்றார்.

இவர்களின் மூத்த சகோதரர்கள் இருவர் மும்பையில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் பயணங்களில் பயன்படுத்தப்படும் பெட்டி படுக்கைகளை தயாரித்து விற்பனை செய்யும் சிறுதொழில் ஒன்றை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்கள் அனைவரும் தர்பாங்காவை (பிகாரை) சார்ந்தவர்கள். இவர்களின் பெற்றோர்கள் இன்னும் இங்கேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நிகழ்வு களின் தொகுப்பு.

**(9 டிசம்பர் 2011)**

ராசி அஹ்மத் - இவர் மும்பையில் வாழ்ந்து கொண்டிருப்பவர். இவர் கல்கத்தாவிலிருந்து டெல்லி வந்து சேர்ந்தார். இவர் டெல்லி அபுல் பசலில் வாழ்ந்து கொண்டிருக்கும் தன்னுடைய சகோதரர்கள் நக்வீ அஹ்மத், தக்வீ ஆகியோரைச் சந்திக் கவே வந்தார். அவர் டெல்லி வந்திறங்கியதும் ஆட்டோக்கள் நிற்குமிடம் சென்று அபுல் பசல் செல்ல ஓர் ஆட்டோவை அமர்த்தி அதில் ஏறினார்.

அவருடன் இரண்டு பேர் ஏறி, வலது பக்கமும், இடது பக்கமும் அமர்ந்து கொண் டார்கள்.

ராசி அதிர்ந்து போனார். ஆனால், அதற்குள் அவர்கள் இரண்டு பேரும், நாங்கள் உளவுத்துறையைச் சார்ந்தவர்கள் எனக் கூறினார்கள். அவர்கள், ஷாஹீன் பாக் பஸ் நிலையம் வந்தார்கள். அங்கே தக்வீ வந்தார். அந்த இரண்டு உளவுத்துறை அதிகாரிகளும் நக்வீயை அவர்கள் முன் கொண்டுவந்திட வேண்டும் என்றார்கள்.

தக்வீ அவர்களின் - அதாவது உளவுத் துறையைச் சார்ந்தவர்களின் அடையாள அட்டையைக் காட்டிட வேண்டும் எனக் கேட்டான். மிகுந்த தயக்கத்தோடு அவர்கள் தங்கள் அடையாள அட்டையைக் காட்டி னார்கள். அவர்களுடைய பெயர்கள் லலித் மோகன் நக்ரி, ஹரிடே பூஷன். இவர்கள் இருவருமே டெல்லியிலுள்ள சிறப்புக் காவல் பிரிவைச் சார்ந்தவர்கள்.

அதன் பின் நக்வீயை அந்த பஸ் ஸ்டாண்டிற்கு வரவழைத்தார்கள். நக்வீ யிடம் லலித்தும் பூஷனும் கவுர் ஜமாலியைத் தெரியுமா? எனக் கேட்டார்கள். இந்த கவுர் ஜமாலி என்பவரை நவம்பர் 2011இல் கைது செய்திருந்தார்கள்.

நக்வீ, கவுர் ஜமாலியை தார்பங்காவில் வாழ்ந்தவர் என்றும், அன்று முதலே அவரை தெரியும் என்றும் கூறினார்.

இதன் பின் அந்த சிறப்புக் காவல் பிரிவைச் சார்ந்தவர்கள் இவருக்கு வீடு வாடகைக்குப் பிடிக்க மும்பையில் உதவியது உண்டா? எனக் கேட்டார்கள். அதற்கு ஆமாம்; அறிமுகம் ஆனவர் என்ற அடிப்படையில் நான் ஒரு தரகரை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன் எனக் கூறினார்.

இதற்கு அந்த இரண்டு பேரும் நாங்கள் ஓர் புலனாய்வை நடத்த வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறினார்கள். இதற்கு நக்வீ ஒத்துக் கொண்டார். பின்னர் நக்வீ அவருடைய இரண்டு சகோதரர்களும், டெல்லி லோடி காலனி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். அங்கே நக்வீயை கவுர் ஜமாலி யுடன் பேசிட வைத்தார்கள். (10 டிசம்பர் 2011)

நக்வீயை விமானம் (Go Air Flight) மூலம் பம்பாய் அழைத்துச் சென்றார்கள். நக்வீ, கவுர் ஜமாலிக்கு வாடகைக்கு வீடு எடுத்துக் கொடுத்த இடத்தைக் காட்டிக் கொடுத்தார் அந்த டெல்லி சிறப்பு காவல் பிரிவினருக்கு. அந்த இடத்தில் டெல்லி சிறப்புக் காவல் பிரிவினரும் ஓர் வீட்டை வாடகைக்கு அமர்த்தி இருந்தார்கள். அப்படி வீட்டை வாடகைக்கு எடுத்திருந்ததன் நோக்கம் அங்கு நடப்பனவற்றைக் கண்காணிப்பதுதான். அவர்கள் டிசம்பர் 13ஆம் நாள்தான் திரும்பி வந்தார்கள்.

நடந்தது என்னவெனில் டெல்லியிலுள்ள சிறப்புக் காவல்படைப் பிரிவுக்கும் மராட்டிய மாநிலத்திலுள்ள தீவிரவாத தடுப்புப் படைக்குமிடையிலுள்ள சண்டையில் நக்வீ அஹ்மதின் மொத்த குடும்பமும் அலைக்கழிக்கப்பட்டது. இதனை ஆழ்ந்த அனுதாபத்தோடு கூர்ந்து கவனித்து வந்த, ஜாமியா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் குழுமம் இதனை வன்மையாகக் கண்டித்தது.

டிசம்பர் பதினைந்தாம் நாள் முதல், ஜனவரி 7ஆம் நாள் வரை பல முறை நக்வீயும் டெல்லி சிறப்பு காவல் பிரிவின் அலுவலகத்திற்குப் பல முறை சென்று வந்தார்கள். அவர்கள் இதே சகோதரர்களின் கைபேசிகளை சோதனை செய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். அதனால், அவர்கள் தங்கள் கைப்பேசிகளை அங்கே விட்டுச் சென்றார்கள். அந்த கைப்பேசிகளை மீட்க நக்வீ பலமுறை அந்த காவல் நிலையத்திற்கு சென்று விட்டார்கள். இந்தச் சகோதரர்களை காவல்துறையினர் தொடர்ந்து கஷ்டப்படுத்தி வந்தார்கள். இதனால் அவர்கள் மிகவும் தளர்ந்து போயிருந்தார்கள். ஜனவரி 7, 2012)

நக்வீக்கு ஒரு தொலைபேசி அழைப்பு டெல்லி சிறப்புக் காவல் பிரிவிலிருந்து மும்பையில் அவன் வீடு பிடித்துக் கொடுத்த இரண்டு பேரும் அந்த வீட்டுக்குத் திரும்ப வந்துவிட்டார்கள். அதனால் மும்பை செல்ல வேண்டும் என்றது அந்த அழைப்பு. ஜனவரி 8ஆம் நாள் நக்வீயை 4.30 இராஜதானி விரைவு ரெயிலில் மும்பைக்கு அழைத்துச் சென்றார்கள்.

**9 ஜனவரி 2012**

அவர்கள் மும்பையை வந்தடைந்தார்கள். நக்வீ மாலையில் தொலைபேசியில் அழைத்தான். வந்த வேலை முடிந்தது. நாளையே திரும்பி வந்துவிடுவேன் என்றான்.

ஆனால், இரவு 11.30 மணிக்கு மராட்டிய காவல்துறையின் தீவிரவாத தடுப்புப் படை நக்வீயின் சகோதரரின் சிறுதொழில் கூடத்திற்கு வந்தார்கள். அவருடைய சகோதரர் ‘ரஃபீ’ஐ அழைத்துச் சென்றுவிட்டார்கள். இது நடந்தவுடன் நக்வீ டெல்லியின் சிறப்புக் காவல் பிரிவை தொலைபேசியில் அழைத்து என் தம்பிதான் எந்த தீவிரவாதச் செயலிலும் ஈடுபடவில்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! அப்படி இருந்தும் என் தம்பியை ஏன் அழைத்துச் சென்றிருக்கின்றார்கள் எனக் கேட்டான்.

இதற்கு டெல்லி சிறப்புக் காவல் பிரிவினர் கைது செய்தது நாங்களல்ல. அது மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப்

படையைச் சார்ந்தவர்கள் எனப் பதில் சொல்லி இருக்கின்றார்கள். அத்தோடு இது விவகாரத்தில் நாங்கள் செய்வதற்கு எதுவுமில்லை. ஏனெனில் எங்களுக்கும் அவர்களுக்கும் உறவு நன்றாக இல்லை எனச் சொல்லி விட்டார்கள். அத்தோடு அவர்கள் நக்வீயை தாங்கள் அந்த இடத்தில் வாடகைக்கு எடுத்திருக்கும் வீட்டுக்கு வரும்படியும் கூறினார்கள்.

நக்வீ, நதீமை அழைத்து அவர்களின் சிறுதொழில் கூடத்தில் என்ன நடந்தது என்பதைக் கேட்டான். நதீம், 'ஹோட்டல் சாகர்'க்கு வந்திடும்படி அழைத்தான். இந்த ஹோட்டலை நக்வீக்குத் தெரியாது.

உண்மையில் நடந்தது என்னவெனில், மராட்டிய தீவிரவாத தடுப்புப் படை, நதீமைக் கைது செய்து வைத்துவிட்டு, அவன் வழியாக நத்வீக்கு ஒரு சதிவலை விரித்திருந்தார்கள். நக்வீ, அந்த ஹோட்டலுக்குச் சென்றபோது, அவனையும் பிடித்து வைத்துக் கொண்டார்கள்.

நடு இரவு 1.30 மணிக்கு மராட்டிய தீவிரவாத தடுப்புப் படையினர் அவர்களின் சிறுதொழில் கூடத்திற்கு வந்து ராசீயையும் இன்னொரு தொழிலாளியையும் கைது செய்து சென்று விட்டார்கள்.

11 ஜனவரி 2012: ராசியையும் ரஃபீயையும் விடுதலை செய்து விட்டார்கள்.

13, ஜனவரி 2012: ரஃபீயை தீவிரவாத தடுப்புப் படையினர் மீண்டும் பிடித்துச் சென்றார்கள்.

17 ஜனவரி: மராட்டிய தீவிரவாத தடுப்புப் படையினர் பிகார் சென்றனர். நக்வீயின் வீட்டுக்கு நடுநிசியில் சென்றார்கள். அவருடைய சகோதரருக்குச் சொந்தமான இரு சக்கர வாகனம் - பைக் - ஒன்றைக் கைப்பற்றினார்கள். அந்த பைக் திருடப்பட்டது என்றொரு பொய்க் குற்றச்சாட்டையும் புனைந்தார்கள். நக்வீ அஹ்மதின் வயது முதிர்ந்த பெற்றோர்கள் நடுநடுங்கிப் போனார்கள்.

இந்திய தண்டனைச் சட்டம் 419, 420 ஆகியவற்றை நக்வீ அஹ்மத் மீது திணித்தார்கள். ரஃபீஜ அவர்கள் மாலையில் விடுவித்தார்கள்.

பின்னர் எல்லோரையும் விடுவித்தார்கள்.

இங்கே நடந்தது என்னவெனில் டெல்லியிலுள்ள சிறப்புக் காவல்படைப் பிரிவுக்கும் மராட்டிய மாநிலத்திலுள்ள தீவிரவாத தடுப்புப் படைக்குமிடையிலுள்ள சண்டையில் நக்வீ அஹ்மதின் மொத்த குடும்பம் அலைக்கழிக்கப்பட்டது. இதனை ஆழ்ந்த அனுதாபத்தோடு கூர்ந்து கவனித்து வந்த, ஜாமியா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் குழுமம் இதனை வன்மையாகக் கண்டித்தது. அத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

●


இன்ஷா அல்லாஹ்...
விரைவில் வெளிவருகிறது!

ஷஹீத் செய்யித் குத்துப் அவர்களின்

இஸ்லாமிய எழுச்சியின் மைல் கற்கள்

★ எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட நூல்!

★ தலைமுறை தாண்டியும் புரட்சிகளை விளைவிக்கும் நூல்!

★ பல லட்சம் போராளிகளை உருவாக்கிய நூல்!

மு.குலாம் முஹம்மது அவர்களின் விறுவிறுப்பான மொழிநடையில்

வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது தளம், மண்ணடி,
சென்னை-1. Tel: 044-45566909

# திருக்குர்ஆன் பாடம்

## மௌலவி இல்யாஸ் ரியாஜி



பாடம் - 17

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّورَ خُذُوا مَآ
آتَيْنَاكُم بِقُوَّةٍ وَاسْمَعُوا ۖ قَالُوا سَمِعْنَا وَعَصَيْنَا وَأُشْرِبُوا فِي
قُلُوبِهِمُ الْعِجْلَ بِكُفْرِهِمْ ۚ قُلْ بِئْسَمَا يَأْمُرُكُم بِهِ إِيمَانُكُمْ إِن
كُنتُم مُّؤْمِنِينَ ﴿٩٣﴾

அத்தியாயம் அல்பகரா - வசனம் 93

நாம் உங்களுக்கு மேலே தூர் மலையை உயர்த்தி, உங்களுக்கு நாம் வழங்கியதை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்றும் (சொல்லப்படும் நல்லுரைகளை) கேளுங்கள் என்றும் நாம் வாக்குறுதி வாங்கியதை எண்ணிப் பாருங்கள். (அதற்கு) 'நாங்கள் செவியுற்றோம்; மாறு செய்தோம்' என்று அவர்கள் கூறினார்கள். அவர்களின் இதயங்களில் காளைக் கன்றை புகட்டுப்பட்டு விட்டனர். இதற்கு காரணம் அவர்கள் (நம்மை ஏற்க) மறுத்ததே. 'நீங்கள் (உண்மையான) நம்பிக்கையாளர்களாக இருந்தால் உங்களின் நம்பிக்கை உங்களுக்குக் கட்டளையிடுவது மிகக் கெட்டதாக இருக்கிறதே...' என்று (அவர்களிடம் நபியே) கூறுவீராக!

**முரண்பாட்டின்** *மொத்த உருவமே யூதர்கள் என்பதற்கு திருக்குர்ஆன் பல சான்றுகளை அடுக்கிக் காட்டியிருக்கின்றது.*

*இறுதி வேதமாம் திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று யூதர்களிடமே கூறினால் 'எங்கள் யூத இனத்தின் வேதமான தவ்ராத்தை மட்டுமே நம்புவோம்' என்று பதில் கூறினர். ஆனால், அந்த தவ்ராத் வேதத்தில் கூட 'இறுதி வேதம் திருக்குர்ஆனை இறுதி நபி கொண்டுவரும் போது நீங்கள் நம்ப வேண்டும்' என்று கூறப்பட்டிருந்ததல்லவா? எனவே 'இறுதி வேதத்தை நம்பினால்தான் தவ்ராத் மீதான உங்கள் நம்பிக்கை யூதர்களிடம் பதில் இல்லை.*

*தவ்ராத்தில் கூறப்பட்டிருப்பவற்றை மட்டுமே நாங்கள் ஏற்றுச் செயல்படுவோம் என்கின்றனர் யூதர்கள். நபிமார்கள் பலரை நீங்கள் கொன்றீர்களே! அது ஏன்? 'தவ்ராத்' வேதம் நபிமார்களைக் கொல்லச் சொன்னதா? இல்லையே.... பிறகு ஏன் கொன்றீர்கள்? என்ற கேள்விக்கும் யூதர்களிடம் பதில் இல்லை.*

எகிப்தில் வாழ்ந்த 'கிப்தீ' எனும் குலத்தவர்களுக்கு மூஸா நபியவர்கள் தாம் ஓர் இறைத்தூதர் என்பதற்கு ஒன்பது வகையான சான்றுகளைக் காட்டினார்கள். அவற்றையெல்லாம் நீங்களும் (இஸ்ரவேலர்களும்) பார்த்தீர்கள். அதன் பின்னரும் காளைக் கன்றைக் கடவுள் என்றீர்கள். இதுதான் தவ்ராத்தை நீங்கள் நம்பும் லட்சணமா? என்ற கேள்விக்கும் யூதர்களிடம் பதில் இல்லை.

முதலில் தவ்ராத்தை ஏற்க வைத்திட உங்களுக்கு பெரும் பாரதூரமான காரியத்தைச் செய்திட வேண்டியிருந்தது. தவ்ராத்தை ஏற்க முதலில் மறுத்தார்கள். பிறகு தூர் மலையை உங்கள் தலைக்கு மேல் உயர்த்தி 'தவ்ராத்தை நீங்கள் ஏற்காவிட்டால் நசுக்கி விடுவோம்' என்று கூறிய பின்னரே வேறு வழியின்றி ஏற்றீர்கள். அப்படி ஏற்றது கூட உடனடி தண்டனையிலிருந்து தப்பிக்கத்தான்.

பின்னர் அதற்கு மாறாக, நடந்து கொண்டீர்கள். 'தவ்ராத்தை ஏற்றோம்' என்று கூறியது கூட இப்படித்தானேயன்றி மனவிருப்பத்துடன் அல்லவே! தெரியாதா உங்களுடைய ஈமானின் லட்சணம்?

'தவ்ராத்தை மட்டுமே நம்புவோம்' என்று கூறுகின்றீர்களே... அது கூட உண்மையில்லையே... ஏனெனில் உங்களின் நம்பிக்கை உண்மையானதுதான் என்றால் நபிமார்களைக் கொல்வது காளைக் கன்றை வணங்குவது போன்ற தீய செயல்களைச் செய்திட உங்களை உங்களுடைய நம்பிக்கை (ஈமான்) தூண்டுகிறதே அது எப்படி? ஒரு மனிதனுடைய (ஈமான்) நம்பிக்கை அவனை நற்செயல்களைச் செய்திடத்தான் தூண்டும். உங்கள் நம்பிக்கையோ உங்களை பாவம் செய்திடத் தூண்டுவது ஏன்?

இந்தக் கேள்வியை யூதர்களிடமே கேட்கும்படி நபி (ஸல்) அவர்களிடம் 93வது வசனத்தின் மூலம் அல்லாஹ் கூறுகிறான்.

இதன் மூலம் இஸ்ரவேல் சமுதாயத்தின் வேதங்களைக் கூட முழு மனதுடன் யூதர்கள் ஏற்கவேயில்லை என்று பளிச்சென்று சுட்டிக் காட்டுகிறான் அல்லாஹ்.

அறிஞர் ஷஹீது செய்யிது குதுப் (ரஹ்) றுகின்றார்:

இந்த ஒரு வசனம் மூன்று அடுக்குகளைக் கொண்டது. முதலில் இஸ்ரவேலர்களிடம் பேசுகின்றது. (உங்கள் தலைக்கு மேல் அவர் மலையை உயர்த்தி உங்களிடம் வாக்குறுதி வாங்கினோம் என்று கூறி) யூதர்களின் கடந்த கால நிகழ்வை அவர்களிடமே கூறுகின்றது.

இரண்டாவது இறைநம்பிக்கையுள்ளவர் (முஸ்லிம்)களையும் மற்றும் இதர எல்லா மக்களையும் நோக்கித் திரும்பி (யூதர்களின் தலைக்கு மேல் மலையை உயர்த்தி தவ்ராத்தை உறுதியாகப் பிடி யுங்கள். அதன் நல்லுரைகளை செவி தாழ்த்திக் கேளுங்கள் என்று கூறிய போது அவர்கள் கேட்டோம் என்று கூறினரே தவிர கட்டுப்படவில்லை. மாறாகத்தான் நடந்து கொண்டனர் என்று) யூதர்களின் செயல் பாடுகளை இதர மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றான்.

மூன்றாவது, யூதர்கள் முன் நேருக்கு நேராக நின்று, 'நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உங்களை தெள்ளத் தெளிவான இறைமறுப்பைச் செய்யும்படித் தூண்டுகிறதென்றால் அது எப்படிப்பட்ட விநோதமான ஈமானாக இருக்கிறது என்று கேட்கும்படி நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் கூறுகிறான். யூதர்களை இழிவுபடுத்தவும் அசிங்கப்படுத்தவும் நேருக்கு நேராகக் கேட்கச் சொல்கிறான்.

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள இரு வாக்கியங்களை ஒரு நொடி நின்று நாம் சிந்திப்போம். அவ்விரு வாசகங்களும் அற்புதமானதொரு காட்சியை நமக்குக் காட்டுகின்றன.

'கேட்டோம்; மாறு செய்தோம் என்று அவர்கள் கூறினார்கள்.'

'அவர்களுடைய இறைமறுப்பின் காரணமாக காளைக் கன்று அவர்களின் இதயத்தில் புகட்டப்பட்டு விட்டது.'

இவை இரண்டும் அற்புதக் காட்சியை வடித்துக் காட்டும் வாக்கியங்கள்.

(யூதர்கள் தம் தலைக்கு மேல் தூர் மலை இருப்பதைக் கண்டபோது) 'செவியுற்றோம்' என்று (மட்டுமே) கூறினார்கள். 'மாறு செய்தோம்' என்று கூறவில்லை. ஆனால் அவர்கள் அப்படிக் கூறிவிட்டதாக இங்கு கூறப்பட்டிருப்பது ஏன் தெரியுமா?

எதை அப்போது அவர்கள் கூறவில்லையோ (மாறு செய்தோம் என்று கூறாமல்) மவுனமாக இருந்தார்களோ அதையே பின்னால் செய்தார்கள். எனவே, அது அப்பொழுது நடந்துவிட்டது போல்

காட்டுகிறது. (இதுவே ஒரு காட்சி நடக்கும் முன்னரே அது நடந்து விட்டது போல் காட்டும் அற்புத சொல்லாட்சி)

அந்த யூதர்கள் 'செவியுற்றோம்' என்று வாயால் கூறினார்கள். 'மாறு செய்தோம்' என்று செயலில் காட்டினார்கள்.

கண் முன்னே நடக்கும் செயல்கள் தான் வாயிலிருந்து வரும் சொற்களுக்கு சாட்சிகள் (மாறு செய்தோம் என்று) கூறுவதை விடவும் கூறாமல் செயலில் காட்டுவது வலிமையான சாட்சியாகும்.

(மலை தலைக்கு மேலிருந்தபோது 'கேட்டோம்' என்று கூறினாலும் பின்னர் மாறு செய்தனர்) இப்படி பின்ன் நடந்ததை முன்னரே நடந்ததாக உயிருள்ள சம்பவ மாகக் காட்டுவதன் மூலம் இஸ்லாத்தின் கொள்கைத் தத்துவங்களில் ஒன்றை இவ் வசனம் சுட்டிக் காட்டுகிறது.

அது என்னவென்றால், செயல்படாமல் வெறும் சொல்லில் மட்டும் காட்டுவதற்கு இஸ்லாத்தில் எந்த மதிப்பும் இல்லை. (கேட்டோம் என்று கூறினர். அதன்படி செயல்படாமல் மாறு செய்தனர். எனவே, கேட்டோம் என்று கூறியதற்கு நன்மை எதுவுமில்லை. மதிப்பு எதுவும் இல்லை.) செயல்கள் மட்டுமே கவனிக்கப்படும். உச்சரிக்கப்பட்ட வார்த்தைக்கும் யதார்த் தத்துக்கும் இடையே பாலமாக இருப்பது செயல்கள்தான். ஒரு மனிதன் எப்படிச் செயல்படுகிறான் என்பதை வைத்தே அவனுடைய தரம் நிர்ணயிக்கப்படுகிறது. அவன் மதிப்பிடப்படுகிறான். வெறும் சொல்லை வைத்தல்ல.

அடுத்து, அவர்களின் இதயத்தில் காளைக்கன்று புகட்டப்பட்டு விட்டது' என்ற வாக்கியத்தின் மூலம் அடர்த்தியாக ஒரு காட்சி வரைந்து காட்டப்பட்டுள்ளது.

இது ஒரு ஈடு இணையற்ற காட்சி. ஆம்! அவர்கள் புகட்டப்பட்டு விட்டனர். (அவர்களே எடுத்துப் பருகவில்லை) வேறு ஒருவர் அவர்களுக்குப் புகட்டியிருக்கிறார்.

எது புகட்டப்பட்டனர்? (நீர், குடி பானம் அல்ல) காளைக் கன்று புகட்டப்பட் டுள்ளனர்.

எங்கேபுகட்டப்பட்டனர்?(வாயில்புகட்டப் படவில்லை) இதயங்களில் புகட்டப் பட்டுள்ளனர்.

(இந்த வாக்கியங்களை நாம் வாசிக்கும் போது நம்முடைய) கற்பனைகள் ஒரு காட்சியை நமக்கு உறுதியாகவும் திடமாகவும் காட்ட முயற்சிக்கிறது. (ஒரு காளைக் கன்று அப்படியே எடுத்து அவர்களுக்குப் புகட்டப்படுவதை கற்பனை செய்து பாருங்கள்) இது நகைப்பூட்டும் ஒரு சிரிப்புக் காட்சி.

ஒரு காளையின் உருவம் அவர்களின் இதயத்தில் திணிக்கப்பட்டு அங்கே அது அப்படியே திரண்டு நிற்பது என்ற காட்சி எந்த அளவுக்கு சிரிப்பூட்டுகிறது என்றால் (அந்த வார்த்தை) உருவாக்கிக் காட்டும் வடிவம் நம் சிந்தனையிலிருந்து மறைந்து, அகன்று விடும் போலிருக்கிறது.

காளைக் கன்றை வணங்க வேண்டு மென்ற காதல் கடுமையாக இருந்தது அவர்களுக்கு. எந்த அளவுக்கு என்றால் (நேரடியாக) இதயத்திலேயே அது புகட்டோ புகட்டு என்று புகட்டப்பட்டது என்ற அளவுக்கு.

திருக்குர்ஆன் ஒரு வாசகத்தின் மூலம் ஒரு காட்சியை வடிவமைத்துவிடும் என்பதும் இங்கே தெளிவாகத் தெரிகிறது. (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)


தூர் மலையை அவர்களுக்கு மேலே உயர்த்தியபோது 'மாறு செய்வோம்' என்று கூறவில்லை. ஆனால், 'மாறு செய்வோம்' என்பதற்கேற்ப நடந்து கொண்டனர். அவர்களின் நடத்தையை அவர்களுடைய சொல்லின் இடத்தில் வைத்து விட்டது குர்ஆன். அதாவது தொடக்கத்திலேயே அவர்கள் கீழ்ப்படிவதாக வாக்களிக்கவில்லை. மாறு செய்வதாகத்தான் வாக்களித்தார்கள் என்று பிரச்னையை முடித்துவிட்டது குர்ஆன்.

யூதர்களிடம் காணப்பட்ட இந்த கர்வத்தை அவர்களிடம் இறைத்தூதர்களாக வந்த பல நபிமார்களும் கண்டித்துள்ளனர். தொடக்கத்திலேயே மறுக்கும் மனநிலையில் அவர்கள் இருந்ததை 'முதல் இரவிலேயே சோரம் போனவள் நீ இஸ்ராயீலே' எனக் கூறிக் கண்டித்துள்ளனர்.

இப்படி தனக்கேயுரிய உன்னத மொழிநடையில் குர்ஆன் இதனை எடுத்தியம்புகிறது.

(நூல்: ததப்புருல் குர்ஆன்)

**இன்ஷா அல்லாஹ் தொடரும்.....**




முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

# கேட்பாரற்றுக் கிடந்தோர் உலகத் தலைமை ஏற்றனர்

மொழிபெயர்ப்பு
அஹ்மது ஜலாலுதீன் நத்வி

27

**அண்ணல் நபி** (ஸல்) அவர்கள் அன்றைய அறியப்பட்ட உலகில் வாழ்ந்த மனிதர்களுக்கு புதுவாழ்வு வழங்கினார்கள்.

விரிவான, ஆழமான இறைநம்பிக்கை, நபித்துவத்தின் அழுத்தமான போதனை, நுட்பமான நுண்ணறிவுத்திறன் மிக்க ஆன்மிகப் பயிற்சி ஆகியவற்றைக் கொண்டும் தனித்துவமிக்க தன் திறமையாலும் இந்தப் புது வாழ்வைத் தந்தார்கள்.

வற்றாத வளமும், குன்றாத அற்புதமும் தன் பண்பெனக் கொண்ட அதிசய வேதமாம் திருக்குர்ஆனின் துணையோடும் இந்தப் புது வாழ்வைத் தந்தார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

மனிதன் என்ற மாபெரும் செல்வத்தைச் செப்பனிட முற்பட்ட பெருமானார், அது பக்குவமாகாத கச்சாப் பொருளாக இருக்கக் கண்டார்கள்.

மனிதன் என்பவன் எத்துணை பெரும் செல்வம் என்று எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. மனித மகத்துவம் எவருக்கும் புரிந்திருக்கவில்லை.

உலக வாழ்வே நிரந்தரமானது என்ற தப்பெண்ணமும் இறைமறுப்பும் அஞ்ஞானக் கோட்பாடும் மனிதனைச் சீரழித்து வைத்திருந்தது.

இப்படிச் சிதைந்து கிடந்த மனிதனிடம் அல்லாஹ்வின் உதவியோடும் (ஈமான், அகீதா) இறைநம்பிக்கை கோட்பாடு ஆகியவற்றை உருவாக்கி மனிதனுக்கு புத்துயிரூட்டினார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் புதைந்து கிடக்கும் திறமைகளைத் தோண்டினார்கள். அவரின் தனி ஆற்றல்களை பிரகாசிக்கச் செய்தார்கள். பின்னர் ஒவ்வொருவரையும் அவரவரின் திறமைக்கு ஏற்ற இடத்தில் அமர்த்தினார்கள்.

இதைப் பார்ப்பவர்களுக்கு என்ன தோன்றுமென்றால், ‘இவர் இந்த சாதனைக்காகவே படைக்கப்பட்டவரோ’ ‘இதுநாள் வரை இந்த இடம் காலியாக இருந்தது. இவர் வந்து அமர்ந்திடத்தானோ...’ ‘இவரின் வருகையை எதிர்பார்த்து இந்தப் பதவி காத்திருந்ததோ...’ என்றே தோன்றும்.

ஆற்றல் மிக்க அந்த மனிதரைப் பார்த்தால் என்ன தோன்றும் தெரியுமா? இதுநாள் வரை அசைவற்ற உறைந்த பொருளாக இருந்து திடீரென வளரும் உடலாய் இயங்கும் மனிதனாய் மாறி, விட்டாரோ அசைவற்ற பிணமாய்க் கிடந்தவர் உயிர் பெற்று எழுந்து தன் லட்சியத்தை உலகில் பரப்பிடக் கிளம்பி விட்டாரோ... தான் நடந்திடவே வழி தெரியாமல் தவிக்கும் குருடனாய் இருந்தவர் திடீரென மக்களை வழிநடத்திடும் தலைவராகி விட்டாரோ.... என்றே தோன்றும்.

‘பிணமாக இருந்தவனுக்கு உயிர் தந்து மனிதர்கள் மத்தியில் நடமாடுவதற்கு ஒளியையும் தந்தோமே அவன் இருள்களில் சிக்கி அங்கிருந்து வெளியேற முடியாமல் இருப்பவனுக்குச் சமமாவானா?’ *(6:122)* என்று அல்லாஹ் கேட்கிறானே, அதை இங்கே நாம் சிந்திக்க வேண்டும்.

பாழ்பட்டுப் போன அரேபிய இனத்தை மட்டுமல்ல, இதர மக்களையும் பெருமானார் (ஸல்) அவர்கள் செம்மைப்படுத்தினார்கள்.

கொஞ்ச காலத்திலேயே உலகம் இவர்களை வரலாற்று நாயகர்களாகவும் அதிசய சாதனையாளர்களாகவும் கண்டது. இதோ அந்த அதிசயத்தைப் பாரீர்.

**உமர் :** தன்னுடைய தந்தை கத்தாபுக் குரிய ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டும் விரட்டிக் கொண்டும் திரிந்தவர். மூர்க்கமும் முரட்டுத்தனமும் கொண்ட நபர். குறைஷிக் குலத்தவர். தன்னையொத்தவர்களிடத்தில் இவர் எவ்வகையிலும் மேம்பட்டவரல்லர். மாண்புக்குரியவருமல்லர்.

பின்னால் இவரின் திறமைகளையும் ஆற்றல்களையும் கண்டு உலகமே அதிர்கிறது. ரோம, பாரசீகப் பேரரசுகளை ஆட்சி யிலிருந்து விரட்டினார். அந்த இரு பெரும் வல்லரசுகளையும் விட மேம்பட்ட, நிர்வாகத்திறன் மிக்க, கட்டுக்குலையாத இஸ்லாமிய அரசைத் தந்தார்.

ஒழுக்கம், நீதி, இறையச்சம் ஆகிய வற்றிலும் தன்னிகரில்லாத அரசராகத் திகழ்ந்தது உமர் (ரலி) அவர்கள் தந்த இஸ்லாமிய அரசு.

**காலித் :** இவர் வலீதின் மகன். குதிரை வீரர். குறைஷிக் குல வாலிபர். (குறைஷிக் குலத்தின் நலன் என்ற) குறுகிய வட்டத் திற்குள் சுருண்டு கிடந்த இவரின் போர்த் திறன் குலப் பெருமையை நிலைநாட்டு வதற்காக நடைபெற்ற யுத்தங்களுக்கே பயன்பட்டன. இவரால் பலன் பெற்ற குறைஷித் தலைவர்களின் புகழ்ச்சியும் பாராட்டும் மட்டுமே இவருக்குக் கிடைத்தது. அரேபிய தீபகற்பத்தில் எல்லைகளைத் தாண்டிடவில்லை இவரின் பேர்.

இஸ்லாத்தைத் தழுவினார். பெரு மானாரின் பாசறையில் பண்பட்டார். ‘இறை வனின் வாள்’ என்ற பேரோடு பிரகாசித்தார். எதிரே வரும் எதிரிகளை ஒருவர் விடாமல் வேட்டையாடினார். ரோமப் பேரரசின் அதிகார வரம்புக்குள் இடியாய் இறங்கினார். வரலாற்றில் நிலைத்த புகழை தனக்கென பெற்றுக் காட்டினார்.

‘அபூஉபைதா நல்லவர்’ என்ற நம்பகத் தன்மையை அனைவரிடமும் பெற்றவர். மென்மையானவர் என்றே பேர் பெற்றி ருந்தார்.

ஆனால், நபி (ஸல்) அவர்களின் வளர்ப்பில், வார்ப்பில் ஏற்றம் பெற்றார். முஸ்லிம் ராணுவ அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். மாபெரும் தளபதி எனப் பெயர் பெற்றார். ‘என்னைப் பார். என் வனப்பைப் பார்; செழிப்பைப் பார்’ எனச் சொல்லிடும் வண்ணம் வீற்றிருந்த சிரியா (ஷாம்) எனும் வளமான நாட்டிலிருந்து அதன் ஆட்சியாளர் ஹிர்கலை விரட்டினார்.

அங்கிருந்து வெளியேறும் போது ஹிர்கல் இப்படிச் சொன்னார்: ‘சிரியாவே! நீ வாழ்க! உன்னை இனி நான் சந்திக்கவே முடியாது. நீ வாழ்க!’

இப்படி பன்னெடுங்காலம் அதனை ஆண்ட ஹிர்கலை நிரந்தரமாக அப்புறப் படுத்தினார் முன்னொரு காலத்தில் மென்மையின் மறுபெயராய் விளங்கிய அபூஉபைதா.

**அம்ரு பின் ஆஸ் :** குறைஷியரிலுள்ள புத்திசாலிகளுள் ஒருவர். மக்காவில் குறைஷி களின் கொட்டம் தாங்கமுடியாமல் ஹபஷா என்ற அபிசீனியாவுக்கு (இன்றைய எத்தியோப்பியாவுக்கு) தியாகப் பயணம் மேற்கொண்ட முஸ்லிம்களை மீண்டும் மக்காவுக்கு இழுத்து வந்திட குறைஷிகள் இவரைத்தான் அனுப்பி வைத்திருந்தார்கள். அங்கு தோல்வியுற்று தொங்கிய முகத்துடன் திரும்பினார். (இப்படியொரு சிறு வெற்றியைக் கூடப் பெற முடியாத இவர், முஸ்லிமான) பின்னர் எகிப்து நாட்டையே வீழ்த்தி வெற்றி கண்டார். அவருடைய பேர் சொல்லும் வெற்றியானது அது.

**ஸஅத் பின் அபீவக்காஸ் :** இஸ்லாத்துக்கு முந்தைய அரேபிய வரலாற்றில் இவரின் பெயரைக் கூடக் கேட்க முடியவில்லை. படைத்தலைவரோ அணியின் தளபதியோ யாராகவும் இவர் இல்லை.

**சல்மான் அல் பார்சீ :** இவர் பாரசீக நாட்டின் குக்கிராமங்களுள் ஒன்றில் மூபதானின் பிள்ளையாக இருந்தவர். ஒருவர் பின் ஒருவராக பலரின் கைகளில் அடிமை யாக இருந்தவர். தம் வாழ்வில் சிரமங் களையும் சங்கடங்களையும் மட்டுமே கண்டவர். இஸ்லாத்தை ஏற்றிடும் முன்னர் பாரசீகத்தின் ஒரு சாதாரண குடிமகனாக இருந்த இவர், இஸ்லாத்தை ஏற்ற பின்னர், பாரசீகப் பேரரசின் தலைநகரத்துக்கே ஆளுநராகி விட்டார் என்பது ஆச்சர்ய மல்லவா?

இதை விட ஒரு பேரற்புதம் என்னவென்றால், இந்தப் பதவி அவரின் எளிமையில் உலகப் பற்றின்மையில் சில சலனத்தைக் கூட ஏற்படுத்தவில்லை. ஒரு சுமைதூக்கும் தொழிலாளி போல எளிய கூடாரத்தில் வாழ்ந்தார் இந்த ஆளுநர். இந்த அதிசயத்தை அம்மக்கள் கண்டனர்.

**பிலால் :** நிறவெறி பிடித்த அரபுலகில் கருத்த மேனிக்காரர். அடிமையாக இருந்தவர். முஸ்லிமான பின்னர் ஏற்றம் பெற்றார். சிறப்பு பெற்றார். 'இவர் எம் தலைவர்' என்று உமர் (ரலி) அவர்களே பட்டம் சூட்டுமளவுக்குப் புகழ் எய்தினார்.

**ஸாலிம்:** இவர் அபூஹுதைஃபா (ரலி)வின் அடிமையாக இருந்து பின்னர் விடுதலை பெற்றவர். இவர் 'இஸ்லாமிய அரசையே வழிநடத்திச் சென்றிடும் எல்லாத் தகுதிகளையும் ஒருங்கே பெற்றவர்' என்று உமர் (ரலி) அவர்கள் கருதினார்கள். 'ஸாலிம் இப்போது உயிருடன் இருந்திருந்தால் அவரையே நான் கலீஃபாவாக (இஸ்லாமிய அரசின் தலைவராக) தேர்ந்தெடுப்பேன்' என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

**ஸைத் பின் ஹாரிஸா :** (ஒரு காலத்தில் அடிமையாக இருந்தவர்) பின்னர் இவர் ஜஅஃபர் பின் அபீதாலிப் (ரலி), காலித் பின் வலீத் (ரலி) ஆகிய தீரர்களை சிப்பாய்களாய்க் கொண்ட ஒரு ராணுவ அணிக்குத் தலைமையேற்றுச் சென்றார். அந்தப் படை மூத்தா நகர் நோக்கிச் சென்றது.

**உஸாமா :** இவர் ஸைத் பின் ஹாரிஸா (ரலி)வின் மகன். இவரோ, அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) உள்ளிட்ட பேராண்மை மிக்க ஆளுமைகளுக்கே தலைமையேற்றார் ஒரு போர்ப் பயணத்தில்.

இவர்கள் மட்டுமா? அபூதர், மிக்தாத், அபுத்தர்தா, அம்மார் பின் யாசிர், முஆத் பின் ஜபல், உபய் பின் கஅப், (அனைவர் மீதும் இறைதிருப்தி நிலவுமாக) இவர்களையெல்லாம் இஸ்லாத்தின் தென்றல் தழுவிச் சென்றது. இதனால் இவர்கள் வரலாற்றில் வரையிட்டுக் காட்டத்தக்க துறவிகளானார்கள். பேரறிஞர்களானார்கள். அலீபின் அபீதாலிப் ஆயிஷா, அப்துல்லாஹ் பின் மஸ்வூது, ஸைத் பின் ஸாபித், அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (அனைவர் மீதும் இறைதிருப்தி நிலவுமாக) இவர்களனைவரும் உம்மி நபி (எழுதப்படிக்கக் கற்காத இறைத் தூதர்)யின் பராமரிப்பில் ஆளாகி சர்வதேச அறிஞர்களானார்கள்.

உலகம் இவர்களுக்குத் தேவையில்லை. உலகத்துக்கு இவர்கள் தேவைப்பட்டார்கள். நாகரிகம், அரசமைப்பு என்றால் என்ன வென்றே அறிந்திருக்காத அந்தத் தலைமுறை, தலைசிறந்த நாகரிகத்தையும் தலைசிறந்த அரசையும் தந்தது. இந்தப் பென்னம் பெரும் பணியைச் சாதித்துக் காட்டிட வேறு எந்த சமுதாயத் திடமிருந்தும் ஒரு மனிதனைக்கூட இரவலாகக் கேட்டிடவில்லை.

இவர்களிடமிருந்து கல்வி நீரூற்றாய் வெளிப்போந்தது, இவர்களின் நாவுகளில் தத்துவங்கள் புழங்கின. தூய இதயம், ஆழமான கல்வி, எளிய ஆடம்பரமற்ற சேவை என வாழ்ந்து காட்டினார்கள். இவர்கள் பேசத் தொடங்கினால் காலம் காது தாழ்த்தி வாய் மூடிக் கேட்கும். இவர்கள் உரை நிகழ்த்தினால் வரலாற்றின் எழுது கோல் அதைப் பதிவு செய்திடும் அப்படிப் பட்ட மாமேதைகள் இவர்கள்.

### உலகைப் புரட்டிய திறமையாளர்களின் அணி

சமகால சமுதாயத்தவரால் மதிக்கப் படாமலும் அற்பமான கச்சாப் பொருளாகவும் அண்டை நாடுகளின் கேலிப் பொருளாகவும் இருந்த அந்தத் தலைமுறை சில காலத்திலேயே மனிதகுல வரலாறு கண்டிராத மாண்புக்குரிய சமுதாயமாக மாறியது. அழகும் திறமையும் மிக்கவர்களாயினர்.

மழையின் தொடக்கம் நல்லதா? இறுதி நல்லதா? வளையத்தில் எந்தப் பகுதியில் ஓரம் உள்ளது? என்பதையெல்லாம் எப்படி அறிந்திட முடியாதோ அதுபோல (யார் சிறந்தவர் எனச் சொல்லிட முடியாதபடி) மனித இனத்தின் எல்லாத் திறமைகளையும்

முழுமையாகக் கொண்ட மனிதர்கள் அந்தத் தலைமுறையில் இருந்தார்கள்.

உலகம் இவர்களுக்குத் தேவையில்லை. உலகத்துக்கு இவர்கள் தேவைப்பட்டார்கள்.

நாகரிகம், அரசமைப்பு என்றால் என்ன வென்றே அறிந்திருக்காத அந்தத் தலைமுறை, தலைசிறந்த நாகரிகத்தையும் தலைசிறந்த அரசையும் தந்தது.

இந்தப் பென்னம் பெரும் பணியைச் சாதித்துக் காட்டிட வேறு எந்த சமுதாயத் திடமிருந்தும் ஒரு (திறமைசாலியைக்கூட) மனிதனைக்கூட இரவலாகக் கேட்டிட வில்லை. எந்த அரசிடமும் உதவிகளைக் கேட்டிடவில்லை.

வெளி உதவிகள் ஏதுமின்றி அப்போ தைய உலகின் இரு பெரும் கண்டங்களான ஆசியா, ஆப்பிரிக்காவின் நீண்டு பரந்த நிலப்பரப்பில் பெரியதோர் அரசை நிறுவி னார்கள்.

அமானிதம், வலிமை, மார்க்கப் பற்று, ஆளுமைத்திறன் இவற்றை ஒருங்கே பெற்ற மனிதனுடைய எல்லா ஓட்டைகளும் அடைக் கப்பட்டன. ஆதரவற்றவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்தது அந்த அரசு.

இந்த மாபெரும் அரசை அந்தத் தலைமுறை எக்குக் கறை கட்டிக் காத்தது.

போர், தற்காப்பு, நேருக்கு நேர் யுத்தம், எதிர்த்தாக்குதல் என வாழ்ந்து கொண்டே அந்தத் தலைமுறை அந்த அரசைப் பாது காத்தது. அரசமைப்பைப் புதிதாய்ப் பெற்ற அவர்களை அவர்களிலிருந்தே ஒருவர் வழிநடத்தினார்.

அந்தத் தலைவர் நீதியாளராக - நேர்மை மிக்கவராக - அரசின் கருவூலக் காவலராக பாரபட்சமற்ற நீதிவழங்குபவராக - இறை வழிபாட்டில் பிறழாமல் மக்களை வழி நடத்துபவராக - ஒழுக்கம் மிக்கவராக - இறையச்சமுள்ள படைவீரராகத் திகழ்ந்தார்.

இடையறாத பண்பாட்டுப் பயிற்சி யாலும் நிலையான இஸ்லாமியப் பிரச்சாரப் பணியாலும் அந்த அரசு வற்றாத ஊற்றாக, முற்றுப் பெறாத புதையலாகத் திகழ்ந்தது.

தம் குடிமக்கள் மீது வரிச் சுமை ஏற்றாமல் நேர்வழிக்கு அவர்களை உந்தி இழுத்த அந்த அரசு, திறமையும் மேன்மையும் மிக்க மேன் மக்களையே இந்த அரசு சார்ந் திருந்தது. இதனால் இஸ்லாமிய நாகரிகம் அதன் சரியான வடிவத்தில் புறப்பட்டது. இங்கிருந்து மனித வரலாற்றில் என்று மில்லாத அளவுக்கு மனித வாழ்வு அதன் நல்ல அம்சங்களுடன் வெளிப்பட்டது.

பூட்டிக் கிடந்த மனித சுபாவங்களை - அதன் திறமைகளை தன் நபித்துவத் திறவு கோல் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் திறந்தார்கள்.

அந்த மனிதர்களிடமிருந்து அதிசயங் களும் புதையல்களும் கிடைத்தன. அஞ்ஞான சித்தாந்தம் அழிந்தும் மூடியும் வைத்திருந்த அற்புதங்களெல்லாம் ஒவ்வொன்றாய் கிளம்பி வந்தன.

அல்லாஹ்வின் பேருதவியால் உலகம் புதிய திசையில் பயணத்தைத் தொடங்கியது. சீலர்களைக் கொண்ட தலைமுறையும் காலமும் கிடைத்தது.

இதுவே, இஸ்லாமிய காலகட்டம். வரலாற்றின் முகத்தில் பளிச்செனத் தெரிந்து கொண்டேயிருக்கும் இந்தப் புது மலர்ச்சி உருவான காலம்.

தொடரும்....

**தமிழ்வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

■

தமிழன்

**தமிழன் தொலைக்காட்சியில்**

**தரீக்குல் குர்ஆன்**

**வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர்**

**மௌலவி இல்யாஸ் ரியாஜி**

**திருக்குர்ஆன் விரிவுரை நிகழ்த்துகிறார்.**

**வாரந்தோறும் செவ்வாய்க் கிழமை**
**இரவு 10 மணி முதல் 10.30 வரை**
**தமிழன் தொலைக்காட்சியில்**
**ஒளிபரப்பாகிறது.**


**காணத் தவறாதீர்கள்.**

**தொடர்புக்கு : 98418 98044**
**காயல் தர்வேஷ்**

எது முதலில்?

# கல்வித்திட்டத்தில் காலத்திற்கேற்ற மாற்றம் தேவை

தொடர் – 19



டாக்டர் யூசுப் அல் கர்ளாவி

**இன்றைய** காலகட்டத்தில் மிக அவசியமான சீர்திருத்தங்களுள் ஒன்று முஸ்லிம்களின் கலாச்சாரத்திலும் மார்க்கக் கல்வி பாடத் திட்டங்களிலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம்.

எதை முதலில் கற்க வேண்டும், எதை பிறகு கற்க வேண்டும், எதைக் கற்கவே தேவையில்லை என்பதை நாம் அறிந்திட வேண்டும்.

மார்க்கக் கல்வி நிலையங்கள் இஸ்லாமியக் கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் இவற்றில் சில பாடங்கள் முழு மூச்சோடு கொடுக்கப்படுகின்றன. மாணவர்களின் கல்விக் காலங்களில் பெரும் நேரங்களும் பெரும் முயற்சிகளும் அதற்காகச் செலவிடப்படுகின்றன. அதில் பாதியோ கால்வாசியோ கூட மாணவர்களுடைய உலக, மார்க்க விஷயங்களுக்குப் பயன்படும் வழியில் செலவிடப்படுவதே சரியானது. காலத்துக்குகந்தது.

நான் நினைத்துப் பார்க்கிறேன். அறிஞர் ‘ஈஜீ’ அவர்கள் எழுதிய/ அறிஞர் ஜுர்ஜானீ அவர்கள் விரிவுரை எழுதியுள்ள நூல் ‘அல்மவாகிஃப்’ நாங்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது இந் நூலின் சில பக்கங்களை மட்டுமே கற்றிருக்கிறோம். இயற்பியல் பாடத்தில் ஒரு சில பகுதிகளைக் கூட முடித்ததில்லை. முன்னுரைகளோடு முடிந்த நூல்களும் உண்டு.

இந்நூல்களை விளங்கிடவும் அதன் கருத்துக்களை உள்வாங்கிடவும் நாங்கள் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். எங்களின் ஆசிரியர்களோ அந்நூலின் ஆழமான விஷயங்களையம் வார்த்தைகளின் பொருள்களையும் புரிய வைத்திட பெரும் பாடுபடுவார்கள்.

இதற்காக நாங்கள் பட்ட சிரமங்களையெல்லாம் நிகழ்காலத் தத்துவங்களை ஆராய்ந்து அவற்றுக்கு அறிவார்த்தமான பதிலைத் தந்திட முயன்றிருந்தால் அது பயன்மிக்கதாக இருந்திருக்கும். அல்லது இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களை ஆராய்ந்து அதற்கு முதுபெரும் இமாம்கள் தந்துள்ள விளக்கங்களை அறிந்திருந்தாலோ அல்லது இஸ்லாத்தில் புதுமையைப் புகுத்திட முயலும் கல்வி நிலையங்களின் சிந்தனைகளையும் அவற்றின் கருத்துக்களையும் அறிந்திட முயன்றிருந்தாலோ அதனால் ஏராளமான நன்மைகளையும் மிகுந்த பயன்களையும் பெற்றிருக்க முடியும்.

எனவே, இஸ்லாமிய கல்வி நிலையங்களிலும் பல்கலைக் கழகங்களிலுமுள்ள பாடத்திட்டங்களில் குறை இருக்கிறது.

‘இல்முல் கலாம்’ எனும் தர்க்க சாஸ்திரம் இன்னும் பழைய பாணியிலேயே போதிக்கப்படுகிறது. அதற்கு புத்துயிரூட்ட வேண்டும். மனிதனின் அறிவோடும் இதயத்தோடும் உரையாடுகின்ற குர்ஆனின் இயல்பான மொழிநடையில் அது புத்தாக்கம் செய்யப்பட வேண்டும். கிரேக்கத் தத்துவத்தின் பாணியில் அது போதிக்கப்படக் கூடாது.

‘கிரேக்க பாணியை விட குர்ஆனின் பாணிக்கு முதலிடம் தர வேண்டும்’ என்றொரு நூலே எழுதியுள்ளார் இமாம் இப்னுல் வசீர் (ரஹ்) அவர்கள்.

இப்போதுள்ள கல்வி, கலாச்சாரம் இவற்றுடன் குழைத்து புவியெங்கும் பரவிக் கிடக்கும் சான்றுகள், ஆதாரங்கள் இவற்றை வைத்து நம் ஈமானை வலிமைப்படுத்திடும் அசத்தியக் கோட்பாட்டை வேரறுக்கும் வகையிலும் தர்க்க சாஸ்திரம் புதுவடிவம்

பெற வேண்டும். இதுவே மாணவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டுமேயல்லாமல் கிரேக்க பாணி தர்க்க சாஸ்திரம் அல்ல.

"அறிவு ஈமானை நோக்கியே அழைக் கிறது." விஞ்ஞான யுகத்திலும் அல்லாஹ்வே பிரகாசிக்கிறான். "வானத்தில் அல்லாஹ் வுடன்" "நவீன கல்வியும் அல்லாஹ்வும்" முதலிய நூல்கள் இந்த பாணியில் வந்துள்ள பிரபல நூல்களாகும். இவை போன்ற நூல்கள் பாடத்திட்டத்தில் வைக்கப்பட வேண்டும்.

இது போலவே 'ஃபிக்ஹ்' எனும் இஸ்லாமிய சட்டக்கலை. இதை எளிது படுத்திட வேண்டிய தேவை ஏற்பட்டிருக் கிறது. இதைப் புதிய வடிவத்துக்கு உட்படுத்த வேண்டியிருக்கின்றது. இக்கால மக்களுக்குத் தேவைப்படும் ஆராய்ச்சிகளை அதில் செய்ய வேண்டும்.

கம்பெனிகள், பணப் பரிவர்த்தனை, வங்கிச் செயல்பாடுகள், புதிய ஒப்பந்தங்கள், புதிய சர்வதேச உடன்படிக்கைகள் இவற்றில் எழும் பிரச்னைகளுக்கு இஸ்லாமிய சட்டத்தீர்வு வேண்டும்.

நாணயம் (தங்கம், வெள்ளி நாண யங்கள்) முகத்தல் அளவு, நிறுத்தல் அளவு, நீளம் இவற்றைக் குறித்திட இஸ்லாமிய சட்ட நூல்களில் காணப்படும் கலைச் சொற் களுக்கு சரியான விளக்கம் வேண்டும். இக்கால மொழிவழக்கில் அவற்றை எப்படி கணக்கிடுவது என்று சொல்ல வேண்டும். (திர்ஹம், தீனார் இவற்றின் இன்றைய மதிப்பு என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.)

இஃதன்றி வெகுஜன முஸ்லிம்களிடம் வந்து சேருகின்ற கலை, கலாச்சாரம் இவற் றையும் நாம் சற்று ஏறிட்டுப் பார்க்க வேண்டும். அவற்றைத் தரம் பிரிப்பதும் வகைப்படுத்திப் பார்ப்பதும் அவசியமாகிறது.

பல்வேறு வகைப்பட்ட கலைகளையும் கலாச்சாரங்களையும் அறிந்தவர்கள் தேட வேண்டிய கலைகளும் உண்டு. விவசாயிகள், பணியாளர்கள் தரத்திலிருப்பவர்கள் தேட வேண்டிய கலை, கலாச்சாரங்களும் உண்டு. எல்லாக் கலைகளும் கலாச்சாரங்களும் கல்விகளும் ஒரே தரத்திலுள்ளவை என்று கூற முடியாது. (கல்வித்துறையில் புதிய புதிய கலைகள் அறிமுகமாகி வரும் காலம் இது. எனவே, இது குறித்தும் நாம் கவனம் செலுத்திட வேண்டும்.)

பெரும்பாலான பேச்சாளர்கள் பேரா சிரியர்கள் பன்னூலாசிரியர்கள் மக்க ளுடைய மூளைகளை மார்க்கத்தின் தகவல்கள் (என்கிற பெயரால்) சிலவற்றைக் கொண்டு நிரப்புகின்றனர். திரும்பத் திரும்ப அவற்றைச் சொல்லி மக்களின் மனங்களில் பதிய வைக்கின்றனர். அவர்கள் கூறுபவை எதுவும் இறை வேதமாம் திருக்குர்ஆனிலோ ஆதாரப் பூர்வமான நபிமொழிகளிலோ இல்லாதவை. திருக்குர்ஆன் விரிவுரைகளிலுள்ள இஸ்ரா யீலின் அறிவிப்புகளையும் பலவீனமான இட்டுக்கட்டப்பட்ட ஆதாரமற்ற ஹதீஸ் களையுமே கூறுகின்றனர்.

(இஸ்ராயீலின் அறிவிப்புகள்: நபிமார்கள், முன்னோர்கள் பற்றி இஸ்ரவேலர்கள் வழியாக நமக்குக் கிடைக்கும் தகவல்கள். இவை நம்பகத்தன்மையற்றவை என்பதால் அவற்றால் குர்ஆன் - ஹதீஸ் வழியாக உறுதி செய்யப்பட்டவைகளையே நாம் நம்ப வேண்டும். மொ-ர்.)

அவ்வாறான தகவல்களை நாம் தரம் பிரித்துப் பார்த்திட வேண்டும்.

இது போல ஹக்கீகத், ஷரீஅத் (இவற்றுக்கிடையே வேறுபாடு உண்டு எனும்) பற்றிய பேச்சுகள், 'அல்ஹக்கீக் கத்துல் முஹம்மதிய்யா' என்றொரு (புதிய வழி பற்றிய) கருத்தாக்கம், அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்திலும் முதன் முதலாக நபி (ஸல்) அவர்களே படைக்கப்பட்டார்கள் என்பது வலிமார்கள் (இறைநேசர்கள்) பற்றியும் அவர்கள் காட்டும் (கராமத் எனும்) அற்புதங்கள் பற்றியும் ஆதாரங்களில்லாத அறிவுக்கு ஒவ்வாத நம்ப முடியாதவற்றைப் பேசுவதும் ஆராயப்பட வேண்டியதே.

இது போல சிலர் மத்ஹபுகளுக் கிடையேயுள்ள கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்னைகளையே பேசிக் கொண்டிருக் கின்றனர். எதுவரை எந்த அளவுக்கு இது பற்றிப் பேசலாம் என்பதையும் நாம் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

சிலர், சூஃபிகள் அனைவருடனும் எல்லா சூஃபிஸத்துடனும் மோதுவதே தமக்கு முழுநேர வேலை என்று காட்டிக் கொள்கின்றனர். உண்மை என்னவென்றால் சூஃபிகளில் 'சுன்னத்தை'ப் பேணி நடக்கும் நல்லவர்களும் நேர்மையானவர்களும் உள்ளனர். தவறான வழியில் செல்லும் 'பித்அத்'காரர்களும் உள்ளனர். எனவே, எதையும் கண்மூடித்தனமாக முடிவு

செய்யாமல் தரம் பிரிப்பதும் சரியானதைக் கண்டறிவதும் இப்போதைய கடமை.

**சரியான அளவுகோல் குர்ஆன்தான்**

எந்தப் பணியை முன்னுரிமை தந்து நிறைவேற்ற வேண்டும்? எதை முதலில் செய்ய வேண்டும்? எதைத் தாமதமாகச் செய்ய வேண்டும்? எதைவிட எதற்கு முன்னுரிமை தர வேண்டும்? என்பதையெல்லாம் திருக் குர்ஆனை அளவுகோலாகக் கொண்டே நாம் முடிவு செய்திட வேண்டும்.

எந்தப் பணிகளுக்கு குர்ஆன் அதீத முக்கியத்துவம் தருகிறதோ, பல அத்தியாயங் களிலும் பல வசனங்களிலும் எந்தக் கட்டளைகளை வலியுறுத்துகிறதோ, எந்தத் தடைகளை உறுதிபடத் தெரிவிக்கிறதோ, எதை எச்சரிக்கிறதோ, எந்த நற்செயலுக்கு நன்மைகள் உண்டு என வாக்குறுதி அளிக் கிறதோ அவற்றுக்கே நாம் முன்னுரிமை தர வேண்டும்.

நம் வாழ்விலும், நம் சிந்தனையிலும், நம் திட்டமிடலிலும், நம் செயல்பாட்டிலும் அவற்றையே முதன்மைப்படுத்திட வேண்டும்.

ஏகத்துவம், ரிசாலத் எனும் இறைத்தூது இவற்றை நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் பலன்களை ஏற்க மறுப்பதால் விளையும் தீமைகள் சுவர்க்கம், நரகம் ஆகியவை நாம் நம்ப வேண்டியவை; முக்கியமானவை.

தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ், இறைத்துதி, இறைவனைப் புகழ்ந்தேற்றுதல், பாவமன்னிப்பு, பாவமீட்சி, இறைவனையே முழுக்க முழுக்கச் சார்ந்திருத்தல், இறை யன்புக்கு ஏங்குதல், இறைவனின் கோபத் துக்கு அஞ்சுதல், இறையருளுக்கு நன்றி செலுத்துதல், இறைவன் தரும் சோதனையை நிலைகுலையாமல் எதிர்கொள்ளுதல் முதலிய அகம் சார்ந்த, புறம் சார்ந்த வணக்க வழிபாடுகளே முதன்மையானவை.

வாய்மை, அமானிதம், வரம்பு மீறாமை, கற்பெருக்கம், நாணம், தன்னடக்கம், ஈகை, எளியோர்க்கு இரங்குதல், அண்டை வீட்டாரின் உரிமைகளை நிறைவேற்றுதல், ஏழைகள், அநாதைகள் வழிப்போக்கர்கள் ஆகியோருக்கு உதவிகள் செய்தல், இறை நம்பிக்கையாளர்களிடம் மென்மையாகவும் இறைமறுப்பாளர்களிடம் கடுமையாகவும் இருத்தல். இவை நாம் முதன்மைப்படுத்த வேண்டிய நற்பண்புகள், பண்பாடுகள், ஒழுக்கங்கள்.

நபி (ஸல்) அவர்கள் பிறந்த சம்பவம் குறித்து குர்ஆனில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, இஸ்லாமிய வாழ்வில் இதற்கோர் அதீத முக்கியத்துவம் இல்லை என்பதையே இது காட்டுகிறது. ஈஸா (அலை) அவர்களின் பிறப்பிலிருப்பதைப் போன்ற அற்புதம் இதில் இல்லை. நபி (ஸல்) அவர்கள் பிறந்த சம்பவத்தை முன்னிட்டு முஸ்லிம்கள் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று மார்க்கம் வலியுறுத்தவும் இல்லை.

இறைவேதமாம் திருக்குர்ஆன் எவற்றை அவ்வளவாக முக்கியத்துவம் தந்து கூற வில்லையோ அவற்றுக்கு நாம் அளவற்ற முக்கியத்துவம் தரத் தேவையில்லை.

அதியற்புதமான ‘மிராஜ்’ எனும் விண் ணுலகப் பயணத்துக்கு முன் மக்காவிலுள்ள கஅபாவிலிருந்து ஃபலஸ்தீனிலுள்ள ‘அல்மஸ்ஜிதுல் அக்ஸா’ வரை ஒரு இரவின் ஒரு சிறு பகுதியில் நபி மேற்கொண்ட ‘இஸ்ரா’ என்ற தரைவழிப் பயணம் பற்றி திருக்குர்ஆனில் ஒரே ஒரு (17:1) வசனம் மட்டுமே உள்ளது. ஆனால், போர்கள் குறித்து முழுமையாகப் பேசிடும் பல அத்தி யாயங்கள் குர்ஆனில் உள்ளன என்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் பிறந்த சம்பவம் குறித்து குர்ஆனில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, இஸ்லாமிய வாழ்வில் இதற்கோர் அதீத முக்கியத்துவம் இல்லை என்பதையே இது காட்டுகிறது. ஈஸா (அலை) அவர்களின் பிறப்பிலிருப்பதைப் போன்ற அற்புதம் இதில் இல்லை. நபி (ஸல்) அவர்கள் பிறந்த

சம்பவத்தை முன்னிட்டு முஸ்லிம்கள் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று மார்க்கம் வலியுறுத்தவும் இல்லை. அது விரும்பத்தக் செயல் என்று கூறவும் இல்லை.

எனவே, குர்ஆன்தான் சரியான, குறை களற்ற அளவுகோல். ஏனெனில், அதுவே மார்க்கத்தின் அடிப்படை. இஸ்லாத்தின் ஊற்றுக் கண். இதை விளக்கிடவும் விவரிக் கவுமே நபிவழி வந்தது.

*அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக இந்த குர்ஆன் மிக்க நேரான வழியைக் காட்டுகிறது.(17:9)*

*நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும், தெளிவுமுள்ள (திருக்குர்ஆன் என்னும்) வேதமும் உங்களிடம் வந்திருக் கின்றது. அல்லாஹ் இதைக் கொண்டு அவனது திருப்பொருத்தத்தைப் பின்பற்றக் கூடிய அனைவரையும் பாதுகாப்புள்ள நேர்வழிகளில் செலுத்துகிறான்; இன்னும் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி, தன் நாட்டப்படி ஒளியின் பக்கம் செலுத்து கிறான். மேலும் அவர்களை நேரான வழியின் பக்கம் செலுத்துகிறான்.(5:15-16)*

*(நபியே) உம்மீது நாம் இவ்வேதத்தை இறக்கி வைத்தோம். இது எல்லாவற்றையும் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் நேர்வழி காட்டக்கூடியதாகவும் முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் இருக்கிறது.(16:89)*

இறைவேதமாம் குர்ஆன் எல்லா வற்றையும் தெளிவுபடுத்துவதால் அதனையே நாம் அளவுகோலாகக் கொள்ள வேண்டும்.


இஸ்லாமிய வாழ்வுக்குத் தேவையான அனைத்து அடிப்படை விதிகளையும் குர்ஆன் கூறியுள்ளது. மார்க்கம் நிலைபெறத் தேவையான அனைத்தும் அதில் உள்ளது. ஒன்று நேரடியாக இருக்கும் இல்லையெனில் நாம் ஆராய்ந்து தெரிந்திட முடியும்.

நபி (ஸல்) அவர்களுக்குப் பின் இஸ்லாமிய அரசை வழிநடத்தும் பொறுப்பை ஏற்ற முதல் கலீஃபா, மாமனிதர் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறி னார்கள்: *'என் ஒட்டகத்தைக் கட்டும் கயிறு தொலைந்து போனாலும் அதையும் நான் இறைவேதத்தில் பெற்றுக் கொள்வேன்.'*

இப்படி எல்லாம் கிடைக்கும் இறை வேதத்தின் ஒளியில் நாம் நன்மை - தீமைகளை சீர்தூக்கிப் பார்ப்போம். அவற்றுள் 'எது முதலில்?' எனக் கண்டறி வோம்.

தொடரும்.....

**தமிழ் வடிவம்: இல்யாஸ் ரியாஜி**


# கர்கரேயைக் கொலை செய்தது யார்?

இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்

**ஆசிரியர் : S.M.முஷ்ரிப்**

முன்னாள் DIG - மகாராஷ்டிரா.

**பக்கங்கள் 428 - விலை ரூ. 250**

**வெளியீடு: வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி,**
**கோனிகா பில்டிங் 4 வது தளம், சென்னை -1. செல்: 81481 29887**

இந்தியாவில் ஓர் இராணுவப் புரட்சி மூலம் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவித்திட வேண்டும். இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசையும் தூக்கிவிட வேண்டும் என்ற இந்துத்துவ தீவிரவாதிகளின் திட்டத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தார். நேர்மையான மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே! இதனால்தான் அவர் கொலை செய்யப்பட்டார். அது எப்படி? ஏன் என்பதை விளக்கும் நூல். ஒவ்வொரு குடிமகனும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

## டெல்லி உயர்நீதிமன்ற குண்டுவெடிப்பு - செப். 7, 2011

# கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் விடுதலை

**செப்.7, 2011-இல்** டெல்லி உயர்நீதி மன்றத்தின் நுழைவாயில் 5-க்குப் பக்கத்தில் குண்டுகள் வெடித்தன.

உடனேயே இந்தியன் முஜாஹிதீன்கள் என்ற அமைப்பின் பெயர் முன்மொழியப் பட்டது.

டெல்லியிலுள்ள சிறப்புக் காவல் பிரிவு Special Cell of Delhi Police தர்பான்கா, மது பாணி ஆகிய இடங்களிலிருந்து பத்து, பனிரெண்டு முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்தது.

எப்போதும் பீற்றப்படும் அமைப்பாகிய இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள்தாம் அத்தனை பேரும் எனவும் பீற்றப் பட்டது.

நமது ஊடகங்கள் இரவு பகலாக இந்த இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரை வியாபாரம் செய்தன. விளம்பரங்கள் வழி நல்ல வருமானம்.

பின்னர் இந்த வழக்கு NIA என்ற தேசிய புலனாய்வு முகவாண்மைக்கு மாற்றப் பட்டது.

பெப்ருவரி 2012இல் இந்த தேசிய புலனாய்வு முகவாண்மை அந்த 12 முஸ்லிம் இளைஞர்களையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியது. விசாரணையில் அவர்களுக்கும் டெல்லி உயர்நீதி மன்ற குண்டுவெடிப்புக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்பதைக் கண்டுபிடித்தார்கள். பின்னர் அந்த இளைஞர்களை ஒட்டுமொத்தமாக அந்தக் குண்டு வெடிப்பு வழக்குகளிலிருந்து விடுவித்தார்கள்.

ஆனால், இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டவுடன் இந்த இளைஞர் களெல்லாம் இந்திய முஜாஹிதீன்கள் என்பதை விற்பனை செய்த ஊடகங்கள், அந்த இளைஞர்கள் ஒட்டுமொத்தமாக விடுவிக்கப்பட்ட போது அதை ஒரு சாதாரண செய்தியாகக் கூடக் காட்டிடவில்லை; சொல்லவில்லை. மொத்தத்தில் அந்த இளைஞர்கள் விடுதலையானதைக் கண்டு கொள்ளவே இல்லை. காரணம், அவர்கள் ஏற்கனவே பரப்பிய பொய் அப்படியே நின்றிட வேண்டும் என விரும்பினார்கள்.

இப்போது வேறு ஆறுமுஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்து அவர்கள், ஹிஸ்புல் முஜாஹதீன் எனக் கூறுகிறார்கள்.

இந்த அப்பாவிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது தெரியவில்லை.

•


**இறைவனின் அழகிய வழிகாட்டுதல்**

**அனைவருக்கும்!**

மனிதன் இந்த உலகில்
எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**
52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி, அறை எண் 7,
மண்ணடி, சென்னை-1.

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு அல்ல.**

## நீலாங்கரை காவல் ஆய்வாளரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த

# தமீம் அன்சாரி பேசுகிறேன்

**நான்,** என் தாயார் மற்றும் சகோதரர் களுடன் சென்னை வெட்டு வாங்கண்ணியில் வசிக்கிறேன். என் அப்பா தவறிவிட்டார். என் அம்மாதான் சமையல் வேலை செய்து எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார்.


நான் கடந்த 7-1-2014 அன்று இரவு, வேலையிலிருந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த பொழுது ஏற்பட்ட சோர் வினால், இளைப்பாறுவதற்காக நீலாங் கரை பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது இரு காவலர்கள் என்னிடம் வந்து, கோயில் உண்டியல் திருட்டு விசயமாக உன்னிடம் விசாரிக்க வேண்டுமென்று என்னைப் பிடித்து சென்றனர்.

J8 நீலாங்கரை போலீஸ் நிலையம் சென்றபொழுது அங்கிருந்த காவல் ஆய்வாளர் புஷ்பராஜ், திருட்டு நாயே என்று தொடங்கி மிகவும் கெட்ட வார்த்தைகளால் என்னைத் திட்டினார். அப்பொழுது நான், எனக்கு இதில் எந்தத் தொடர்புமில்லை என்றும், கோயிலில் திருட்டு நடந்த விசயமே எனக்குத் தெரியாது என்றும் பல முறை மன்றாடியும் அவர் அதை சட்டை செய் யாமல் என்னை அடிக்கத் தொடங்கினார். நேரம் சென்றதும் இவன் இங்கிருக்கட்டும் பிறகு கவனித்துக் கொள்கிறேன் என்று கூறிச் சென்று விட்டார்.

பிறகு அவர் மதியம் போலீஸ் நிலையம் வந்தார். உள்ளே வரும் போதே இவன் ஒத்துக் கிட்டானா? என்று மற்ற போலீஸ்காரர் களிடம் கேட்டுக் கொண்டே என்னருகில் வந்தார். அவர்கள் இல்லையென்று சொன்ன வுடன், என்னை மீண்டும் அடிக்க ஆரம் பித்தார். அவருடன் மேலும் 5 போலீஸ் காரர்கள் சேர்ந்து கொண்டு, என் இரு கைகளையும் பின்புறமாக விலங்கிட்டு, கால்கள் இரண்டையும் கட்டி என்னைத் தலைகீழாகத் தொங்கவிட்டு சித்ரவதை செய்தார்கள்.

சிறிது நேரத்துக்குப் பின் கட்டுகளை யெல்லாம் அவிழ்த்துவிட்டு, என்னை அந்த ஆய்வாளர் அவர் முன் நிற்கச் சொன்னார். நான் நின்றபொழுது, அந்த ஆய்வாளர் அவருடைய கைத் துப்பாக்கியை எடுத்து என் வாயில் வைத்து என்னைக் கடுமையாகத் திட்டினார். பிறகு நீயெல்லாம் திருந்தமாட்டாய்; உன்னை நாங்கள் பிடித்து வந்தது யாருக்கும் தெரியாது. உன்னை சுட்டு விட்டு கடற்கரையில் போட்டாலும், யாரும் எங்களைக் கேட்க முடியாது. நீயெல்லாம் சாக வேண்டியவன்தான்டா என்று சொல்லிக் கொண்டே துப்பாக்கியின் விசையை அழுத்தினார்.

அந்த துப்பாக்கியில் தோட்டா இல்லா ததினால் ஒன்றும் ஆகவில்லை. அந்த நேரம் ஒரு போலீஸ்காரர் கையில் ஒரு பொட்டலம் கொண்டுவந்தார். உடனே அந்த ஆய்வாளர், அந்த போலீஸ்காரரிடம் இது என்ன என்று கேட்டுக் கொண்டே தன் துப்பாக்கிக்குத் தோட்டாவை நிரப்பினார். அதற்கு அந்த போலீஸ்காரர், இந்தத் திருடனுக்கு சாப்பாடு என்று சொன்னார். இதைக் கேட்ட அந்த ஆய்வாளர், சாகப் போகிறவனுக்கு எதற்கு சாப்பாடு? என்று சொல்லிக் கொண்டே தோட்டா நிரப்பிய அந்தத் துப்பாக்கியை என் வயிற்றிலும், நெஞ்சிலும் வைத்து இறுதி யாக என் கழுத்தில் வைத்து நீயெல்லாம் சாக வேண்டியவன்தான்டா என்று சொல்லிக்



கொண்டே என்னைச் சுட்டார். உடனே நான் மயங்கி விழுந்து விட்டேன். கண் விழித்துப் பார்க்கும் போது ஆஸ்பத்திரியில் இருந்தேன்.

இந்த விசயம் வெளியே தெரிந்தவுடன் முஸ்லிம் அமைப்புகள் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சாலை மறியல் செய்தனர். விசயம் பெரிதானவுடன் காவல் ஆணையாளர் உடனே துறை ரீதியான நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து அந்த ஆய்வாளர் புஷ்பராஜ்பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, தவறுதலாக காயம் விளை விப்பது என்னும் பிரிவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசும் கோட்டாட்சியர் விசா ரணைக்கு உத்தரவிட்டது. கோட்டாட்சியர் இந்திரஜித், காஞ்சிபுர மாவட்ட கலெக்டர் பாஸ்கரனிடம் தாக்கல் செய்த தனது ஆரம்பக்கட்ட விசாரணை அறிக்கையில், அந்த ஆய்வாளர் தனது அதிகார வரம்பை மீறியுள்ளதை உறுதி செய்துள்ளார்.

மேலும், 13-1-2014 அன்று தமிழக முதல்வர் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், “அந்தச் சிறுவன் தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் தகவ லறிந்து மிகவும் துயரமடைந்தேன். அந்தச் சிறுவனின் ஏழ்மையான குடும்பச் சூழலைக் கருத்தில் கொண்டு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 1 லட்சம் ரூபாய் வழங்குவதற்கும் உத்தரவிட்டுள்ளேன்” என்றும் கூறினார்.

இதுகுறித்து கருத்துக் கூறிய பொது மக்கள், “கோட்டாட்சியர் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, தவறுதலாக துப்பாக்கி வெடித்தது என்றும், அந்தச் சிறுவனின் ஏழ்மையான குடும்பச் சூழலைக் கருத்தில் கொண்டு’ என்றும் முதல்வர் அறிக்கையில் உள்ளது. இது “முதல்வரைப் பாராட்ட வேண்டும்” என்ற நமது எண் ணத்தை மாற்றிவிட்டது.

மேலும் அந்தப் பையனின் தாயார் இதுதொடர்பாக உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார். அந்த மனு நீதிபதிகள் எஸ்.ராஜேந்திரன் மற்றும் பி.என். பிரகாஸ் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அது தொடர்பாக அரசு தரப்பில் மற்றொரு நீலாங்கரை ஆய்வாளர் பாஸ்கர் 28-1-2014 அன்று ஒரு அறிக்கை தாக்கல் செய்தார். அதில் ஆய்வாளர் புஷ்பராஜ்தன் துப்பாக்கியை எடுத்து சுத்தம் செய்யும் போது அது தவறி கீழே விழுந்து படுத்து இளைப்பாறிக் கொண்டிருந்த தமீம் அன்சாரியின் மீது வெடித்து விட்டது என்று கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை 13-2-2014ம் தேதிக்கு தள்ளி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில் சில சமூக நல ஆர்வ லர்கள், குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு என்னும் மத்திய அமைப்பிடம் இந்த விசயத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்துள்ள சம்பவமாக கடந்த 5-2-2-2014 அன்று குழந்தைகள் நலக்




பத்திரிகையாளர் மன்றத்திலே, ‘அந்தச் சிறுவனுக்கு ரூபாய் 10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்; ஆய்வாளர் புஷ்பராஜ்மீது கொலை முயற்சி வழக்கு தொடர வேண்டும் மற்றும் இந்த விசயத்தை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி யினைக் கொண்டு விசாரிக்க வேண்டும்’ என்று 3 கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

குழு என்னும் மாநில அமைப்பு, 14-2-2014 அன்று மதியம் 3 மணிக்கு நேரில் விசாரணைக்கு வர வேண்டும் என்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள புஷ்பராஜுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இந்த விசாரணை உயர்நீதி மன்றத்தில் மீண்டும் 13ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, 31 நாட்கள் சிகிச்சையில் அந்த சிறுவன் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளான் என்றும், அவனை மருத்துவமனையிலிருந்து விடுவிக்கலாம் என்று மருத்துவர்கள் சான்று தந்துள்ளார்கள் என்றும், மருத்துவர்களின் அறிக்கையையும் அரசு தரப்பில் ஆய்வாளர் பாஸ்கர் தாக்கல் செய்தார். அதனைப் பரிசீலித்த நீதிமன்றம், சிறுவனை மருத்துவமனையிலிருந்து விடுவிக்கலாம். மேலும், ஆஸ்பத்திரியின் மொத்த செலவினங்களையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், அந்தச் சிறுவன் வெளி நோயாளியாக அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற விரும்பினால், அதன் செலவுகளை அந்தப் பையனே பொறுப்பேற்க வேண்டும் என்றும், ஆட்கொணர்வு மனுவிற்கான பதிலை அரசு தரப்பில் மார்ச் 4ஆம் தேதிக்கு முன்பு இந்த நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கூறி விசாரணையை மார்ச் 5ஆம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்கள்.

இந்நிலையில் மருத்துவமனையிலிருந்து வந்த சிறுவன், அவன் தாயார், மனித உரிமைப் போராளி மார்க்ஸ், வழக்கறிஞர் சங்கர சுப்பு, இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் பாக்கர் மற்றும் இந்திய தவ்ஹீத் ஜமாத் நிர்வாகிகள் பங்கெடுத்த பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்றை இந்திய தவ்ஹீத் ஜமாத் கடந்த 19ஆம் தேதி பத்திரிகையாளர் மன்றத்திலே ஏற்பாடு செய்தது. அதில், "அந்தச் சிறுவனுக்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். ஆய்வாளர் புஷ்பராஜ்மீது கொலை முயற்சி வழக்கு தொடர வேண்டும் மற்றும் இந்த விசயத்தை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி யினைக் கொண்டு விசாரிக்க வேண்டும்" என்று 3 கோரிக்கைகள் இந்திய தவ்ஹீத் ஜமாத் சார்பாக வைக்கப்பட்டது.

இதுகுறித்து கருத்துக் கூறிய சக பத்திரிகை நண்பரொருவர், "இறந்தாலே ரூபாய் 3 லட்சத்திற்கு மேல் கிடைக்காது. குழந்தைகள் நலக் குழு என்னும் மாநில அமைப்பே குற்றவியல் நீதிமன்ற நீதிபதிக்கு ஒப்பான அதிகாரம் கொண்ட அமைப்புதான் என்பதெல்லாம் இவர்களுக்குத் தெரியாதா? இந்தச் சிறுவன் விசயத்தில் இது போலெல்லாம் நடந்து கொள்ளாமல் குழந்தைகள் நலக் குழுவின் அறிக்கை மற்றும் கோட்டாட்சியர் விசாரணை அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, இவர்கள் நீதிக்காக நெடுந்தூரம் பயணிக்கலாம்" என்றார்.

■

## குமரி மாவட்ட சமுதாய ஊழியர் ஜீ.எம்.ஷா மரணம்

(23-11-1935 - 01-01-2014) (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்)

குமரி மாவட்டத்தில் மக்கள் பிரச்னைகளிலும் சிறுபான்மை முஸ்லிம்களின் பிரச்னைகளிலும் ஆர்வங்கொண்டு நீண்ட காலமாக சமூகப் பணியாற்றியவர் ஜீ.எம்.ஷா அவர்கள்.


குமரி மாவட்ட முஸ்லிம் ஜமாஅத் பெடரேஷன் உட்பட பல முக்கிய பதவிகளில் பணியாற்றியவர்.

குமரி மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னோடி செயல்வீரர். என்றாலும் சமுதாயப் பணியிலல் தொய்வின்றி ஆர்வம் காட்டியவர்.

அவர் தன் சொந்த ஊரான சூரங்குடியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பலப்பல.

இறைவன் அவர்களின் அவருடைய பாவங்களை மன்னிக்கவும் மறுவாழ்வில் சிறந்த வாழ்வைத் தந்திடவும் து செய்கின்றோம்!

# சிரியா : யர்முக் அகதிகள் முகாமில் முஸ்லிம்கள்




**சிரியா:** யர்முக் அகதிகள் முகாமில் உள்ள முஸ்லிம்கள் நாய், பூனை, கழுதை உண்டு உயிர்வாழ அனுமதி

1948ல் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினால், அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் அருகில் உள்ள முஸ்லிம் நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்த நாடுகளில் சிரியாவும் ஒன்று. சிரியாவில் 13 அகதிகள் முகாம்களில், 10 அரசு அனுமதியுடன் நடக்கிறது. யர்முக் முகாம் 1957ல் ஏற்படுத்தப்பட்டது. இது 2.11 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இது டெண்ட் இல்லாத நல்ல வீடுகள் கொண்டு கட்டப்பட்ட அகதிகள் முகாம் ஆகும். இங்கு பல படித்த டாக்டர்கள் இன்ஜினீயர்கள் மற்றும் அரசுத் துறையில் வேலை பார்ப்பவர்கள் தங்கியிருந்தனர். சிரியாவில் மார்ச் 2011-ல் உள்நாட்டுப் புரட்சி தொடங்கியது. 20 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் அகதிகளாயினர். பல லட்சம் மக்கள் அண்டை நாட்டிற்கு அகதிகளாகச் சென்றனர்.

யர்முக்கில் யுத்தம் டிசம்பர் 5, 2012 மூண்டது. இந்த முகாமில் பாலஸ்தீன விடுதலை முன்னணியினர் அரசுக்கு ஆதரவாகவும் லிவாஅல் அசிஃபா என்ற ஓர் அ மைப்பு அரசுக்கு எதிரான படையான சுதந்திர சிரிய ராணுவத்துக்கு (FSA) ஆதரவாகச் செயல்பட்டனர். இந்த யுத்தத்தில் பல உயிர்கள் கொல்லப்பட்டன. இதில் ஏராளமானோர் பொதுமக்கள். இம்முகாமை சிரியா, விமானப் படைகளைக் கொண்டு தாக்கியது. போர் தொடங்கி 48 மணி நேரத்தில் 1000 அகதிகள் பக்கத்து நாடான லெபனானுக்குச் சென்று விட்டனர். இம்முகாமை சுதந்திர சிரிய ராணுவம் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. இந்த யுத்தத்தில் அரசுக்கு ஆதரவான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் தங்கள் காயமடைந்த வீரர்களை முகாமை விட்டு வெளியேற்றக் கூட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

2011-ல் 1,80,000 ஆக இருந்த மக்கள் தற்போது 18,000 ஆக குறைந்து விட்டனர். கடந்த 6 மாத காலமாக ஆஸாதின் சிரிய ராணுவம் இம்முகாமை முற்றுகையிட்டிருக்கிறது. இவர்கள் முகாமுக்கு எந்தவித உணவு, உடை, மருந்து கிடைக்காமல் தடுத்துவிட்டனர். இம்மக்கள் பசியால் வாடுகின்றனர். கிட்டத்தட்ட 55 பேர் பட்டினியால் இறந்து விட்டனர். உணவு கிடைக்காததால் தங்கள் உயிரைப் பாது காக்க பூனை, நாய், கழுதை உண்டு உயிர் வாழலாம் என டமாஸ்கஸ் வெளியே உள்ள யர்முக் முகாம் இமாம் மார்க்கத் தீர்ப்பு (ஃபத்வா) கொடுத்துள்ளார். இவருடைய இந்த ஃபத்வா youtube மூலம் ஒளிபரப்பப்பட்டது. இந்தஃபத்வா பக்ரீத் பண்டிகை முடிந்து சில நாட்களுக்குப் பிறகு தரப்பட்டது. அக்டோபர் மாதம் நடுவில் 2013-ல் மேலும் இந்நிலை நீடித்தால், மனித மாமிசம் உண்ண ஃபத்வா கொடுக்கும் நிலை ஏற்படும் என்றும் இமாம் அவர்கள் கூறியதாக வேகடிவ் இணையதளம் கூறியது.


அல்காதிப் அல் யல்தானி கூறுகையில் தான் கடந்த 10 நாட்களாக வெறும் தண்ணீர் மட்டும் உண்டு வாழ்வதாகக் கூறினார். அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். பட்டினியைப் போக்கிக் கொள்ள மசாலா பொடி மற்றும் தண்ணீர் கலந்து குடிக்கின்றனர். இன்னும் சிலர், உயிர் பிழைக்க புல்லைத் தின்கிறார்கள். மக்கள் குப்பைத் தொட்டிகளில் உள்ள கேரி பைகளைத் திறந்து ஏதாவது உண்ணக் கிடைக்காதா என்று தேடிப் பார்ப்பது கொடுமையின் உச்சக்கட்டம்.

பிரசவத்தின் போது பல தாய்மார்கள் இறந்துள்ளனர். மக்கள் உப்புநீரைக் குடிக்கின்றார்கள். முகாமில் உள்ள அனைத்து குழந்தைகளும் இறப்பதற்குள் போரில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் மனிதாபிமான உதவிகள் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும். மனிதாபிமான உதவிகள் கிடைப்பதைத் தடுப்பது போர்க் குற்றமாகும் என ஐ.நா.வின் மனிதஉரிமை அமைப்பின் தலைவர் நவி பிள்ளை கூறியுள்ளார். தற்போது ஐ.நா மற்றும் பிற நாடுகளின் நிர்ப்பந்தத்தால் சில உணவு பண்டல்களை எடுத்துச் செல்ல சிரிய ராணுவ அனுமதி அளித்துள்ளது. முற்றுகை யின் கீழ் இம்மக்கள் பல மாதம் இருந்ததால் அவர்கள் முகாமை விட்டு தற்போது வெளியே வரும் போது பேய்கள், ஆவிகள் போல் காட்சி யளித்தனர் என்று பார்த்தவர்கள் கார்டியன் பத்திரிகையிடம் கூறினர்.

இன்று டால்பீன் மீனைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் ஆர்வலர் பல முயற்சி எடுக்கின்றனர். ஆனால், மக்கள் பட்டினியால் சாகும் போது அதனைத் தடுக்காமல் இருப்பது வெட்கமான விஷயமாகும்.

பணக்கார முஸ்லிம் நாடுகள் தங்கள் சகோதரர்கள் இறப்பதை வேடிக்கை பார்ப்பது வெட்கக் கேடாகும். இம்மக்கள் படும் கஷ்டத்தை நாம் நம் அனைத்து சகோதரர்களுக்கும் சொல்வது மிக முக்கியக் கடமையாகும். மேலும் இம்மக்களுக்காக அல்லாஹ்விடம் துஆ செய்வோம். விரைவில் அல்லாஹ் இந்தக் கொடிய ஃபிர்அவ்ன் ஆஸாதிடம் இருந்து இம்மக்களை காப்பாற்ற வேண்டும் என வைகறை குழு துஆ செய்ய வேண்டும் என மக்களைக் கேட்டுக்கொள்கிறது. ▪


## இப்போது பரபரப்பான விற்பனையில்



**பாபரி மஸ்ஜித் :**

**அடிப்படை தகவல்கள்**

விரிவாக்கப்பட்ட
3ஆம் பதிப்பு –
அதிக தகவல்களுடன்

பாபரி மஸ்ஜித் பற்றிய
முழு விவரங்களுடன்

அலகாபத் நீதிமன்ற
தீர்ப்பு பற்றி
வழக்கறிஞர்களின்
வாதங்களுடன்

**விலை ரூ. 90/-**

**இஸ்லாமிய நாகரிகம்**

விரிவாக்கப்பட்ட
3ஆம் பதிப்பு –
அதிக தகவல்களுடன்

கொள்கை ரீதியாக
இருந்த இஸ்லாம் எப்படி
நடைமுறை வாழ்க்கை
தத்துவமாகவும் ஆட்சி
செய்தது என்பதை
விளக்கும் நூல்!

சகோதரத்துவ சமுதாயத்தை
சார்ந்தவர்களுக்கு
தருவதற்குச் சிறந்த நூல்!

**விலை ரூ. 130/-**



**பாலஸ்தீன முஸ்லிம்கள்**

**அகதிகளான வரலாறு**


பாலஸ்தீனத்திலுள்ள
பூர்வீகக் குடிகளான
முஸ்லிம்கள் எப்படி
அகதிகளாக்கப்
பட்டார்கள்?

சர்வதேச
தீவிரவாதத்தின்
குறுகிய வரலாறு

**விலை ரூ. 110/-**

வெளியீடு : **வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, 4வது தளம், சென்னை-1. போன் :81481 29887**

# யாருக்கு ஓட்டு?




**1947** ஜூன் மாதம் இந்திய விடுதலைச் சட்டம் ஆங்கில நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தது.

இந்தியாவுக்கு விரைந்து விடுதலையை வழங்கிவிட்டு வெளியே வந்து விட வேண்டும் என அறிவித்தார் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அரியணையில் வீற்றிருந்த கிளிமண்ட் அட்லி. (1945 முதல் 1950 வரை ஆங்கில நாட்டின் பிரதம அமைச்சராக இருந்தவர்.) இவர்தான் நம் நாட்டுக்கு விடுதலை தந்தவர். ஆங்கில நாட்டின் ஏகபோக அதிபதியாகிய மகா ராணி எலிசபெத் அப்படித்தான் சமிக்ஞை காட்டி இருந்தாள். இதனால் பிரதமர் அட்லி விடுதலையை விரைந்து வழங்கிட முன் வந்தார்.

ஏனெனில் அந்நிலையில், 1944, 1945களில் இந்தியாவிலிருந்த இயற்கை வளங்கள் அனைத்தையும் சுரண்டி முடித்திருந்தார்கள் ஆங்கிலேய ஆதிக்கத்தினர். அதற்கு மேல் இந்தியாவைக் கையில் வைத்திருப்பது அவர்களுக்கு லாபமில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஓட்டாண்டி ஆகிப் போயிருந்த ஆங்கில ஏகாதிபத்தியம் (Freedom at Midnight Prologue) தன் நாட்டுப் பணத்தைக் கொண்டு வந்து இந்தியாவில் பரிபாலனம் நடத்திட முடியாத நிலையில் இருந்தது.

அதனால், விரைந்து இந்தியாவை விட்டு வெளியேறிட வேண்டும் என்பது அவர்களின் முடிவு.

ஆனால் இந்தியாவுக்கு விடுதலையை வழங்கிடக் கூடாது என்பது, ஆங்கில நாட்டு நாடாளுமன்றத்தில் தான் ஆற்றிய உரைகளின் வழி உலுக்கிக் கொண்டிருந்த, வின்ஸ்டன் சர்ச்சில் என்பவரின் கருத்து. அவர் எதிர்க்கட்சித் தலைவர்.

காரணம், இந்தியாவைத் தொடர்ந்து அடிமை நாடாக காலனி நாடாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆதிக்க ஆசை அல்ல.

மாறாக, இந்தியர்களுக்கு தங்கள் நாட்டை ஆட்சி செய்யும் அளவுக்கு பரிபாலன அனுபவமில்லை என்பதுதான்.

இந்தியாவின் சுதந்திரத்தை விரைந்து வழங்கிட வேண்டும் எனக் கூறிய ஆங்கில நாட்டுப் பிரதமர் அட்லியிடம், வின்ஸ்டன் சர்ச்சில் இப்படிக் கூறினார்:

> "You are entrusting the reigns of government in the hand of Rowdies, rascals and free booters they will not stop at anything the very air people breath will be taxed one day. It will take millions and millions of years for the Indians to enter into the periphery of politics."

> அதாவது, "இந்தியாவின் பரிபாலனத்தை நீங்கள் கொலைகாரர்கள், குண்டர்கள், கொள்ளையர்கள் ஆகியோரின் கைகளில் ஒப்படைக்கின்றீர்கள். அவர்கள் அநீதி இழைப்பதை நிறுத்தவே மாட்டார்கள். ஒரு நாள் மக்கள் சுவாசிக்கும் காற்றுக்கும் வரி போட்டு விடுவார்கள். அவர்கள் உண்மையான அரசியல் எல்லையைத் தொடுவதற்குப் பல நூறு நூற்றாண்டுகள் பிடிக்கும்."

அன்றைய நாள்களில் அதாவது, நாம் விடுதலை வேட்கையில் ததும்பி நின்ற நாள்களில் இப்படிப் பேசிடும் தகுதி எந்த ஆங்கிலேயனுக்கும் இல்லை; இருக்கக் கூடாது என்றோம். சர்ச்சிலையும் அவனுக்குப் பக்கத் துணையாக வந்த பட்டாளத்தையும் வன்மையாகச் சாடினோம்; வென்றோம்.

ஆண்டாண்டு காலமாக அகிலமெங்குமுள்ள அப்பாவி மக்களை அடிமைப் படுத்தி சுரண்டியே தங்கள் தொப்பைகளை நிரப்பிக் கொண்ட ஆங்கிலேயர்களின் அரசியல் நாணயம் எவனுக்கும் தேவைப்படவில்லை. எங்கள் நாட்டில் நாங்கள் நடத்தும் அரசியலே உன்னை விட ஒரு படி மேல் என்றே சொன்னோம். அவர்களை அறவே இந்தியாவிலிருந்து வெளியேற்றிட விடாது போராடினோம்.

### கொலைகார அரசியல்

ஆனால், கடந்த 66 ஆண்டுகளாக நமது அரசியல்வாதிகள் நாட்டில் ஆடிய நர்த்தனங்கள், அன்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் வாந்தியெடுத்த வார்த்தைகள் உண்மைதான் என ஊர்ஜிதப்படுத்திவிட்டார்கள்.

நடந்து முடிந்த 15ஆவது நாடாளுமன்றத்தில் (2009) அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 162 பேர், ரவுடிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள். அதாவது 30% பேர் இந்தத் தரத்தைச் சார்ந்தவர்கள். 2004 நாடாளுமன்ற தேர்தலில் வென்றவர்களில் 24% சதவிகிதத்தினர்தாம் இந்த தரத்தைச் சார்ந்தவர்கள். மொத்தமாக நாடெங்கிலுமுள்ள சட்டசபை உறுப்பினர்களில் நான்கில் ஒருவர் கட்டப் பஞ்சாயத்தில் தொடங்கி கொலை வரை செய்த குற்றவாளி.

இப்போது நடக்கும் தேர்தலிலும் இத்த கையவர்கள் தாம் அதிகமாக ஜெயிக்கும் வாய்ப்பிருக்கின்றது. (Times of India : 12, Feb 2014)

நமது நாட்டின் மிகப் பெரிய மாநிலமான உத்தரபிரதேசத்தில் 403 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் 189 பேர் கிரிமினல் குற்றங்களில் குற்றம் சாட்டப் பெற்றவர்கள்.

நாட்டை ஆளத் துடிக்கும் பாரதீய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை, அதன் சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒருவர் கொலைகாரர்.

காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரை சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களில் ஐந்து ஒருவர் கொலைகாரர். (தகவல்கள் ஆதாரம்: Association for Democratic Rights)

### மத்திய பிரதேசம் ஓர் முன்மாதிரி

மத்திய பிரதேசத்தில் அசோக் வீர் விக்ரம் என்பவர் தேர்தலில் போட்டி இட்டாராம். இவர் 69 கொலைகளைச் செய்திருக்கின்றார். இவருக்கு தேர்தலில் ஒதுக்கப்பட்ட சின்னம் யானை.

இவர் தனது தேர்தல் பிரச்சாரத்தில் “யானை சின்னத்தில் முத்திரை இடுங்கள். இல்லையெனில் உங்கள் நெஞ்சில் எங்கள் துப்பாக்கிக் குண்டுகளை தாங்கிக் கொள்ளுங்கள்” பிரச்சாரம் செய்தாராம்.

இவர் தனது பிரச்சாரத்தின் போது மலைப் பாம்புகளைப் பயன்படுத்தி பெண்களை மிரட்டினாராம். உயிருக்குப் பயந்த அந்தப் பெண்களைக் கொண்டு தன் கட்சி இளைஞர்களைச் சந்தோசப்படுத்தினாராம். பின்னர் எல்லோரையும் தனக்கு ஓட்டுப் போட வைத்தாராம்.

போதாக்குறைக்கு இவர் முதலைகளை வளர்த்தாராம். அந்த முதலைகள் இவருடைய எதிரிகளுடைய பிணத்தை உணவாக உட்கொண்டு கொளுத்துக் கிடந்தனவாம்.

2009 மே 31ஆம் நாள் இவருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியதாம். உடனேயே அவருடைய மனைவி பாரதீய ஜனதா கட்சியில் இணைந்தாராம். சட்டமன்ற உறுப்பினர் ஆனாராம்.

இந்த நாட்டின் எந்தப் பகுதியிலாவது, நியாயம் நிலைத்திருந்தால், வடக்கில் மொத்த நீதித்துறையும் இந்துத்துவா வட்டங்களாக ஆகாமலிருந்தால், மோடி இப்போது சிறையில் இருந்திருப்பார்.

மோடிக்காக பல கொலைகளைச் செய்த வன்சாரா இன்னும் எட்டு காவல்துறை அதிகாரிகளும் இப்போது சிறையில்.

வன்சாரா சிறையிலிருந்து கொண்டு எழுதிய கடிதத்தில் மோடியைப் பார்த்து, “நீ இருக்க வேண்டிய சிறையில் நான் இருக்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

*அவரொன்றும் தன் கணவருக்குச் சளைத்தவரல்ல. அவரும் ஒரு பெண்ணைக் கொலை செய்துவிட்டு தற்கொலையாக அதைக் காட்டி இருக்கின்றார். கைது செய்து சிறையிலடைத்திருக்கின்றார்கள். இப்போது பிணையில் வெளியே இருக்கின்றார். ஆனாலும், பாரதீய ஜனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர். (ஆதாரம்: தெஹல்கா 27 ஜூலை 2013)*

*இன்னொரு புள்ளி விவரம் இப்படிப் பேசுகின்றது:*

*அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொலைகாரனாகவும் கொள்ளைக்காரனாகவும் கொண்ட கட்சி சிவசேனா கட்சிதான். இந்தக் கட்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களில் 80% பேர் கொலைகாரர்கள், கொள்ளைக் காரர்கள்.*

*இதற்கு அடுத்த இடத்தைப் பிடிக்கும் கட்சி பாரதீய ஜனதா கட்சி. இக்கட்சியில் 41.7% பேர் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப் பினர்கள் கொலைகாரர்கள், கொள்ளைக் காரர்கள்.*

**இதர புள்ளி விவரங்கள்**

| | | |
|---|---|---|
| *ஐக்கிய ஜனதா தளம்* (JU) | - | *36.84% கொலை/கொள்ளைக்காரர்கள்* |
| *பகுஜன் சமாஜ்கட்சி* (BSP) *மாயாவதி* | - | *28.57% கொலை/கொள்ளைக்காரர்கள்* |
| *சமாஜ்வாதி கட்சி* (SP) *முலாயம் சிங் யாதவ்* | - | *27.27% கொலை/கொள்ளைக்காரர்கள்* |
| *காங்கிரஸ் கட்சி* | - | *23.88% கொலை/கொள்ளைக்காரர்கள்* |
| *கம்யூனிஸ்ட் கட்சி* (M) | - | *18.75% கொலை/கொள்ளைக்காரர்கள்* |
| *திரிணாமூல் காங்கிரஸ் மம்தா பானர்ஜி* | - | *16.16%* |

(*ஆதாரம்:* The Numbers Story : March 17, 2013)

*இந்தப் பட்டியலில் இடம்பெறாத கட்சிகளில் ரவுடிகள் இல்லை என்றில்லை. அந்தக் கட்சிகளில் சர்வே எடுக்கப்பட வில்லை.*

*ஆக, அன்று சர்ச்சில் சொன்னது உண்மையாக்கப்பட்டுள்ளது.*

*இதில் பாரதீய ஜனதா கட்சியின் மகிமை என்னவெனில், பல்லாயிரம் அப்பாவி மக்களைக் கொலை செய்த நரேந்திர மோடி தான் அதன் பிரதம வேட்பாளர்.*

*இந்த நாட்டின் எந்தப் பகுதியிலாவது, நியாயம் நிலைத்திருந்தால், வடக்கில் மொத்த நீதித்துறையும் இந்துத்துவா வட்டங்களாக ஆகாமலிருந்தால், மோடி இப்போது சிறையில் இருந்திருப்பார்.*

*மோடிக்காக பல கொலைகளைச் செய்தவர் வன்சாரா என்ற காவல்துறை அதிகாரி. பின்னர் டீஸ்டா செடல்வாட் போன்றவர்களின் சீரிய முயற்சியால் அவரும் இன்னும் எட்டு காவல்துறை அதிகாரிகளும் சிறைப்பிடிக்கப்பட்டார்கள்.*


*சிறையிலிருக்கும் வன்சாரா என்ற காவல்துறை அதிகாரி சிறையிலிருந்து கொண்டு எழுதிய கடிதத்தில் மோடியைப் பார்த்து,* **“நீ இருக்க வேண்டிய சிறையில் நான் இருக்கிறேன்”** *என்று குறிப்பிட்டார்.*

*இப்படிக் கொலைகாரர்களின் கை களில் இந்தியா சிக்கிக் கொண்டது.*

*இதை ஜனநாயகம்! இங்கே எல்லாம் கிடைக்கின்றது எனச் சொல்லும் மக்களும் இருக்கின்றனர்.*

●

சென்னையில் நடந்த புத்தக வெளியீட்டு விழா




26/11 விசாரணை
நீதிமன்றங்களும்
தோற்றது ஏன்?




26/11 வழக்கு நீதித்துறையும் தோற்றது ஏன்? என்ற புத்தகத்தை மஹாராஷ்டிர முன்னாள் ஐ.ஜி முஷ்ரிஃப் வெளியிட பெற்றுக்கொள்பவர் சென்னை உயர்நீதி மன்ற மூத்த வழக்கறிஞர் திரு. காந்தி அவர்கள்

## நூல் வெளியீட்டு விழாவும் கர்கரே விருது வழங்கும் விழாவும்

## 'கர்கரேயைக் கொலை செய்தது யார்?' என்ற நூலைத் தொடர்ந்து அடுத்த பேரிடி....

**இந்தியாவைக்** காவு கொள்ள பாசிசப் பரிவாரம், அதாவது சங்கப் பரிவாரம் ஒரு பெரும் சூழ்ச்சியைச் செய்தது. அதுதான் ஓர் இராணுவப் புரட்சியின் வழி இந்தியாவைக் கைப்பற்றுவது.

இந்தியாவிலிருக்கும் ஆட்சியமைப்பை தூக்கி வீசிவிட்டு அந்த இடத்தில் ஓர் இந்துத்துவ ஆட்சியை நிலைநாட்டுவது.

இதற்காக அவர்கள் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு மாற்றமாக அதாவது பாசிச ஆட்சியை நிலைநாட்டுவதற்காக ஓர் சட்டத்தை எழுதிவிட்டார்கள்.

நமது தேசியக் கொடி அல்லாத வேறொரு கொடியை வடிவமைத்து விட்டார்கள்.

தாங்கள் இந்து ராஷ்டிரா என அழைக்கும் அந்த அரசுக்கு தலைமைச் செயலகம் ஒன்றையும் கண்டு கொண்டார்கள்.

அந்தத் தலைமைச் செயலகம் யூத நாடாகிய இஸ்ரேலின் தலைநகராம் டெல் அவிவில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அங்கே இஸ்ரேலில் இயங்கிடும் இந்த இந்து ராஷ்டிரம் நமது இந்தியாவின் மீது ஒரு பெரும் போரைத் தொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதுவே நாடெங்கிலும் வெடித்த குண்டுகளும் மடிந்த மக்களும்.

இந்த உண்மைகளையெல்லாம் கண்டு பிடித்து, உலகுக்கு அறிவித்தவர்தான் ஹேமந்த் கர்கரே என்ற மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி. இவர் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படையின் (ATS - Anti Terrosim Squad) தளபதி.

எங்கள் சதிகளைக் கண்டுபிடித்தவரை உயிரோடு விட்டு வைத்திட மாட்டோம் என்ற அடிப்படையில் அவரைக் கொலை செய்து விட்டார்கள் மும்பை என்ற பம்பாயில் வைத்து.

இந்த பயங்கர லட்சியத்தை அடைந்திட ஏற்பாடு செய்யப்பட்டதே, மும்பை தாக்குதல் என்ற Mumbai Attack. அந்த நாளே 26/11 என அடையாளப்படுத்தப்பட்டு அழைக்கப்படுகின்றது. அதாவது நவம்பர் 26, 2008 ஆம் நாள். என்னே பாதகம்? தேசத் துரோகம்??

இந்த உண்மையை ஆய்ந்தறிந்து கர்கரே என்ற வீரமகனைக் கொலை செய்தது வெளி நாட்டிலிருந்து வந்த தீவிரவாதிகள் அல்ல. அவர்கள் நம் நாட்டில் உள்ள சங்கப் பரி வாரப் பிரிவாகிய அபிநவ் பாரத் என்ற அமைப்புதான். மொத்த நிகழ்வையும் இயக் கியது நமது நாட்டின் தலையெழுத்தை நிர்ண யித்துக் கொண்டிருக்கும் மத்திய உளவுத் துறை (IB)தான் என்பதையெல்லாம் கண்டெ டுத்து, உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றம் என எல்லா நீதிமன்றங்களுக்கும் கொண்டு சென்றார். எஸ்.எம்.முஷ்ரிஃப்.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களும் அதே மராட்டிய காவல்துறையைச் சார்ந்தவர்தாம். அதன் முன்னாள் ஐ.ஜி (IG) Inspector General of Police.

நீதி மன்றங்கள் இழுத்தடித்துக் கொண் டிருந்தன. 26/11 என்ற மும்பைத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்கும் துணிவும் நீதிமன்றங்களுக்கில்லை.

அதனால் இந்த உண்மைகளையெல்லாம் மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்தார்கள். எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள். அதுதான் அவர் வெளியிட்ட 'கர்கரேயைக் கொலை செய்தது

*யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்' என்ற நூல்.*

*இந்த நூல் வெளிவந்தபோது, 'கசாப்' என்ற ஓர் அப்பாவிக் குழந்தையை* (juvenile) *தூக்கில் போட்டு மொத்த விவகாரத்தையும் புதைத்து விட்டார்கள்.*

*இந்நிலையில் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய முதல் நூலின் நிலை என்ன? என்ற கேள்வி எல்லோருடைய மனதிலும் எழும்.*

*ஆனால், எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் வேறொரு விவகாரத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். அது எப்படி கர்கரேயைக் கொலை செய்தவர்கள் தப்பித்தார்கள். எப்படி நீதிமன்றம் பொய் களையும் புனைந்துரைகளையும் சாட்சியங் களாகவும் ஆவணங்களாகவும் ஏற்றுக் கொண்டன என்பதே அந்தக் கவலை.*

*கசாப் என்ற அப்பாவி பாலகனுக்கு எதிராக எந்த சாட்சியமுமில்லையே அவனை எப்படி தூக்கில் போட சட்டம் படித்த வர்கள் ஒத்துக் கொண்டார்கள்? இந்த வினா அவரைக் குடைந்தெடுத்தது?*

*உச்சநீதிமன்றத்தில் கசாபின் மேல்முறை யீடு நிலுவையிலிருந்தபோது, அவர் தனது கண்டுபிடிப்புகளையும் உண்மையான ஆவணங்களையும் அமிகஸ் கூரி என்ற நீதி மன்ற நண்பர் (இது உச்சநீதிமன்றம் நிய மித்தது) வழி அனைத்தையும் தெளிவுபடுத்தி னார். அப்படி இருந்தும் நீதிமன்றங்கள் ஏன் அநீதி இழைத்தன.*

*இந்த வினாவை ஆய்வு செய்தார். தீர்ப்பை முழுமையாகப் படித்தார். எல்லா வற்றையும் ஆய்வு செய்தார். அதனை நீதி மன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் சமர்ப் பித்தார்.*

*மக்கள் மன்றத்தில் அதனை ஓர் நூலாக சமர்ப்பித்தார். அதுதான்* 26/11 Probe why judiciary also failed.

*இந்த நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் 16-03-2014 அன்று மாலை திருவல்லிக் கேணியிலுள்ள அல்மாலிக் மேரேஜ்ஹாலில் நடைபெற்றது.*

**நிகழ்ச்சியை தாருல் இஸ்லாம் ஃபவுண் டேஷன் டிரஸ்டும் வேர்கள் வெளியீட் டகமும் இணைந்து நடத்தின.**

*நிகழ்ச்சி தாருல் இஸ்லாம் ஃபவுண் டேஷன் டிரஸ்டின் பொருளாளரும் மந்தை வெளி ஈத்கா பள்ளிவாசலின் தலைமை இமாமுமான பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள் தலைமை ஏற்றார்கள்.*

**நூல் அறிமுகம்**

*வைகறை வெளிச்சம் மாத இதழின் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் நூலை அறிமுகப்படுத்தி தமிழில் உரை யாற்றினார்கள்.*

*நூலை அதன் ஆசிரியர் எஸ்.எம். முஷ்ரிஃப் முன்னாள் ஐ.ஜி மகாராஸ்டிரா வெளியிட்டார்கள். முதல் பிரதியை சென்னை உயர்நீதி மன்றத்தின் மூத்த வழக்கறிஞர் R.காந்தி அவர்கள் பெற்றுக் கொண்டு உரை யாற்றினார்கள்.*

*அவர் உரையில் "நீதிமன்றங்கள் சில வேளைகளில் அப்படித்தான் நடந்து கொள் கின்றன" எனக் கூறினார். சில உதாரணங் களையும் எடுத்துச் சொன்னார். இதை எஸ்.எம். முஸ்ரிஃப் தன்னுடைய உரையில், "வழக்கறிஞர் காந்தி அவர்கள் குறிப்பிடுவது போல இது சாதாரண வழக்கல்ல. நாட்டை உலுக்கிய வழக்கு. ஒரு முக்கிய காவல்துறை அதிகாரியைக் கொலை செய்த வழக்கு" எனக் கூறினார். மேலும் தனது உரையில் இந்துத் துவ தீவிரவாதிகளும் மத்திய உளவுத்துறை யும் சேர்ந்து நடத்திய கொலைதான் கர்கரே கொலை.*

*தொடர்ந்து ரூபாய் ஒரு லட்சத்துடன் கூடிய கர்கரே விருது வழங்கப் பெற்றது.*

*விருதை தாருல் இஸ்லாம் ஃபவுண் டேஷன் சார்பில் அதன் தலைவர் மு.குலாம் முஹம்மத் அவர்கள், அத்தனை எதிர்ப்புக் கிடையேயும் - நீதிக்கான தனது போரை தொடரும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களுக்கு வழங்கினார்கள்.*

*இறுதியில் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர் களுக்கு வழங்கப்பட்ட பட்டயத்தை ஆர்வ முடன் பெற்றுக் கொண்டார். ஆனால், ரூபாய் ஒரு லட்சம் பொற்கிழியை வாங்கிட மறுத்து விட்டார்கள்.*

*தொடர்ந்து உரை நிகழ்த்திய எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் "இந்துத்துவ தீவிரவாதி களும், மத்திய உளவுத்துறையும் இணைந்து நடத்திய கொலைதான் கர்கரே கொலை.*

*மும்பை தாக்குதலின் இந்தப் பகுதியை மீண்டும் ஆய்வுக்கும் புலனாய்வுக்கும் உட்படுத்திட வேண்டும் என நாம் வைத்த மனுக்கள் எல்லாம் நீதிமன்றத்தில் அப்ப டியே கிடக்கின்றன. அந்த மனுக்கள் அப்ப*

டியே இருக்கும் போது 2006இலிருந்தே நமது உளவுத்துறையின் கையிலிருக்கும் கசாபை இரகசியமாக தூக்கில் போட்டு எல்லாம் முடிந்தது என்று கூறிவிட்டார்கள். இதில் உச்சநீதிமன்றமும் துணை போனது எம்மைப் பெரிய வேதனையில் ஆழ்த்துகின்றது."

"நமது முதல் நூலைப் படித்துவிட்டு நீதிமன்றங்களிலே வழக்குகளைத் தொடுத்து பெரும் போர் ஒன்றை நடத்திக் கொண்டிருப்பவர் இராதாகாந்த் யாதவ் (இவர்தான் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டின் முதல் கர்கரே விருதைப் பெற்றவர்.) உச்சநீதி மன்றத்தில் எல்லா உண்மைகளையும் எடுத்துச் சொன்னார்கள். இந்த வகையில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அமிகஸ் கூரி என்ற நியாயத்தின் நண்பர் ராஜீவ் ராமச்சந்திரன் அவர்கள், இந்த உண்மைகளை நீதிமன்றத்தில் விரிவாகவே எடுத்துப்பேசினார்கள். ஆனாலும், நீதிபதிகள் உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றுவதில் மிகவும் உறுதியாக இருந்து விட்டார்கள். இது அனைவரையும் விரக்தியில் ஆழ்த்தி விட்டது."

"நான் இந்த நூலை எல்லா நீதிபதிகளுக்கும் அனுப்பி வைத்தேன். அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டார்கள். படித்தார்கள். நூலைப் பாராட்டி எனக்குக் கடிதங்களையும் அனுப்பினார்கள்.

'வீரமகன் கர்கரே விருது' ஒன்றை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்படுத்தி இருக்கின்றது. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2013/2014க்கான விருதை எனக்கு வழங்கியிருக்கின்றார்கள். நான் இந்த விருதை மிகவும் பெருமைக்குரிய விருதாகவும் பெரிய விருதாகவும் பெரிய விருதாகவும் கருதுகின்றேன். எனக்கு எத்தனையோ விருதுகளை என்னுடைய பணிக்காலத்தில் மத்திய அரசும் மாநில அரசும் வழங்கின. அவற்றையெல்லாம் நான் பெற்றுக் கொள்ளவில்லை. மும்பையைச் சார்ந்த பல சமூகநல அமைப்புகள், பூனாவைச் சார்ந்த அமைப்புகள் இவை யெல்லாம் என்னுடைய பணிகளைப் பாராட்டி விருதுகளை வழங்கின. அவற்றையெல்லாம் நான் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால், கர்கரேயின் பெயரால் வழங்கப்படும் இந்த விருதே மிகப் பெரிய விருது. அதனால் அதைப் பெற்றுக் கொள்வதில் பெருமையடைகின்றேன்.



வீரமகன் ஹேமந்த் கர்கேர விருதினை தாருல் இஸ்லாம் ஃபபுன்டேஷன் டிரஸ்ட் தலைவர் மு.குலாம் முஹம்மது வெளியிட அதனை மஹாராஷ்டிர முன்னாள் ஐ.ஜி. முஷ்ரிஃப் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

"கர்கரேக்கு பாரத ரத்னா விருதை வழங்கிட வேண்டும் என்பது நான் நீண்ட நாள்களாக எழுப்பி வரும் கோரிக்கை. காரணம், கர்கரேதான் இந்த நாட்டை மிகப் பெரிய ஆபத்தாகிய இந்துத்துவ பாசிசத்திலிருந்து காப்பாற்றியவர். இந்துத்துவ தீவிரவாதிகளின் தேசத்துரோகச் செயல்களைத் தோலுரித்துக் காட்டியவர். அதே போல் மத்திய உளவுத்துறையின் சதிகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர். இவற் றால் தனது உயிரை நீதிக்காகத் தந்தவர்.

அவர் பெயரால் உருவாக்கப்பட்ட விருதே மிகச் சிறந்த விருது.

இப்போதும் பாரத ரத்னா விருதை அவருக்கு - கர்கரேக்கு வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்'' என்று கூறினார்.

அடுத்து, இன்னொரு நூல் வெளியிடும் நிகழ்ச்சி இடம்பெற்றது. அதுதான் கசாபை

---

**இந்தியாவில் தீவிரவாதம் தீவிரவாதம் எனப் பேசுவதில் நமது ஆட்சியாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏராளமான இலாபங்கள் இருக்கின்றன. தீவிரவாதம் என்ற செய்தியை மக்கள் மன்றத்தில் பரப்பி மக்களைப் பதற்றத்துடன் வைத்துக் கொள்கின்றார்கள். இதனால் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்னைகளிலிருந்து அவர்களின் கவனங்கள் திசை திருப்பப்படுகின்றன.**


நிகழ்ச்சியை உன்னிப்பாக கவனித்து கொண்டிருக்கு மனித உரிமைகள் போராளி பேராசிரியர் மார்க்ஸ்

இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? இதனை வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள்தான் எழுதியிருந் தார்கள்.

நூலை, அகில இந்திய இஸ்லாமிய அமைப்புகளின் கூட்டமைப்பாகிய மஜ்லிசே முஷாவரத் டெல்லியின் தலைவர் மில்லி கெஜட் (டெல்லி) என்ற புகழ்பெற்ற ஆங்கில மாதமிருமுறையின் ஆசிரியர் பெரோஸ் மீடியா என்ற வெளியீட்டகத்தின் உரிமை யாளர். கர்கரேயைக் கொலை செய்தது யார்?, 26/11 நீதித்துறையின் தோல்வி ஆகிய நூல் களை வெளியிட்டவர், டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் வெளி யிட்டார்கள்.

முதல் பிரதியை தமுமுக-வின் செயலாளர் - செய்தி யாளர் பேராசிரியர் முனைவர் காஜா கனி அவர்கள் பெற்றுக் கொண் டார்கள். அடுத்த பிரதியை சமுதாய நற்பணிச் செயல் வீரர் செங்கிஸ்கான் அவர்களும் அடுத்த பிரதியை முஸ்லிம்களின் பாரம்பரிய மிக்க கட்சியாகிய இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் வழக் கறிஞர்கள் பிரிவு செயலாளர் ஜீவ கிரிதரன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். (இந்தக் குறு நூல் ரூபாய்25-க்குக் கிடைக்கும்)

அடுத்து, டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

அவர்கள் தனது உரையில் தீவிரவாதம் என்ற சொல்லாடலுக்குப் பின்னால் மறைந்துள்ள சில இரகசியங்களைப் பற்றிப் பேசினார். இந்தத் தீவிரவாதங்களுக்கு சர்வதேச முகம் ஒன்று உண்டு. ஐரோப் பாவைச் சார்ந்த நாடுகள் பல ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதையே தங்கள் முக்கிய வருவாயாகக் கொண்டவை. ஆகவே 'Weapon Industry' என்ற ஆயுதத் தொழில்களில்தாம் அவை அதிகமாக முதலீடு செய்கின்றன.

தாங்கள் உற்பத்தி செய்யும் ஆயுதங் களுக்கு சதா சர்வ காலமும் தேவைகள் இருக்க வேண்டும் என்றால், உலகெங்கும் போர்களும் பூசல்களும் நடந்து கொண்டே இருக்க வேண்டும் என அவர்கள் கருது கின்றார்கள். அதனால் அவர்கள் நாடுகளுக் கிடையேயும், நாடுகளுக்கு உள்ளேயும் குழப்பங்களையும் பதற்றங்களையும் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றார்கள். இதைத்தான் நாம் இப்போது உலகெங்கும் கண்டு வருகின்றோம்.

இந்தியாவில் தீவிரவாதம் தீவிரவாதம் எனப் பேசுவதில் நமது ஆட்சியாளர் களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏராள மான இலாபங்கள் இருக்கின்றன. அவர்கள் தீவிரவாதம் என்ற செய்தியை மக்கள் மன்றத்தில் பரப்பி மக்களைப் பதற்றத்துடன் வைத்துக் கொள்கின்றார்கள். இதனால் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்னை களிலிருந்து அவர்களின் கவனங்கள் திசை திருப்பப்பட்டு விடுகின்றன.

இந்தியாவில் சாதாரண மருந்துகள் கூட கிடைக்காமல் மக்கள் மடிந்து கொண்டிருக் கின்றார்கள். லட்சக்கணக்கில் மக்கள் செத்துக் கொண்டிருக்கும் பிரச்னைகளின் பக்கம் மக்கள் திரும்பிவிடாமல் இருக்கவும் தீவிர வாதத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். தீவிரவாதத் தாக்குதல்கள் இந்துத்துவா பயங்கர வாதிகளால் நடத்தப்பட்டிருக்கும் வேளையில், தீவிரவாதம் என்ற சொல் முஸ்லிம்களைக் குறிக்கும் சொல்லாக மாற்றப்பட்டுள்ளது. இது திசை திருப்பும் முயற்சியே. இது போல் இன்னும் பல புள்ளி விவரங்களை தொகுத் தளித்தார்கள்.

முடிவில் தாருல் இஸ்லாம் சார்பில் அதன் சென்னை ஒருங்கிணைப்பாளர் சாதிக் பாஷா நன்றி கூறினார்.

**நிகழ்ச்சியில்**

பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த வர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மக்களும் அரங்கத்தை நிறைத்து நிரம்ப வீற்றிருந்தார்கள்.

மனித உரிமைப் போராளி அ.மார்க்ஸ், சமுதாய வழக்கறிஞர் சங்கரசுப்பு, மூத்த வழக்கறிஞர் NGR பிரசாத், கேப்டன் அமீர் அலி, சமுதாய ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மகள் கன்ஸ்ட்ரக்ஷன் அதிபர் ஆகியோர் பார்வையாளர்கள் வரிசையில் வீற்றிருந்து நிகழ்ச்சிக்குப் பெருமை சேர்த்தனர்.

MGM

**26/11** அரசுகளை தவறான பாதையில் வழிநடத்தும் உளவுத்துறை

# மௌலவி பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்களின் தலைமை உரை



அஜ்மல் கசாப் அவசர தூக்கு ஏன் புத்தகத்தை மில்லி கெசட் ஆங்கில இதழ் ஆசிரியர் ஜஃபருல் இஸ்லாம் கான் வெளியிட பெற்றுக்கொள்பவர் த.மு.மு.க மாநில நிர்வாகிகளில் ஒருவரான சகோ. பேராசிரியர். ஹாஜா கனி.

**16-03-2014** அன்று சென்னையில் நடைபெற்ற கர்கரே விருது வழங்கும் விழாவில் இல்யாஸ் ரியாஜி தலைமையுரை நிகழ்த்தினார்.

இந்த ஆண்டு கர்கரே விருது பெறும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் மஹாராஷ்டிரா மாநில காவல்துறையில் ஐ.ஜியாகப் பணி யாற்றியவர். பணிக்காலங்களில் திறம்பட நேர்மையாகப் பணிபுரிந்தவர் என்று பெயரெடுத்தவர்.

தேசத்தை உலுக்கிய முத்திரைத்தாள் மோசடி வழக்கை விசாரித்து, நாட்டுக்கு முப்பதாயிரம் கோடி ரூபாயை மீட்டுத் தந்தவர். பின்னர் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றவர்.

தன்னுடன் பணியாற்றிய நேர்மையான அதிகாரியான ஹேமந்த் கர்கரே (தீவிரவாத தடுப்புப் படைத் தலைவர்) தெருவில் சுற்றித் திரியும் அநாவசியமான ஒரு மிருகத்தைப் போல சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டு மனம் பொறுக்காமல் கொதித்தெழுந்தார்.

கர்கரே கொல்லப்பட்ட கொடூரத்தில் புதைந்து கிடக்கும் மர்மங்களைத் தோண் டினார். மத்திய உளவுத் துறையான ஐ.பிதான் கர்கரேயைக் கொன்றது என்ற உண்மையைக் கண்டறிந்தார்.

'கர்கரே'வைக் கொலை செய்தது யார்? என்ற நூலின் மூலம் ஐ.பியின் முகத் திரையைக் கிழித்தெறிந்தார்.

நாடெங்கும் குண்டுகளை வெடிக்க வைத்து பழியை முஸ்லிம்கள் மீது போட்டு விட்டு தப்பித்து விடும் உண்மைக் குற்ற வாளிகளான இந்துத்துவ சக்திகளைக் கைது செய்திட கர்கரே முனைப்பு காட்டினார். அதனால் பிராமணீயவாதிகளை அதிகாரி களாகக் கொண்ட ஐ.பி எனப்படும் மத்திய உளவுத்துறை கர்கரேவைக் கொன்றது என்ற உண்மையை ஊரறிய, உலகறிய உரக்க முழங்கினார்.

**கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூல் ஏற்படுத்திய புரட்சி**

மத்திய, மாநில அரசுகளுக்குப் பொய் யான தகவல்களைத் தந்து அரசுகளை தவறான பாதையில் வழிநடத்தும் ஐ.பியின் தறிகெட்ட பயணம் கட்டுக்குள் வந்தது.

ஐ.பி தரும் தகவல்களை மட்டுமே நம்பி ஒரு முடிவை எடுக்க முடியாது என்று அரசுகள் முடிவுக்கு வந்தன.

சுதந்திரம் பெற்ற நாள் முதல் 'பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர்' என்ற பெயரில் இருந்து வந்த அநாவசியமான பதவி அகற்றப்பட்டது. அந்தப் பதவியிலிருந்து பிராமண அதிகாரி அதிகாரமற்ற வேறொரு பதவிக்குத் தள்ளப்பட்டார்.

பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் கனடா நாட்டுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். அதற்கு நம்முடைய பிரதமருக்கு எப்படிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை கனடா அரசு தந்திட வேண்டும் என்பதைக் கூறிட கனடாவுக்கு ஐ.பி. அதிகாரிகள் சிலர் சென்றிட விரும்பி, கனடா அரசிடம் விசா கேட்டனர்.

ஆனால், ஐ.பி அதிகாரிகளுக்கு விசா வழங்கிட கனடா அரசு மறுத்துவிட்டது. அதற்கு கனடா அரசு கூறிய காரணம் என்ன தெரியுமா?

ஐ.பிதான் இந்தியாவில் குண்டுகளை வெடிக்க வைக்கின்றது என்பது எங்களுக்குத் தெரிய வந்திருக்கின்றது. சொந்த நாட்டிலேயே குண்டுகளை வைக்கும் ஐ.பிக்கு நாங்கள் எப்படி விசா தர முடியும் என்று கூறிவிட்டது.

அதாவது, குண்டுவெடிப்பது இந்தியாவில். வைப்பது இந்தியர்கள் (ஐ.பி அதிகாரிகள் ஏற்பாடு செய்த இந்தியர்கள்). இதனால் மரணமடைவது இந்தியர்கள். பொருளாதார இழப்பு, உயிரிழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படுவது இந்தியக் குடும்பங்கள். பழி சுமத்தப்படுவது (அப்பாவி முஸ்லிம்கள்) இந்தியர்கள் மீது.

இவ்வளவு இழிவான வேலைகளை ஈவு, இரக்கமின்றி செய்து வரும் ஐ.பியை எங்கள் கனடா நாட்டுக்குள் அனுமதித்தால் இங்கேயும் குண்டு வைத்துவிடும். எங்கள் மானம் என்னாவது சர்வதேச அளவில். இதுவே கனடாவின் முடிவு.

மேலும் ஐ.பியில் பணியாற்றும் ஐ.பி.எஸ் பட்டம் பெற்ற அதிகாரிகள் இருபத்து ஆறு பேர் ஒரே நேரத்தில் பணி மாற்றம் செய்யப் பட்டனர். மொத்தம் முப்பது பேர் பணி மாற்றம் எனும் தண்டனைக்கு உள்ளாயினர். சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மத்திய உளவுத்துறையின் உயரதிகாரிகள் இவ்வாறு தண்டிக்கப்படுவது இதுவே முதல் முறை.

மேலும், ஐ.பி.யின் வரலாற்றில் இது வரை ஒரு குறிப்பிட்ட (பிராமண) சாதி யினரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். ஒரு முஸ்லிம் கூட ஐ.பியில் இருந்ததில்லை. இப்போது ஒரு முஸ்லிம் ஐ.பியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேலும், ஐ.பியின் அதிகாரங்கள் குறைக் கப்பட்டு அதற்கு இணையான இன்னொரு புலனாய்வு முகவாண்மை (N.I.A - National Investigation Agency) ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐ.பியின் கட்டுப்பாடற்ற அதிகாரம் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஐ.பி தனது உளவுத் தகவல் களை பத்திரிகையாளர்களிடம் நேரடியாகக் கூறிடக் கூடாது என்று மைய அரசு ஐ.பி யிடம் கூறிவிட்டது. (இந்தியாவைத் தகர்க்க ஜெய்ஷ்-இ-முஹம்மது சதி, மோடியைக் கொல்ல இந்திய முஜாஹிதீன் திட்டம், கெஜ்ரிவாலைத் தீர்த்துக் கட்ட பகீர் பிளான் போன்ற அதிரடி புருடாக்களை இனி பத்திரிகையாளர்களிடம் ஐ.பி கூறக் கூடாது என்று அரசு கூறியதை மீறி ஐ.பி அடாவடி யில் ஈடுபட்டு வருகிறது.)

மேலும், மத்திய அரசில் (ரயில்வே உள்ளிட்ட நாட்டுக்கு எக்கச்சக்கமான வரு மானத்தை ஈட்டித் தரும் வளம் கொழிக்கும் துறையில்) பணியாற்றிய நேர்மையான அதிகாரிகளை நாட்டிலுள்ள லட்சக்கணக் கான காவல்நிலையங்களில் ஒன்றில் கூட ஒரு எஃப்.ஐ.ஆர் (முதல் தகவல் அறிக்கை) கூட இல்லாதவர்களையெல்லாம் கூட தீவிரவாதி என்று வீண் பழி சுமத்தி பணி நீக்கம் செய்வதும் நீதிபதிகளைக் கூட மிரட்டுவது மாக (பாபரி மஸ்ஜித் வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளை தீர்ப்புக்கு முன் ஐ.பி மிரட்டி யதாக இந்தியா டுடே இதழ் கூறியுள்ளது.) அடாவடித்தனம் செய்யும் ஐ.பி.யை கண்டித்து எழுதிடும் துணிச்சல் பத்திரிகைகளுக்கு வந்துள்ளது.

இதுவெல்லாம் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய நூல் (கர்கரேயைக் கொலை செய்தது யார்) ஏற்படுத்திய புரட்சி.

**இந்த நிகழ்ச்சியின் நோக்கம்**

இந்தியா பல்வேறு இன, சாதி, மத மக்கள் வாழும் நாடு. ஆனால், இங்கே முஸ்லிம்கள் மட்டும் நிம்மதியாக வாழ முடியவில்லை. இது ஏன்?

தினந்தோறும் காலையிலே படுக் கையை விட்டு எழும்போதே முஸ்லிம் பெற்றோர்களை பீதி கவ்விக் கொள்கிறது.

நேற்று எங்கே குண்டு வெடித்ததோ? எந்தப் பாவி எங்கே குண்டு வைத்தானோ? நம் வீட்டுப் பிள்ளைகளை காவல்துறை பிடித்து விடுமோ? விசாரணைக்காக காவல் நிலையத் திற்கு அழைத்துச் செல்லப்பட்ட நம்முடைய பிள்ளை உயிரோடு வருவானா? மறுநாள் செய்தித் தாளில் தீவிரவாதியாகக் காட்டப் பட்டு விடுவானா என்ற பீதியோடும் பதை பதைப்போடும் வாழ்ந்து கொண்டிருந்தனர் இந்திய முஸ்லிம்கள்.

இன்னும் இந்த பீதி முழுமையாக நீங்கிவிடவில்லை என்ற போதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கும் குண்டுகள் வெடிக்கவில்லை.

(பீகாரில் புத்த கயாவிலும் கர்நாடகா மாநிலத் தலைநகர் பெங்களூருவில் பாரதீய ஜனதா கட்சி அலுவலகம் அருகிலும் வைக்கப்பட்ட குண்டுகளைத் தவிர. பீகாரில் அந்த வழக்கில் இந்துத்துவ தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஐ.பி இந்த வழக்கை விசாரிக்கவில்லை. என்.ஐ.ஏதான் விசாரிக்கிறது. பெங்களூர் வழக்கில் ஐ.பி தலையிடக் கூடாது. என்.ஐ.ஏ-தான் விசாரிக்க வேண்டும் என்று முஸ்லிம் கூட்டமைப்பு

சார்பில் தாருல் இஸ்லாம் தலைவர் மு.குலாம் முஹம்மது கோரிக்கை வைத்துள்ளார். விரைவில் ஐ.பி முகத்திரை கிழியும்.)

ஆக, 'கர்கரேயைக் கொலை செய்தது யார்?' என்ற நூல் இந்தியாவில் குண்டு வெடிப்புகளை நிறுத்தி இந்தியர்கள் அநியாயமாகக் கொல்லப்படாமல் காப் பாற்றியிருக்கிறது. குண்டுகள் வெடித்தாலும் உண்மைக் குற்றவாளிகளை நோக்கி விசா ரணையும் தண்டனையும் திரும்பிட வழி வகுத்திருக்கிறது.

இது முஸ்லிம்களின் குற்ற உணர்வை அகற்றி தைரியத்தையும் நம்பிக்கையையும் பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்தி யுள்ளது. இப்படியொரு மறுமலர்ச்சியை மக்களுக்குப் பெற்றுத் தந்திடவே தாருல் இஸ்லாம் பாடுபட்டு வருகிறது. அதன் தன்னலமற்ற இயக்கவாதிகள் உழைத்து வருகின்றனர்.

இப்பேற்பட்ட ஒரு சாதனையை நிகழ்த் தியதோடு தன் அடுத்த நூல் (26/11 விசாரணை நீதித்துறை தோற்றது ஏன்?) வழியாக ஐ.பி எப்படியெல்லாம் நீதித் துறையை ஏமாற்றி முஸ்லிம்களுக்கு தண்டனை வாங்கித் தரு கிறது என்பதை பாரறியச் செய்திருக்கும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களுக்கு இந்த ஆண்டு 'கர்கரே விருது' வழங்குவதில் தாருல் இஸ்லாம் பெரும் மகிழ்ச்சி கொள்கிறது.

தாருல் இஸ்லாமின் லட்சியங்களுள் ஒன்று இந்தியாவில் முஸ்லிம்கள் மற்ற சாதி, சமய மக்களைப் போல் நிம்மதியாக வாழ்ந் திட வேண்டும். அவர்கள் மீது வீணாகச் சுமத்தப்படும் தீவிரவாதப் பழி அகற்றப்பட வேண்டும் என்பது. இந்த நிகழ்ச்சியின் நோக்கமும் அதுவே.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் முதல் நூல் குண்டுவெடிப்புகளைத் தடுத்தது. அதில் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்படு வதை நிறுத்தியது. அவரின் இரண்டாவது நூல், நீதித் துறையைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் தண்டிக்கப்படுவதை நிறுத்தும் வலிமை கொண்டது இன்ஷா அல்லாஹ். ஐ.பி.யின் நீண்ட கொடுங்கரங்களிலிருந்து நீதித் துறையைக் காப்பாற்றிடும் திறன் மிக்கது.

தாருல் இஸ்லாமின் லட்சியப் பயணத் துக்கு ஊக்கம் தரும் நூல்களை வரலாற்று ஆவணங்களாக எதிர்காலத் தலைமுறைக்கு வழங்கியிருக்கும் எஸ்.எம்.முஷ்ரிஃப் இவ் வாண்டுக்கான 'கர்கரே விருது' பெறுகிறார்.



நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் இன்னொரு பகுதி

**டாக்டர் ஜஃபருல் இஸ்லாம்கான்**

விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிட டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்களை அழைத்த விழாத் தலைவர் இல்யாஸ் ரியாஜி கூறியது:

இந்தியாவில் முஸ்லிம்களுக்கென வரும் ஒரே ஆங்கில இதழ் 'மில்லி கெஜட்.' இதன் ஆசிரியர்தான் ஜஃபருல் இஸ்லாம் கான்.

உலகின் முதல் பயங்கரவாத நாடான இஸ்ரேல், பாலஸ்தீன மக்களுக்கு எதிராகச் செய்துவரும் அநியாயங்களை பாலஸ்தீன மக்களின் பிரச்னைகளை ஆய்வு செய்து உலகுக்குத் தெரிவித்தவர். அதற்காக டாக்டர் (முனைவர்) பட்டம் பெற்றவர்.

பாலஸ்தீன முஸ்லிம்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வந்தபோது, அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தந்தவர்.

உயிர் காக்கும் மருந்துகளைக் கூட பாலஸ்தீன மக்களுக்குக் கிடைத்துவிடாமல் பயங்கரவாத இஸ்ரேல் அரசு தடுத்த போது, இந்திய முஸ்லிம்களிடம் பணமும் மருந்தும் வசூலித்து கோடிக் கணக்கில் அங்கே அனுப்பி இஸ்லாம் ஏற்படுத்திய சர்வதேச சகோதரத் துவத்தை இஸ்ரேல் அரசால் ஒழிக்க முடி யாது என்பதை செயலில் கட்டியவர்.

முஸ்லிம்களுக்கு எதிரான அரச பயங்கர வாதத்தை தோலுரித்துக் காட்டும் அரிய நூல்களை துணிச்சலுடன் பதிப்பித்து வெளியிட்டு வருபவர்.

அசாமிலும் உ.பி.முசாபர் நகரிலும் கலவரத்தால் பாதிக்கப்பட்டு உள்நாட்டி லேயே அகதிகள் முகாமில் வாழும் முஸ்லிம்களுக்குத் தேவையான அடிப்படை உதவிகளைச் செய்து வருபவர்.

நிதிச் சுமைகளுக்கு மத்தியிலும் தன் 'மில்லி கெஜட்' ஆங்கில இதழை இந்துத்துவ

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முழக்க மாக நடத்தி வருபவர்.

மேற்கு வங்காளத்தின் எல்லையோர கிராமங்களில் வாழும் வங்காள மொழி பேசும் முஸ்லிம்கள் இந்தியர்களல்ல. அவர்கள் வங்காளிகள். பங்களாதேஷிலிருந்து வந்து, சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் என்றொரு மகாப் பொய்யை இந்துத்துவ சக்திகள் கூறி வருகின்றன. மைய அரசின் சில துறைகளும் அதை வழி மொழிவது போல் பேசி வருகின்றன. இந்துத்துவாவின் ஊது குழலாக.

இந்த படுபயங்கர பாதகச் செயலுக்கு எதிராகக் களம் இறங்கினார். அங்கே அரசின் அனுமதியுடன் பள்ளிக் கூடங்களைத் திறந் தார். அங்கு பயின்று முடித்தவர்களுக்கு பள்ளிக் கூடச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தப் பள்ளிக் கூட சான்றிதழ் அவர்கள் அரசின் குடியுரிமை பெறுவதற்கான சான்றாக ஏற்கப்பட்டது.

இப்படி இவர் ஆற்றிய பணி, இந்திய முஸ்லிம்களை, 'வெளிநாட்டிலிருந்து வந்தேறி அந்நியர்கள்' என்று காட்டிட முயன்ற இந்துத்துவ சக்திகளின் திட்டத்தை முறியடித்தது. இதன் மூலம் இந்தியாவில் பிறக்கும் முஸ்லிம்கள் 'தாம் இந்தியர்கள்' என்று நிருபித்திடவே பெரும் சட்டப் போராட்டம் ஒன்றை நடத்திட வேண்டிய அவலத்திலிருப்பதை உலகுக்குக் காட்டினார்.

'கர்கரேயைக் கொலை செய்தது யார்?', '26/11 விசாரணை நீதித்துறை தோற்றது ஏன்?' ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளி யிடுவது இன்றைய காலகட்டத்தில் எவ்வளவு பெரிய சிக்கலான சவாலான பணி என்பதை யெல்லாம் பற்றிக் கவலைப்படாமல் இந்துத் துவாவுக்கு எதிரான பணிகளை தைரியமாக ஆற்றி வருபவர்.

மேற்கண்ட நூல்களை தமிழில் வெளியிடும் உரிமையை எமது வேர்கள் வெளியீட்டகத்துக்கு வழங்கியுள்ளார். எமது அழைப்பை ஏற்று சிறப்புரையாற்ற வருகை தந்துள்ளார்.

## தி இந்து - மார்ச் 18, 2014 அன்றைய நாளிதழில் நூல் வெளியீட்டு விழா பற்றி வெளியான செய்தி

# மும்பை தீவிரவாதத் தாக்குதல் வழக்கை சரியாக விசாரிக்கவில்லை

▸▸ மகாராஷ்டிர முன்னாள் ஐ.ஜி. முஷ்ரிப் குற்றச்சாட்டு

சென்னை

மும்பை குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து சரியான விசாரணை நடத்த முடியாமல் நீதித்துறை தோல்வி யடைந்து விட்டதாக, ஓய்வு பெற்ற மகாராஷ்டிர காவல்துறை ஐஜி எஸ்.எம்.முஷ்ரிப் குற்றம்சாட்டியுள்ளார்.

பல ஆயிரம் கோடி ரூபாய் முத்திரைத்தாள் மோசடி வழக்கை விசாரித்து, பல்வேறு உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர் மகாராஷ்டிர காவல்துறை முன்னாள் ஐஜி எஸ்.எம்.முஷ்ரிப். இவர் எழுதியுள்ள '26/11 மும்பை தாக்குதல் விசாரணையில் தோல்வியுற்ற நீதித்துறை' என்ற புத்தகம், சென்னையில் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. மில்லி கெசட் ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் ஜபருல் இஸ்லாம்கான், இந்தப் புத்தகத்தை வெளியிட்டார். 218 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில், டிவிடி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அதில் மும்பைத் தாக்குதல் குறித்து முரண்பாடுகள் கொண்ட வீடியோ பதிவுகள் உள்ளன.

புத்தகம் குறித்து எஸ்.எம். முஷ்ரிப் பேசியதாவது:

**விசாரணை குறித்த மேல்முறையீட்டு மனு நிலுவையில் உள்ள நிலையில், தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வைத்து, சர்ச்சைக்கு மத்திய உளவுத்துறை முற்றுப்புள்ளி வைத்துள்ளது.**

மகாராஷ்டிராவின் தீவிரவாத எதிர்ப்புப் படை தலைவரான ஹேமந்த் கர்கரே, மும்பைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது கொலை தீவிரவாதி என்று கூறப்படும் அஜ்மல் கசாபால் நிகழ்த்தப்படவில்லை. மத்திய உளவுத்துறையால், ஏற்பாடு செய்யப்பட்ட சிலரால் வேண்டு மென்றே நிகழ்த்தப்பட்டது.

துறவி பிரக்யாசிங் தாகூர் வாக்குமூலப்படி ஐதராபாத், மாலேகான், டெல்லி மக்கா மசூதி உள்ளிட்ட பல்வேறு குண்டுவெடிப்பு சம்பவங்களில் அபினவ் பாரத் என்ற அமைப்பினர்தான் ஈடுபட்டுள்ளனர். இதை ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார். இதற்காக மூன்று லேப்டாப்களைக் கைப்பற்றினார். அதில் 48 வகையான ஆடியோக்கள் இருந்தன. ஆனால் அதை வெளியே விடாமல் இருப்பதற்கான முயற்சியில், மத்திய உளவுத்துறை ஈடுபட்டது.

அதன் ஒருகட்டமாகவே மும்பைத் தாக்குதலை மத்திய உளவுத்துறையின் மூலம் அரங்கேற்றி, அதில் ஹேமந்த் கர்கரேவை கொன்றுவிட்டனர். இந்த சம்பவத்துக்கான விசாரணையில் நீதிமன்றமும் உரிய அடிப்படை ஆதாரங்களை ஆராயாமல் உத்தரவுகளைப் பிறப்பித்தது. இந்த விசாரணை குறித்த மேல்முறை யீட்டு மனு நிலுவையில் உள்ள நிலையில், தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வைத்து, சர்ச்சைக்கு மத்திய உளவுத்துறை முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

இவர் ஏற்கெனவே 'கர்கரேவைக் கொன்றது யார்' என்ற தலைப்பில் வெளியிட்ட புத்தகம், பெரும் பர பரப்பை ஏற்படுத்தியது. தற்போது மத்திய உளவுத்துறையையும் நீதித் துறையையும் விமர்சித்து இரண் டாவது புத்தகம் வெளியிட்டுள்ளார்.

# மரணத்தின் மடியில் இஃவான்கள் தொடரும் இலட்சியப் பயணம்




**2011 ஆண்டு** அரபுலகில் மக்கள் எழுச்சி உருவானது. துனூஷியாவைத் தொடர்ந்து எகிப்திலும் எழுச்சி ஏற்பட்டது. இலட்சக் கணக்கான மக்கள் தஹ்ரீர் சதுக்கத்தில் திரண்டு போராடினார்கள். முபாரக் ஆட்சி வீழ்ச்சிக்கு பின்பு எகிப்து வரலாற்றில் முதன் முறையாக தேர்தல் நடந்தது. தேர்தலில் இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் முஹம்மது முர்சி அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆட்சிக்கு வந்த பிறகு இஸ்லாமிய அரசியல் சாசனம் தயாரிக்கும் வேலைகளை முடுக்கி விட்டார் முர்சி.

### நவீன இஸ்லாமிய அரசியல் சாசனம்

இஸ்லாம் ஜனநாயகத்துக்கு எதிரானது என்றே பன்னெடுங்காலமாக பலர் பேசி வந்தனர். ஆனால் இஸ்லாம் ஜனநாயகத்தை விட விரிவானது என்றார்கள் இக்வான்கள்.

இஸ்லாம் மன்னராட்சியையும், சர்வாதிகார ஆட்சியையும் ஆதரிக்கும் மார்க்கம் என்றும்; இஸ்லாத்தைப் பின்பற்றினால் அறிவுத்துறையில் மேற்கத்திய சமுதாயத்துடன் போட்டியிட இயலாது என்றும் துருக்கி சர்வாதிகாரி நாத்திகன் கமால் அதாதுருக் பிரச்சாரம் செய்த காலத்தில் இஸ்லாமிய ஆட்சியின் மேன்மையை கூறி பிரச்சாரம் செய்தார் இமாம் ஹஸனுல் பன்னா.

துருக்கியின் அதாதுருக், மேற்கத்திய மோகத்தில் அரபு வடிவத்தில் இருந்த துருக்கி மொழியை ஆங்கில வடிவத்துக்கு மாற்றிய சமயத்தில், அரபு மொழி வடிவத்தில் இருந்த மத்திய ஆசிய முஸ்லிம் மொழிகளும் (உம் உஸ்பெக், குர்து) கிழக்காசிய மொழிகளும் ( உ.ம் மலாய், இந்தோனேஷிய மொழி) அரபு வடிவத்தில் இருந்து ஆங்கில வடிவத்துக்கு அந்நாடுகளின் ஆட்சியாளர்களால் மாற்றப்பட்டன. அச்சமயத்தில் தாஹா ஹுஸைன் போன்ற நவீன அரபு இலக்கியவாதிகள் அரபு மொழியையும் ஆங்கில வடிவத்துக்கு மாற்ற முயற்சித்தனர். அதனை முழுமூச்சுடன் தடுத்து நிறுத்தியவர்கள் இக்வான்களே.

அவ்வாறே இஸ்லாம் ஆட்சிக்கு வந்தால் முன்பு ஐரோப்பாவில் அதிகாரம் தேவாலயங்களிடம் இருந்ததைப் போன்று அதிகாரம் முஸ்லிம் மத அறிஞர்களிடம் போய் சிக்கி விடும் என்று நாத்திகர்கள் பிரச்சாரம் செய்த பொழுது அரசியல் சாசனம் இயற்றி இஸ்லாமிய ஆட்சி நடத்த முடியும் என்றவர்களும் இக்வான்களே.

சமகால உலகில், முஸ்லிம் நாடுகள் உட்பட உலகில் எந்த நாட்டிலும் நவீன இஸ்லாமிய சாசனம் இல்லாத நிலையில், புதிய அரசியல் சாசனத்திற்கான வாக்கெடுப்பு 2012 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15, 22 தேதிகளில் எகிப்தில் முர்சி ஆட்சியில் இரண்டு கட்டமாக நடந்தது. பதிவான வாக்குகளில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் (64 சதவீதம்) புதிய அரசியல் சாசனம் அமைந்திட ஆதரவு தந்தனர். தொடர்ந்து நவீன அரசியல் சாசனம் இயற்றும் வேலைகளை முடுக்கி விட்டார் முர்சி. அரசியல் சாசன குழு அமைக்கப்பட்டு, அரசியல் சாசனத்திற்கான விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அதில் எகிப்து ஓர் இஸ்லாமிய குடியரசு நாடு என்றும், புதிய சாசனம் திருக்குர்ஆனின் நிழலில் அமையும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசியல் சாசனக் குழுவில் இருந்து விலகினார்கள் மதச்சார்பற்றவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் நாத்திகர்கள்.

தொடர்ந்து அரசியல் சாசனத்தின் தகவல்கள் முன்னுக்கு பின் முரணாக

பரப்பப்பட்டன. எகிப்தின் எல்லா மாகாணங்களிலும் உள்ள இக்வான் அலுவலகங்கள் தாக்கப்பட்டன. கெய்ரோவில் உள்ள இக்வானுல் முஸ்லிமீன் தலைமை அலுவலகம் தொடர்ந்து எதிர்ப்பாளர்களால் முற்றுகையிடப்பட்டது.

ராணுவமும், காவல்துறையும் இக்வான்கள் தாக்கப்படுவதை வேடிக்கை தான் பார்த்தார்களே தவிர எதிர்ப்பாளர்களை தடுக்கவில்லை. நிலைமை எல்லை மீறியதால், தலைமை அலுவலகத்தை இக்வான் இளைஞர்கள் கைகோர்த்து இரவு பகலாக பாதுகாத்தனர். பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட இக்வான் இளைஞர்கள் மட்டும் சுமார் 25 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 2013 ம் ஆண்டு ஜுன் 30 தேதி எகிப்தில் உள்ள தஹ்ரீர் சதுக்கத்தில் திரண்டு முர்சி ஆட்சிக்கு எதிராக இடதுசாரிகள், மதச்சார்பற்றவர்கள் எனும் நாத்திகர்கள் , கிறிஸ்தவர்கள் ஆகியோருடன் முஸ்லிம்களுக்கு மத்தியில் உள்மார்க்க விவகாரம் பேசுவதை இலட்சியமாக கொண்டு இயங்கிடும் ஸலஃபிகளும் சேர்ந்து முர்சி ஆட்சிக்கு எதிராக மூன்று நாட்கள் போராடினார்கள்.

ஏற்கனவே திட்டமிட்டபடி இப்போராட்டத்தை காரணம் காட்டி முர்சி அரசை ராணுவம் டிஸ்மிஸ் செய்தது. தொடர்ந்து முர்சியும், முர்சி ஆட்சியில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்களும் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து மன்சூரா நகரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பை காரணம் காட்டி இக்வான்கள் இயக்கமும் தடை செய்யப்பட்டது.

எதிர்த்து அறவழியில் போராடிய மக்கள் நித்தம் நித்தம் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட இக்வான்களில் 529 பேருக்கு தூக்கு தண்டனை விதித்து கடந்த 24.03.14 அன்று எகிப்து கிரிமினல் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

### இஸ்லாத்தின் வழியில் இக்வான்கள்

உலகின் எல்லா பிரச்சினைகளுக்கும் இஸ்லாத்தை தீர்வாக தருபவர்கள் இக்வான்கள். இஸ்லாமிய ஆட்சியாளர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்வையும், நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் வாழ்வையும் தான் இக்வான்கள் உதாரணம் காட்டுவதுண்டு.

2012 ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று இக்வான்கள் இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் முஹம்மது முர்சி எகிப்து அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவரின் மனைவி நஜ்லா முஹம்மதிடம் நிருபர்கள் இப்படிக் கேட்டனர். எகிப்தின் முதல் பெண் மணியாக நீங்கள் என்ன உணர்கிறீர்கள்?

இக்வான்கள் இயக்கத்தில் இஸ்லாமிய பயிற்சி பெற்ற நஜ்லா இப்படிச் சொன்னார். என்னை நான் முதல் பெண்மணியாக உணரவில்லை. முதல் பணியாளராக உணர்கின்றேன். மேலும் சொன்னார். அமீருல் முஃமினீன் உமர் இப்னுல் கத்தாப் (ரழி) அவர்களின் மனைவியைப் போன்று முர்சிக்கு உதவியாக இருப்பேன். இதற்கு முன்னர் முதல் பெண்மணியாக இருந்த அன்வர் சாதாத் மனைவி ஜீஹான் சாதாத் ஐப் போன்றோ, ஹுஸ்னி முபாரக்கின் மனைவி சூசான் முபாரக்கைப் போன்றோ தாம் இருக்கப் போவதில்லை என்று அடக்கமாக பதிலளித்தார் நஜ்லா. இன்னொரு முறை அதிபர் முர்சி வீட்டில் எப்படி ஒரு கணவராக நடக்கின்றார்? என்று நஜ்லா விடம் கேட்டனர் நிருபர்கள்.

அதிபராக ஆன பின்பு அவர், இரவில் படுக்கையில் தலையணை நனைய அழுகிறார் என்று பதிலளித்தார் நஜ்லா.

முர்சி ஆட்சியில் நித்தம் நித்தம் போராட்டம் நடத்தி சட்டம் ஒழுங்கை சீர் குலைத்தார்கள் அவரின் எதிர்ப்பாளர்கள். முர்சி ஆட்சிக்கு எதிராக எதிர்ப்பாளர்கள் நடத்திய போராட்டத்தில் கெய்ரோவில் உள்ள இக்வான்களின் தலைமை அலுவலகம் பலமுறை தாக்கப்பட்டது. நித்தம் நித்தம் போராட்டங்கள், வன்முறைகள், வாகனங்கள் எரிப்புகள், இக்வான்கள் அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. போராட்டத்தை அடக்க முர்சி ராணுவத்தையோ, காவல்துறையையோ பயன்படுத்தி யாரையும் கொல்லவில்லை.

அவரது ஆட்சியில் அரசு எதிர்ப்பாளர்களால் தாக்கப்பட்டு 25 இக்வான்கள் தான் இறந்தார்களே தவிர போராட்டம் நடத்திய அவரது எதிர்ப்பாளர்கள் யாரும் கொல்லப் படவில்லை.

### மக்களில் ஒருவராக நின்ற முர்சி

2012 ம் ஆண்டு ஜுன் 30 ந் தேதி தஹ்ரீர் சதுக்கம் வந்த முர்சி அங்கு குழுமியிருந்த அவரது எதிர்ப்பாளர்களுக்கு மத்தியில் ஜனாதிபதி என்ற நிலையில் இருந்து இறங்கி அவர்களில் ஒருவராக நின்று இப்படிச் சொன்னார். நான் சில தவறுகள் செய்திருக் கலாம். அதற்காக வெளிநாடுகளின் சதிகளுக்கு

பலியாகி விடாதீர்கள். (Source : www.middleeastmonitor.com 13-3-14) முர்சியின் இவ்வணுகுமுறை சமகால உலகில் ஜனாதிபதியாக இருந்த யாரும் செய்யாதது. அவரைத் தான் பெரும் தீங்கு செய்தவரைப் போன்று கைது செய்து காற்று புகாத சிறையில் ராணுவம் அடைத்துள்ளது.

### இக்வான்கள் ஏன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடவில்லை?

நவீன உலகில் இஸ்லாத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது என்று கமால் அதாதுருக் கர்ஜித்த சமயத்தில் இஸ்லாமிய எழுச்சியை தொடங்கியவர்கள் இக்வான்கள்.

இக்வான்களைப் பொறுத்தவரை இஸ்லாத்திற்காக உயிர்களைத் தருவார்களே தவிர இஸ்லாத்தின் பெயரால் யாரையும் கொல்வதை அவர்கள் ஏற்றதில்லை.

2001 அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பிறகு இஸ்லாத்தையும் தீவிரவாதத்தையும் சம்மந்தப்படுத்தி மேற் குலகம் பிரச்சாரம் செய்தது. ஜிகாதையும் தீவிரவாதத்தையும் ஒன்றுபடுத்தி மேற்கத்திய ஊடகங்கள் அவதூறு பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது ஜிகாத் வேறு தீவிரவாதம் வேறு என்று கூறி விளக்கம் தந்தார்கள் இக்வான்கள்.

புகாரியில் ஒரு நபிமொழி உண்டு. ஹுனைன் யுத்தம் முடிந்த பிறகு கனீமத் போர்ச் செல்வங்களை பங்கீடு செய்யும் பொழுது நபிளாரைப் பார்த்து ஒருவர் சொன்னார். முஹம்மதே.. நீதியாக நடந்து கொள்ளுங்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அட நாசமே! இறைத் தூதரான நான் நீதியாக நடக்கவில்லையென்றால், (என்னை விட) வேறு யார் நீதியாக நடக்க இயலும்?



சபையில் இருந்த உமர் (ரழி) அவர்கள் சொன்னார்கள். நபியே இவர் முனாஃபிக். இவரை நான் கொன்று விடட்டுமா?

நபி (ஸல்) கூறினார்கள். வேண்டாம். அவரை விட்டு விடுங்கள். ஏனெனில், அவரை கொன்றால், முஹம்மது தமது தோழர்களை கொலை செய்கிறார் என்ற பழி வந்துவிடும். (புகாரி)

அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் , சவூதி, பஹ்ரைன், துபாய், குவைத் ஆகிய நாடுகள் எகிப்து ராணுவத்திற்கு பின்புலமாக இருந்தது இப்போது அம்பலப்பட்டுள்ளது. இதனை ஏற்கனவே இக்வான்கள் அறிந் திருக்கவே செய்தார்கள். இந்நிலையில், ஆயுதப் போராட்டம் எகிப்தை மற்றொரு சிரியாவாகவே மாற்றி விடும்.

போரில் சம்மந்தப்படாத பல இலட்சம் பேர் உயிரிழக்கும் அபாயமும் ஏற்படும். இக்வான்கள் உதட்டளவு கொள்கை வாதிகள் அல்ல. மாறாக அவர்கள் இறையச் சத்துக்கு முக்கியத்துவம் தருபவர்கள். அப்பாவிகள் படுகொலைக்கு காரணமாக இருந்தால் மறுமையில் அல்லாஹ்விடம் எப்படி பதில் சொல்வது என்று அதிகம் அஞ்சினார்கள் இக்வான்கள்.

அத்துடன் இஸ்லாத்தை கையில் தூக்கிப் பிடிக்கும் இக்வான்கள் இஸ்லாத்தின்

மிகக் குறைந்த மக்களைக் கொண்ட இயக்கமாக இருந்த இக்வான்கள் இயக்கம் 77 ஆண்டு கால அடக்குமுறைகள், சித்ரவதை களுக்கு அப்பால் எகிப்து மக்களின் 60 சதவீதம் பேர் தொடர்பு வைத்துள்ள இயக்கமாக மாறியுள்ளது.

துருக்கியில் ஏற்பட்டது போன்று எகிப்து மக்கள் அனைவரும் இக்வான்கள் பின்னால் அணி திரளும் காலம் நிச்சயம் வரவே செய்யும்.

எதிர்காலத்துக்கு குந்தகம் ஏற்படுவதை எப்போதும் விரும்பியதில்லை.

இக்வான்களிடம் அகன்ற கனவு ஒன்று இருக்கின்றது. அது உலகளாவிய இஸ்லாமிய எழுச்சி, இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமியப் பரவல் ஆகியவையாகும்.

ஆதலால் தான் அவசரப்பட்டும், உணர்ச்சி வசப்பட்டும் எந்த முடிவையும் அவர்கள் எடுப்பதில்லை. நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் தாயிஃப் நிகழ்வும், ஹுதைபிய்யா நிகழ்வும் இழப்பாக தெரிந்தாலும் அதில்தான் அல்லாஹ் மகத்தான வெற்றியை வைத்திருந்தான்.

மிகக் குறைந்த மக்களைக் கொண்ட இயக்கமாக இருந்த இக்வான்கள் இயக்கம் 77 ஆண்டு கால அடக்குமுறைகள், சித்ரவதைகளுக்கு அப்பால் எகிப்து மக்களின் 60% பேர் தொடர்புவைத்துள்ள இயக்கமாகமாறியுள்ளது.

துருக்கியில் ஏற்பட்டது போன்று எகிப்து மக்கள் அனைவரும் இக்வான்கள் பின்னால் அணி திரளும் காலம் நிச்சயம் வரவே செய்யும். அதுவரை இம்மார்க்கத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தர இக்வான்கள் தயாராக இருக்கின்றனர். (அல்லாஹ் போதுமானவன்)

# அல்லாஹ்வை நெருங்கும் இக்வான்கள்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்த பின்பு எகிப்து வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அடக்குமுறைகளை எகிப்து ராணுவம் செய்து வருகிறது.

எதிர்த்து அமைதியான வழியில் போராடும் இக்வான்கள் ஈவு இரக்கமின்றி கொலை செய்யப்பட்டு வருகின்றனர். பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், பத்திரிகையாளர்கள் என அனைத்து தரப்பினரும் ராணுவத்தின் அராஜக செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### ராபியா அதவியா படுகொலை

கிழக்கு கெய்ரோவில் உள்ள ஊர் நஸ்ரு. இங்குள்ள மைதானத்தின் பெயர் ராபியா அதவியா. புகழ் பெற்ற எகிப்து பெண் சூபி அறிஞரான ராபியா அதவியா பெயரில் அமையப் பெற்ற இம்மைதானத்தில் முர்சி பதவி நீக்கப்பட்ட 03-07-2013-ல் நுழைந்தார்கள் முர்சி ஆதரவாளர்கள்.

தொடர்ந்து ஆகஸ்டு 14-ந்தேதி வரை முற்றுகை நீடித்தது. ஆகஸ்டு 14-ந்தேதி ரமலான் பிறை 18 அன்று அம்மைதானத்தில் நுழைந்த எகிப்து ராணுவத்தினர் ஜாலியன் வாலாபாக் படுகொலையை விஞ்சும் அளவுக்கு கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இக்வான்களின் கணக்குப்படி மைதானத்தில் குழுமியிருந்தவர்களில் பெண்கள் , குழந்தைகள், உட்பட 1132 பேர் பலியானார்கள். 5000 பேர் காயமடைந்தார்கள். 350 பேர் காணாமல் போனார்கள்.

மைதானத்தில் இருந்து கைது செய்யப்பட்டு, கையில் விலங்கிட்டு கொண்டு செல்லப்பட்ட இக்வான்களின் வேன் மீது கண்ணீர் புகை குண்டு வீசி 37 இக்வான்களை படுகொலை செய்த சம்பவமும் அப்போது நடந்தது.

உலகை உலுக்கிய அச்சம்பவத்தில் இக்வான் தலைவர்களில் ஒருவரான முஹம்மது பல்தாஜி இன் ஒரே மகள் அஸ்மா (வயது 17) சுட்டுக் கொல்லப்பட்டார். ராணுவத்தின் அடக்குமுறையால் பல்தாஜியால் மகளின் ஜனாசா தொழுகையில் கலந்து கொள்ள இயலவில்லை.

### தேம்பி தேம்பி அழுத எர்துகான்

மகளின் ஜனாசா தொழுகையில் கலந்து கொள்ள இயலாத நிலையில், இறந்து போன மகளுக்கு பல்தாஜி எழுதிய கடிதம் உலக அரங்கில் கடும் சோகத்தை ஏற்படுத்தியது.

தொலைக்காட்சி உரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான் இடம் அக்கடிதம் வாசித்து காட்டப்பட்டது. அப்போது பலமுறை கதறி அழுதார் எர்துகான்.

உள்ளத்தை உருகச் செய்திடும் யுட்யூபில் பதிவாகியுள்ள அக்கடிதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு பின்வருமாறு, எனது நேசத்திற்குரிய மகளே..! ஷஹீது அந்தஸ்தை அடைந்த எனது அன்பு மகள் அஸ்மாவே!

நீ போய் விட்டாய் என்று நான் கூற மாட்டான். நிச்சயம் மறுமையில் நாம்

சந்திப்போம். அநீயாயக்காரர்களுக்கு எதிராக தலையை நிமிர்த்தி நீ வாழ்ந்தாய். நீ சுதந்திரத்தை விரும்பியவள். அடிமைத் தனத்தை உடைத்தெறிய புறப்பட்டவள்.

மகளே! சமுதாயப் பணி என்று வாழ்ந்த என்னால் உனக்கு அதிக நேரம் ஒதுக்கி தர இயலவில்லை. எனக்கு நேரம் கிடைக்காமல் இருந்தது, உன்னுடன் நான் நேரத்தை கழித்திருக்க வேண்டுமே!

ராபியா அதவிய்யா மைதானத்தில் தான் நாம் ஒன்றாக அமர்ந்திருந்தோம். அப்போது நீ என்னை கண்டித்தாய். எங்களை விட்டு நீங்கள் பாராமுகமாக இருக்கிறீர்கள் என்று.

மகளே! சொர்க்கத்தில் நாம் சந்திப் போம். அங்கே நாம் உறவாடுவோம். நீ ஷஹீதாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் திருமண ஆடை அணிந்தவளாக உன்னை கனவில் கண்டேன்.

அப்போது நீ அழகாக இருந்தாய். அதற்கு உலகில் உதாரணம் காட்ட இயலாது. இன்றிரவு தான் உன்னுடைய அந்த திருமண ஆடை அணிந்த இரவா?

மகளே... உன்னை அல்லாஹ் திருப்திப் பட்டு விட்டான். உனது ஷஹாதத்தை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு விட்டான். நாம் சத்தியத்தில் இருக்கின்றோம், நமது எதிரி அசத்தியத்தில் இருக்கின்றான் என்ற நம்பிக்கையை நீ அதிகப்படுத்தி விட்டாய்.

மகளே... உனது ஜனாசாவில் கலந்து கொள்ளாதது எனக்கு கடும் துயரத்தை தந்துள்ளது. கடைசியாக கூட உன் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லையே.. உன் நெற்றியில் என்னால் முத்தம் தர முடிய வில்லையே... உனக்கு என்னால் ஜனாசா தொழுகை நடத்த முடியவில்லையே.. ( நானல்லவா அதனை தலைமை தாங்கி நடத்த வேண்டும்)

அல்லாஹ்வின் மீதாணையாக ! எனது பாசத்திற்குரிய மகளே... மரணத்தின் மீது பயந்தோ, கொடூரமான சிறைக்கு பயந்தோ அதற்கு நான் வராமல் இல்லை. மாறாக நாம் போராடும் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தான் நான் வரவில்லை. நீயும் அதற்காகத் தான் உனது உயிரை தந்தாய். அநியாயக்காரர்கள் சுட்ட குண்டு உனது நெஞ்சை துளைத்தது. பரிசுத்தமான உனது நெஞ்சை அல்லவா அவர்கள் துளைத்துள்ளார்கள்.

மகளே..நீ அல்லாஹ்வை உண்மைப் படுத்தி விட்டாய். அல்லாஹ் உன்னை உண்மைப்படுத்தி விட்டான். உனக்கு ஷஹாதத்தை அல்லாஹ் தந்துள்ளான்.

நிச்சயம் மறுமையில் நாம் சந்திப்போம். நபி (ஸல்) அவர்கள் மற்றும் சங்கைக்குரிய ஸஹாபிகளுடன் ஹவ்ளுல் கவ்சர் தடாகத்துக்கு அருகில் நாம் சந்திப்போம்.

சக்தி வாய்ந்த அரசன் அல்லாஹ் விடத்தில் மெய்யான இருக்கையில் (காண்க அல் குர்ஆன் 54:55) நாம் சந்திப்போம்.

அங்கே நாம் நிம்மதியாக சந்திப்போம். நபி (ஸல்) அவர்கள் நமக்கு நீர் புகட்டு வார்கள். அதற்கு பிறகு நமக்கு தாகம் ஏற்படாது.

இக்கடிதம் வாசிக்கப்பட்ட ஐந்து நிமிடமும் தொலைக்காட்சி நேர்காணலில் பல முறை கதறி அழுதார் இஸ்லாமிய உலகின் சக்தி வாய்ந்த மனிதரான எர்துகான். அதற்கு பிறகு கண்ணீர் மல்க அவர் கூறியதாவது,

முஹம்மது பல்தாஜியின் துயரம் என்னை மிகவும் வேதனைக்குள்ளாகி இருக் கின்றது. பல்தாஜியைப் போன்றே நானும் சமுதாயப் பணியில் ஈடுபடுபவன்.

இரவில் அதிக நேரம் விழித்திருப்பதால் மிகவும் தாமதமாகவே என்னால் வீட்டுக்கு வர இயலும். ஒருநாள் இரவில் நான் தாமதமாக வீட்டுக்கு வந்தேன். எனது மகள் வீட்டு வாசலில் தாளில் எழுதி வைத்திருந்தாள். தந்தையே.. ஓர் இரவாவது எங்களுடன் தங்கியிருங்களேன்!! என்றாலும் அதற்கு பிறகும் கூட அவளுடன் என்னால் ஓர் இரவைக் கூட கழிக்க இயலவில்லை. ஏனெனில் நாங்கள் சமுதாயத்துக்காக உழைக்கிறோம்.

பிள்ளைகள் எல்லாம் தூங்கிய பிறகு தான் வீட்டுக்கு வருவேன். எனது சூழ்நிலை அப்படி. பாசத்திற்காக ஏங்கும் பிள்ளையின் உணர்வு எனக்கு தெரியும்.

தனது ஒரே பெண் பிள்ளையின் ஜனாசாவில் பல்தாஜி கலந்து கொள்ள முடியாமல் போனது தான் என்னை தேம்பி தேம்பி அழ வைக்கிறது.

ஷஹாதத் ஒரு பெரும் பாக்கியம். 17 வயது இளம்பெண் அஸ்மா உலகில்

எதனையும் அனுபவிக்காமல் அதனை பெற்று விட்டாள். என்றார் எர்துகான்.

### நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்

ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு பின்பு ஹிட்லர் காலத்தை நினைவுபடுத்தும் வகையில், ராணுவம் பொதுமக்களை வேட்டையாடி வருகிறது. இக்வான்கள் மட்டுமல்ல... வீதியில் நடந்து செல்லும் எந்த இயக்கத்துடனும் தொடர்பில்லாத சாதாரண பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எகிப்து சமூக பொருளாதார உரிமைகள் மையத்தின் (Egyptian Centre for Social and Economic Rights) கணக்குப்படி ஆட்சிக் கவிழ்ப்பு நடந்த கடந்த ஆண்டு (2013) ஜுலை முதல் டிசம்பர் மாதம் இக்வான்கள் இயக்கம் தடை செய்யப்படுவதற்கு முன்பு வரை 21,317 பேர் அதிகாரப்பூர்வமாக சிறையில் அடைக் கப்பட்டுள்ளனர். (அல்ஜஸீரா 11-3-14)

தற்போதைய நிலவரப்படி எகிப்தின் அனைத்து சிறைச்சாலைகளும் நிரம்பிய தால், பாழடைந்த இடங்களிலும், புதர் களிலும் மக்கள் அடைக்கப்பட்டு வரு கிறார்கள்.

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற சிறை களில் அடைக்கப்பட்டிருக்கும் பெண்கள், முதியோர்கள் அடையும் துன்பங்கள் சொல்லி மாளாதவை. இத்துடன் சித்ர வதைகள், தாங்க முடியாத அளவுக்கு அடிப்பது, குடும்ப பெண்கள் மற்றும் மாணவிகளை பாலியல் தொந்தரவு செய்தல் ஆகியன சிறைச்சாலைகளின் அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டன.

அல்அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் பத்து மாணவிகளை கைது செய்து சிறையில் அடைத்துள்ள ராணுவ அரசு, அம் மாண விகள் மீது பாலியல் ரீதியாக துன்புறுத்தி யதாக தெரிகிறது. சிறையில் இருந்து வெளிவந்த அல்அஸ்ஹர் மாணவி ஆயத் ஹமதா அளித்த தொலைக்காட்சி பேட்டி (online newspaper Rassd's Youtube channel) இதனை அம்பலப்படுத்தியது.

சிறைக்குள் அடைபட்டவர்களை மட்டுமல்ல.. சிறைக் கைதிகளை பார்க்க வரும் பெண்களைக் கூட எகிப்து ராணுவ அதிகாரிகள் துன்புறுத்தி வருகின்றனர்.

### அல் ஜஸீரா போட்டோ கிராபர் பேட்டி

அல்ஜஸீராவின் எகிப்து பிரிவு புகைப் பட கலைஞர் முஹம்மது பத்ரு. கடந்த ஏழு மாதங்களாக கெய்ரோ சிறையில் இருந்த இவர், அல்ஜஸீராவுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

சிறையின் கொடூரங்களை சந்தித்த வர்களில் நானும் ஒருவன். நான் அனுபவித்த சித்ரவதைகளை சில மணித்துளிகளில் கூற இயலாது. எனது நெஞ்சு பிளக்கும் அளவு நான் அடிக்கப்பட்டேன். தொடர்ந்து இரண்டு மணி நேரம் வரை நான் அடிக்கப் பட்டுள்ளேன்.

சிறையில் கால்களும், கைகளும் கட்டப் பட்டு வாசலில் தொங்க விடப்பட்ட நிலையில், அடிக்கப்பட்ட மனிதர்களை நான் பார்த்துள்ளேன். கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட 38 பேருடன் நான் சிறையில் தங்கியிருந்துள்ளேன். அவர்களில் சிலர் பத்திரிகையில் எழுதியதற்காக இக்குற்றச் சாட்டுக்கு ஆளாகி இருந்தார்கள்.

சிறையில் எனது வாழ்வில் மறக்க இயலாத கசப்பான நிகழ்வு ஒன்று நடந்தது. அது எனது மனைவி என்னை பார்க்க வரும் போது நடந்ததாகும்.

நான் சிறையில் இருக்கும் பொழுது பிறந்த கைக்குழந்தையுடன் அவள் வந்தி ருந்தாள். ஐந்து நிமிடம் மட்டுமே அவள் அனுமதிக்கப்பட்டாள். அதற்கு பிறகு எனது கண் முன்னாலேயே அவளை சிறைக் காவலர் ஒருவன் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்றான். அவள் கதறி அழுதாள். குழந்தையும் அழுதது. சிறைக் கம்பிகளுக்கு அப்பால் என்னால் இதனை பார்க்க மட்டுமே முடிந்தது. என் கண்முன்னால் எனது மனைவியை ஒருவன் அடித்தது எனது வாழ்வில் கசப்பான நிகழ்வு. அவ்வளவு சீக்கிரம் என்னால் அதனை மறக்க முடியாது, ( அல் ஜஸீரா 17-03-214)

### நபி (ஸல்).ஐ கனவில் கண்ட இக்வான்கள்

இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தின் துணைத் தலைவர் கய்ராத் ஷாதிர். 2011 அதிபர் தேர்தலில் இக்வான்கள் இயக்கம் இவரைத் தான் முதலில் அதிபர் வேட்பாள ராக அறிவித்தது. இவரது வேட்பு மனு தள்ளுபடியாகும் வகையில் அதிபர் தேர்தல் விதிகளை சேர்த்தது தேர்தல் ஆணையம்.

அதன் பிறகே டாக்டர் முஹம்மது முர்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

இக்வான்கள் இயக்கம் தடை செய்யப் பட்ட பிறகு கைது செய்யப்பட்டார் ஷாதிர். விஷ ஜந்துக்கள் நிறைந்த சிறையில் அடைக் கப்பட்ட ஷாதிரையும், அவரது மகன் சயீதையும் சந்தித்தார் ஷாதிரின் மகள் ஆயிஷா ஷாதிர்.

தந்தை மற்றும் சகோதரரை சந்தித்த பின்பு ஆயிஷா கூறியதாவது, நெருக்கடியான இடத்தில் அவர்கள் அடைக்கப்பட்டுள் ளனர். அந்நெருக்கடியில் இக்வான்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தை அனுபவிக் கின்றனர். அல்லாஹ்வின் நற்செய்திகளை அவர்கள் பெறுகின்றனர்.

(எனது தந்தை மற்றும் சகோதரர்) இருவரில் ஒருவர் கனவு கண்டார். அவர் நெருக்கடியான இடத்தில் இருக்கின்றார். அச்சமயத்தில் அவ்விடத்திற்கு நபி (ஸல்) அவர்கள் வந்து அங்கிருந்து மீட்டிச் செல் கிறார்கள்.

இன்னொருவர் இவ்வாறு கனவு கண்டார். அதில் சிறைக் கைதிகளுக்கான சட்டப்பூர்வ ஆதரவு தேசிய கூட்டமைப்பு தலைவர் ஷெய்கு சுல்தான் ஸலாஹ் இறைவனின் அன்பளிப்புகள் என்று எழுதப் பட்ட பைகளை இக்வான்களுக்கு விநியோ கித்தார்.

கடந்த 10-03-14 அன்று அல் மிஸ்ரிய்யூன் இதழில் இச்செய்தி வெளிவந்த போது வைகறை ஆசிரியர் அண்ணன் குலாம் முஹம்மது அவர்களிடம் இச்செய்தியை நான் (அபுல் ஹஸன் ஃபாஸி) தெரிவித்தேன். உடனே நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டதால் இக்வான்கள் ஷஹீதாவார்கள் என்றார்கள். இப்போது 24-03-14 அன்று 529 இக்வான்களுக்கு எகிப்து நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்து இருக்கின்றது.

அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை யாளர்களில் ஆண்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக் குறுதியை உண்மையாக்கி விட்டார்கள். அவர்களில் பலர் (இறந்து ஷஹாதத் எனும்) தங்களின் இலட்சியத்தை அடைந்து விட்டனர். வேறு சிலர் (மரணிக்கவில்லை என்றாலும் அதனை அடைய ஆவலுடன்) எதிர்பார்த்து இருக்கின்றனர். (என்ன நேரிட் டாலும் அவர்கள் தங்களின் வாக் குறுதியில் இருந்து) சிறிதும் மாறுபட்டு விடவில்லை. (அல்குர்ஆன் 33:23)

# எகிப்து : உதவியும் துரோகமும்

இஸ்லாமிய வரலாற்றைப் பொருத்த வரை முனாஃபிக்குகள் என்றழைக்கப்பட்ட மனிதர்களை நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கையில் தான் நம்மால் அறிய முடிகிறது.

முனாஃபிக்குகள் என்றால், நயவஞ்ச கர்கள் என்பது அதன் பொருள். உள்ளத்தில் ஒன்று - வெளியே ஒன்று என்று வாழும் இவர்கள் பணம், பதவி, சுகம் ஆகியவற்றுக் காக முஸ்லிம்களாக வாழ்பவர்கள்.

பணமா - மார்க்கமா? சுகமா மார்க் கமா? சொந்த நலனா மார்க்கமா? பதவியா மார்க்கமா? என்று வந்து விட்டால் இவர்கள் மார்க்கத்தை பின்னுக்கு தள்ளி விட்டு பணம், பதவி, சுகம், சொந்த நலன், கௌரவம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

மெய்யான இஸ்லாமிய ஆட்சி ஏற்படும் போது தான் யார் உண்மையான முஃமின்கள்? இஸ்லாமிய போர்வையில் வாழ்பவர்கள் யார்? என்று கண்டறிய முடியும்.

ஆதலால் தான் நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கையில் முனாஃபிக்குகள் இல்லை. மதீனாவுக்கு நபி (ஸல்) அவர்கள் வந்தவுடன் மெய்யான ஓர் இஸ்லாமிய ஆட்சியை அமைத்தார்கள். அச்சமயத்தில் அதுவரை தங்களின் சமுதாயங்களுக்கு தலைவர் பொறுப்பை ஏற்றிருந்த அவ்ஸ் கோத்திர தலைவர் சஃது இப்னு முஆது (ரழி) இம், கஸ்ரஜ்கோத்திர தலைவர் சஃது உபாதா (ரழி)யும் தலைமை பதவியை உதறி விட்டு, நபி (ஸல்) அவர்களின் பின்னால் அணி திரண் டார்கள்.

ஆனால், கஸ்ரஜ் கோத்திர மூத்த தலைவர்களில் ஒருவரான அப்துல்லாஹ் இப்னு உபய் இப்னு சலூல் என்பவரால் இதனை செய்ய இயலவில்லை. வேறு வழியின்றி இஸ்லாத்தை ஏற்ற அவர், நபி

(ஸல்) அவர்களின் பின்னால் மக்கள் அணி வகுப்பதை வெறுத்தார். இதற்காக பல விஷமங்களில் ஈடுபட்டார். மரணம் வரை இவ்வாறே வாழ்ந்த இவரே வரலாற்றில் முனாஃபிக் தலைவர் என்று அறியப்படுகிறார். நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக அவர் செயல்பட்டதற்கு பதவி என்பதைத் தவிர வேறு காரணமில்லை.

இஸ்லாமிய ஆட்சிக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் நாம் கடந்த (மார்ச்) இதழில் எகிப்து ஆட்சிக் கவிழ்ப்பில் அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக மூன்று முஸ்லிம் நாடுகள் பங்காற்றியதாக குறிப்பிட்டோம்.

உலக அரங்கில் வெட்டவெளிச்சமாக தெரியும் இச்சதியில் சவூதி, ஐக்கிய அரபு அமீரகம், குவைத் ஆகியவற்றுடன் பஹ்ரைன் நாடும் சேர்ந்துள்ளது இப்போது தெரிய வந்துள்ளது.

இக்வான்களைப் பொறுத்தவரை எகிப்தில் இஸ்லாமிய ஆட்சி, உலகெங்கும் இஸ்லாமிய எழுச்சி, உலக சகோதரத்துவம் ஆகியவற்றுக்காக உழைப்பவர்கள் தானே தவிர அமெரிக்கா உட்பட உலகில் எந்த நாட்டுக்கெதிராகவும், எந்த முஸ்லிம் தலைவருக்கெதிராகவும் சதி செயலில் அவர்கள் ஈடுபட்டவர்கள் இல்லை.

ஆனால் இக்வான்கள் வலியுறுத்தும் நவீன இஸ்லாமிய ஆட்சி வந்து விடக் கூடாது என்பதற்காக எல்லா முஸ்லிம் நாடுகளும் இக்வான்களை அழிப்பதற்கு முன்னணியில் நிற்கின்றன.

### கத்தாருக்கு நெருக்கடி தரும் சவூதி

இஸ்லாமிய உலகில் பொருளாதார வலிமையுள்ள நாடு மன்னராட்சி நடத்தும் சவூதி அரேபியா. உள்மார்க்க விவகாரங்கள் பேசுவதை ஆதரிக்கவும், ஆர்வப்படுத்தவும் செய்யும் அந்நாடு இஸ்லாமிய எழுச்சி குறித்தோ, இஸ்லாமிய ஆட்சி குறித்தோ, மன்னராட்சியின் அவலங்கள் குறித்தோ பேசிட எழுதிட அனுமதிப்பதில்லை.

கடந்த மாதம் இஸ்லாமிய அரசியல் குறித்து பேசிட யாருக்கும் அனுமதி இல்லை என்று வெளிப்படையாகவே அறிவித்தது சவூதி அரசு. (: சவூதி கெஸட் 10.03.14)

இஸ்லாமிய எழுச்சியோ, இஸ்லாமிய ஆட்சியோ ஏற்பட்டால் இதுநாள் வரை வாழையடி வாழையாக அனுபவித்து வந்த ஆடம்பர சுகத்தை இழக்க வேண்டியது வரும் என்பதைத் தவிர வேறு காரணம் அதற்கு இல்லை.

இதற்காகவே இஸ்லாமிய ஆட்சியையும், இஸ்லாமிய எழுச்சியையும், இஸ்லாமிய உலக சகோதரத்துவத்தையும் இலட்சியமாக கொண்டு இயங்கிடும் இக்வான்களை அந்நாடு எதிர்க்கின்றது.

### தூதரை வாபஸ் பெற்ற சவூதி

கடந்த மாதம் 21.02.14 ஜும்ஆவில், எகிப்து ஆட்சிக் கவிழ்ப்புக்கு அமீரகம் செய்த உதவிகளை அம்பலப்படுத்தி இருந்தார் சர்வதேச இஸ்லாமிய அறிஞர் இமாம் யூசுஃப் அல் கர்ளாவி.

அதற்கு முன்னதாகவே அமீரகத்துடன் இணைந்து இக்வான்களுக்கு உதவக் கூடாது என்றும், இமாம் யூசுஃப் அல் கர்ளாவியை பேச அனுமதிக்கக்கூடாது என்றும் சவூதி எச்சரித்திருந்தது.

சவூதியின் எச்சரிக்கையையும் மீறி கர்ளாவி 21.02.14 ஜும்ஆவில் பேசினார். அமீரகத்தை விட அதிகமாக முர்சி ஆட்சியை வீழ்த்திட எகிப்து ராணுவத்துக்கு உதவி செய்த நாடு சவூதி. எனினும் தமது உரையில் சவூதியை நேரடியாக கர்ளாவி குறிப்பிடவில்லை.

தனது எச்சரிக்கையை மீறி கர்ளாவி பேசியதால், வளைகுடா நாடுகளின் நாட்டாமையாக தன்னை கருதிக் கொள்ளும் சவூதி, பேயாட்டம் ஆடியது. அமீரகம், பஹ்ரைன் நாடுகளிடம் பேசி கத்தாரில் இருந்து தூதர்களை வாபஸ் பெற வைத்தது. சவூதி, அமீரகம், பஹ்ரைன் நாடுகள் கத்தாரில் இருந்து தங்களின் தூதர்களை 05.03.14 அன்று வாபஸ் பெற்றன. (அரப் நியூஸ் 06.03.14)

தொடர்ந்து, வளைகுடா நாடுகள் பாதுகாப்பு என்ற பெயரில் இக்வான்களுக்கு கத்தார் செய்யும் உதவிகளை நிறுத்தும்படி பலவகையில் சவூதி நிர்பந்தம் தந்தது. எனினும் கத்தார் அமீர் தமீம் இப்னு ஹம்து இக்வான்களுக்கு செய்யப்படும் உதவிகள் தொடரும் என்று அறிவித்தார். கத்தார் பேச்சுரிமை உள்ள நாடு. டாக்டர் யூசுப் அல் கர்ளாவி எங்களின் கண்ணியமிக்க குடிமகன். கத்தாருக்கு யாரும் பாடம் நடத்த வேண்டாம் என்றார்.

**இக்வான்களை பயங்கரவாதிகளாக அறிவித்த சவூதி**

வளைகுடா நாடுகள் பாதுகாப்பு என்று பேசியது பயன் தராததால் கத்தாரை அடிய பணிய வைக்கவும், இக்வான்களுக்கு அந்நாடு செய்யும் உதவியை பயங்கரவாதிகளுக்கு உதவி செய்வதாக காட்டவும் இக்வான்கள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக 07.03.14 அன்று அறிவித்தது சவூதி.

இது விஷயத்தில் அமீரகம் சவூதிக்கு துணை நின்றது. தூதரை வாபஸ் பெற்ற பஹ்ரைன் இக்வான்கள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க முன்வர வில்லை. அவ்வாறே சவூதி நிர்பந்தப்படுத் தியும் குவைத் நாடு தூதரை வாபஸ் பெற வுமில்லை. இக்வான்களை பயங்கரவாதி களாக அறிவிக்கவுமில்லை.

**சவூதிக்கு கண்டனங்கள்**

இக்வான்கள் இயக்கத்தின் ஷுரா கவுன்சில் உறுப்பினர் ரிழா பஹ்மீ இப்படி பதிலளித்தார். எங்களுக்கு சவூதியில் அமைப்போ, கிளையோ இல்லை.. நோபல் பரிசு பெற்ற யமன் நாட்டின் பெண் அரசியல் வாதி தவக்கல் கர்மான் சொன்னார். சவூதி இக்வான்களை பயங்கரவாதிகள் என அறிவித்து, அவர்களுக்கெதிரான ராணு வத்தின் படுகொலைகளை நியாயப்படுத்தி விட்டது. சவூதியின் பார்வையில் இக்வான் களை ஆதரிக்கும் யமன் மக்களும் பயங்கர வாதிகள் தான்.(மிஸ்ர் அல் யவ்ம் 07-03-14)

இக்வான் தலைவர் கய்ராத் ஷாத்திர் மகள் ஆயிஷா ஷாத்திர் சவூதிக்கு கடும் கண்டனம் தெரிவித்தார். முன்னதாக சவூதி அரசு நாட்டின் முதல் கிறிஸ்தவ தேவாலயம் கட்ட அந்நாட்டில் அனுமதி அளித்திருந்தது. இதை சுட்டிக் காட்டிய ஆயிஷா, தேவா லயங்கள் கட்ட அனுமதி தந்த கையோடு இக்வான்கள் இயக்கத்தை தடை செய்து, இக்வான்களை மக்காவில் நுழைய விடாமல் சவூதி தடுத்துள்ளது.

சவூதி மன்னருக்கு காதிமுல் ஹரமைன் (மஸ்ஜிதுல் ஹரம், மஸ்ஜிதுன் நபவி இரண்டின் ஊழியர்) என்று தம்மை கூறிட தகுதி இருக்கின்றதா? அவர் இக்வான்களை ஹஜ் உம்ரா செய்யவிடாமல் அல்லவா தடுத்துள்ளார்.

அரசியல் காழ்ப்புணர்வை வணக்க வழிபாடுகளில் காட்டலமா? சவூதி சுல்தான் களின் அரசவை உலமாக்கள் எங்கே? எப்போதும் போல் இதற்கும் அவர்கள் வாய் பேசாத ஊமைகளாக இருக்கப் போகி றார்களா?

அப்ரஹாவின் பிடியில் இருந்து அல்லாஹ் தனது ஆலயத்தை காப்பாற்றியது போன்று தனது அடியார்களில் தனது வீட்டுக்கு வர யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை அவன் எழுதவே செய்வான்.

தடுப்பவர்களின் மூக்கு உடையட்டு மாக!! அல்லாஹ்வின் ஆலயத்தை அபகரித்து வைத்து இப்போது எல்லை மீறுபவர்களிடம் இருந்து அல்லாஹ் நிச்சயம் தனது வீட்டை பாதுகாப்பான்.

கஅபாவுக்கு வரும்படி அதன் இறைவன் அல்லவா அழைக்கிறான். இவர்களா அழைக் கிறார்கள் வரக்கூடாது என்று தடுப்பதற்கு?. (Source:www. almesryoon.com 10-03-14)

இளம்பெண் ஆயிஷாவின் வார்த் தைகள் சவூதி அரசின் காதுகளில் இடிச் சத்தமாக ஒலித்தன. அலறித் துடித்த சவூதி அரசு ஹஜ் உம்ரா செய்திட இக்வான்களை தடுக்க மாட்டோம் என்று அறிவித்தது.(அரப் நியூஸ்13-03-14)

> அரபு நாடுகளில் இஸ்ரேலை அங்கீ கரிக்காத நாடுகளில் ஒன்று சவூதி. வெளிப் படையாக இஸ்ரேலை அங்கீகரிக்காத நாடாக காட்டிக் கொண்டாலும் இரண்டு நாட்டுக்கும் இடையில் வெளியில் தெரியாத கள்ள உறவு இருக்கவே செய்கின்றது.
>
> இக்வான்கள் இயக்கத்தை சவூதி தடை செய்த பொழுது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உலக நாடுகளில் அதிகம் சந்தோஷப்பட்ட நாடு இஸ்ரேல் தான்

### கத்தாருக்கு சவூதி விதித்த நிபந்தனை

*சின்ன நாடான கத்தாரை அச்சுறுத்தியும் கத்தார் பணியாததால் மூன்று விஷயங்களை கத்தார் செயல்படுத்த வேண்டும். இல்லையெனில், தரை வழியாகவும், கடல் வழியாகவும் கத்தார் முற்றுகையிடப்படும் என்று அறிவித்தது சவூதி. அவை பின்வருமாறு,*

*1 இக்வான்களுக்கு உதவி செய்வதை நிறுத்த வேண்டும்*

*2 அல் ஜஸீரா தொலைக்காட்சியை மூட வேண்டும்*

*3 கத்தாரில் உள்ள டாக்டர் யூசுப் அல் கர்ளாவி மருமகன் நடத்தும் இன்ஸ்ட்டியூட் ஐ மூட வேண்டும்.* (Source: www.raialyoum.com 25-03-14)

*கத்தாரைப் பொறுத்தவரை தரைப் போக்குவரத்தில் சவூதி மட்டுமே அதற்கு இருக்கின்றது. அவ்வாறே கடல் வழியில் 50 மைல் சுற்றளவில் சவூதியே நெருக்கமாக இருக்கின்றது.*

*அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் எதுவும் இக்வான்களை பயங்கர வாதிகளாக அறிவிக்காத நிலையில், சவூதியின் இச்செயல்பாடு உலக முஸ்லிம்களை கொதிப்படையச் செய்துள்ளது.*

### இஸ்ரேல் சவூதி உறவு

*அரபு நாடுகளில் இஸ்ரேலை அங்கீகரிக்காத நாடுகளில் ஒன்று சவூதி. வெளிப்படையாக இஸ்ரேலை அங்கீகரிக்காத நாடாக காட்டிக் கொண்டாலும் இரண்டு நாட்டுக்கும் இடையில் வெளியில் தெரியாத கள்ள உறவு இருக்கவே செய்கின்றது.*

*இக்வான்கள் இயக்கத்தை சவூதி தடை செய்த பொழுது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உலக நாடுகளில் அதிகம் சந்தோஷப்பட்ட நாடு இஸ்ரேல் தான். சவூதியின் அறிவிப்பு இஸ்ரேலில் பலத்த வரவேற்பை பெற்றது.*

*சவூதியின் அறிவிப்பு இஸ்ரேலுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதனை இஸ்ரேல் அரசு பயன்படுத்திட வேண்டும் என்றார் அந்நாட்டு முன்னாள் ராணுவ புலனாய்வு பிரிவு தலைவர் ஜெனரல் அமாஸ் பாடின்* (Amos Padlin). *இவர் தற்போது இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவன தலைவர்களில் ஒருவர்.* (Source : www.middleeastmonitor 18.03.14)

*ஹிப்ரு ரேடியோ நேர்காணலில் பங்கேற்ற இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் அரசியல் ஆலோசகர் டொரி கோல்டு* (Dori Gold) *சவூதியின் முடிவை வரவேற்றார். மேலும் சொன்னார். இதனைப் பயன்படுத்தி பாலஸ்தீனத்தின் மீதான குறிப்பாக காசாவின் மீதான முற்றுகையை தீவிரப்படுத்த வேண்டும். ஏனெனில், ஹமாஸ் இக்வான்களின் பாலஸ்தீன பிரிவாகவே செயல்படுவதால் ஹமாசுக்கு இனி நிதி உதவி கிடைக்காது. கடந்த டிசம்பர் மாதம் இஸ்ரேல் டுடே* (Israel Today) *பத்திரிக்கையில் கட்டுரை எழுதியிருந்தார் டொரி. கட்டுரைக்கு அவர் இட்ட தலைப்பு: 'இஸ்ரேல் சவூதி இடையே உள்ள இடைவெளியில் பாலம் அமைக்கப்பட்டால் இலாபம் சாத்தியமா?'* (Will interests be able to bridge the gap between Israel and Saudi Arabia?)

*மேலும் அக்கட்டுரையில் முன்னாள் மத்திய கிழக்கு சி.ஐ.ஏ அதிகாரி புருஸ் ரியடல்* (Bruce Riedel) *இன் பின்வரும் கருத்தை எடுத்துக் காட்டி இருந்தார். அது பின்வருமாறு: சில சொந்த நலன்களுக்காக கடந்த காலங்களில்சவூதியும் இஸ்ரேலும் ஒரே குட்டையில் மூழ்கியுள்ளன.*

*முன்னர் 1964-1966 ஆண்டுகளில் யமனில் இமாமத் பரம்பரை ஆட்சிக்கெதிராக கம்யூனிசவாதிகள் கலகம் செய்தனர். அப்போது எகிப்து, கலகம் செய்த யமன் நாட்டு கம்யூனிசவாதிகளுக்கு உதவி செய்தது. சவூதி இமாமத் பரம்பரையினருக்கு உதவி செய்தது. அச்சமயத்தில் இஸ்ரேல் விமானங்களை உபகரணங்களை எடுத்துச் செல்ல சவூதி பயன்படுத்தியது.*

*அவ்வாறே ஈராக் ஈரான் போரிலும் இரண்டு நாடுகளும் ஓரணியில் தான் நின்றன. அதே போன்று 9/11 நிகழ்வுக்கு பிறகு ஈராக்கின் சதாம் ஹுசைன் மீது அமெரிக்கா போர் தொடுத்த சமயத்திலும் இரு நாடுகளும் ஒரே நேர்கோட்டில் நின்றுள்ளன.*

### இரகசிய உறவு

*கடந்த ஜனவரி மாதம் 3-ந்தேதி ஜெருஸேலம் போஸ்ட்* (Jerusalem Post) *பத்திரிகை ஹிப்ரு பதிப்பில் கட்டுரை எழுதியிருந்தார் இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு பிரிவு அதிகாரி யாஸ்சி மெல்மன்* (Yossi Melman) *அதில்*

அமெரிக்காவிலுள்ள சவூதி தூதர் அத்ல் அல் ஜுபைர் அமெரிக்க யூத அமைப்பு தலைவர்கள் இடையே வாஷிங்டன் நகரில் நடந்த சந்திப்பை அதில் அம்பலப்படுத்தி இருந்தார். அதில் அவர் கூறியதவாது,

அதில் அமெரிக்காவிலுள்ள சவூதி தூதர் அத்ல் அல் ஜுபைர் அமெரிக்க யூத அமைப்பு தலைவர்கள் இடையே வாஷிங்டன் நகரில் நடந்த சந்திப்பை அதில் அம்பலப்படுத்தி இருந்தார். அதில் அவர் கூறியதாவது,

பத்திரிகை ஹிப்ரு பதிப்பில் கட்டுரை எழுதியிருந்தார் இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு பிரிவு அதிகாரி யாஸ்சி மெல்மன் (Yossi Melman) அதில் அமெரிக்காவிலுள்ள சவூதி தூதர் அத்ல் அல் ஜுபைர் அமெரிக்க யூத அமைப்பு தலைவர்கள் இடையே வாஷிங்டன் நகரில் நடந்த சந்திப்பை அதில் அம்பலப்படுத்தி இருந்தார். அதில் அவர் கூறியதாவது:

அமெரிக்க யூத தலைவர்களுக்கும் சவூதி தூதர் அத்ல் ஜுபைர்-க்கும் இடையே நெருக்கமான உறவு டெல்அவில் ரியாத் இடையே அதிகாரிகள் மட்டம் பேச்சுவார்த்தை ஒத்துழைப்பு என்ற கடந்த கால செய்திகளில் எதிரொலித்துள்ளது.

ஜுபைரின் சில அணுகுமுறைகள் நெதன்யாகுவின் நெருக்கமான வட்டாரங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றார் மெல்மான். (Source : www.Jerusalem Post jan 3)

**சவூதியும் மொசாத்தும்**

ஈரானுடன் மேற்குலகம் அணுசக்தி விவகாரத்தில் பேச்சுவார்த்தை நடத்திய காலகட்டத்தில் பேச்சுவார்த்தை தோல்வி



யடைந்தால், ஈரான் மீது தாக்குதல் நடத்திடுவது குறித்து இஸ்ரேல் நாசகார புலனாய்வு நிறுவனமான மொசாத், சவூதி அதிகாரிகளுடன் இணைந்து திட்டமிடல்கள் செய்தது.

அவ்வாறு இஸ்ரேல் ஈரானை தாக்கினால் சவூதி தனது வானவெளியை இஸ்ரேல் விமானங்கள் பயன்படுத்திட அனுமதி தருவதாகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இதனை கடந்த நவம்பர் மாதம் இங்கிலாந்தின் சன்டே டைம்ஸ் நாளிதழ் அம்பலப்படுத்தியிருந்தது. (Source: www.middleeastmonitor.com 13.03.14)

இவ்வாறு கடந்த காலங்களில் இஸ்ரேலுடன் இணைந்து பணியாற்றிய சவூதி, எகிப்து ஆட்சிக் கவிழ்ப்பில் இஸ்ரேலுடன் இணைந்து செயல்பட்டது இப்போது அம்பலப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பத்திரிக்கைளில் தொடர்ந்து வெளிவந்த இத்தகவல்கள் அனைத்தையும் சவூதியின் இப்போதைய செயல்பாடுகள் உறுதிபடுத்தி வருகின்றன.

**காசாவை அழிக்க திட்டமா?**

எகிப்து கோர்ட் கடந்த மார்ச் 3 ந்தேதி ஹமாஸ் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக அறிவித்து தடை செய்தது. ஹமாஸ் பாலஸ்தீன விடுதலை போராட்ட இயக்கங்களில் ஒன்று. காசா தேர்ந்தெடுக்கப்பட்ட ஹமாஸ் ஆட்சியாளர்களால் தான் நிர்வாகம் செய்யப்படுகிறது.

இக்வான்களை தடை செய்ததின் பின்னணியில் ஹமாசை எகிப்து கோர்ட் தடை செய்துள்ளது. ஹமாசை பொறுத்த வரை பாலஸ்தீனத்துக்கு வெளியே உலகில் எந்த நாட்டிலும் குற்றச் செயல்களில் அது ஈடுபட்டதில்லை.

முர்சி ஆட்சியில் இருக்கும் போதே சினாய் பகுதியில் நடந்த குண்டுவெடிப்புகளை காரணம் காட்டி ஹமாசை தடை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு பின்பு மிகவும் திட்டமிட்டபடி முதலில் இக்வான்களை தடை செய்த எகிப்து ராணுவ அரசு, பின்பு, கோர்ட் மூலம் ஹமாசை தடை செய்துள்ளது. தடையை காரணம் காட்டி எகிப்தின் ரஃபா எல்லையை மூடிவிட்டது எகிப்து.

ஏற்கனவே 2006 ம் ஆண்டு முதல் காசாவை இஸ்ரேல் முற்றுகையிட்டுள்ளது. காசாவுக்கு உணவு மற்றும் மருந்துகள் கொண்டு செல்லப்படும் ஒரே வழியாக இருந்த ரஃபா எல்லையை எகிப்து மூடிய பிறகு காசா மக்கள் கடும் அவதியுற்று வருகின்றனர். கடந்த வாரம் காசாவில் மருந்தின்றி பச்சிளம் குழந்தை இறந்த போன நிகழ்வும் நடந்தது.

**காசா மீது போர்**

ஹமாசை தடை செய்த பிறகு காசா மீது இஸ்ரேல் போர் தொடுக்க வேண்டும் என்று இஸ்ரேல் பத்திரிக்கைகளும், முன்னாள் ராணுவ அதிகாரிகளும் வலியுறுத்தி வரும் நிலையில், எகிப்து ராணுவ அரசு இஸ்ரேல் அரசுக்கு எழுதிய கடிதம் ரஃயுல் யவ்ம் பத்திரிக்கையில் வெளியாகி இருந்தது.

இத்தோடு காசாவை அடித்து நொறுக்க வேண்டும். இல்லையெனில், இஸ்ரேல் இன்னும் சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். (Source : http://www.raialyoum.com 06-03-14)

**காசாவுக்கு உதவும் கத்தார்**

சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கிய பிறகு ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் காலித் மிஷ்அல் எகிப்து வந்தார். எகிப்தில் மிஷ்அல் தங்கியிருந்தது இஸ்ரேலால் தாங்க முடியாமல் இருந்தது.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு பின்பு மிஷ்அல் கத்தார் புறப்பட்டுச் சென்றார். இக்வான்கள் இயக்கத்தை சவூதி தடை செய்த பின்பு, கத்தாரில் இருக்கும் ஹமாஸ் இயக்கத்தவர்களுக்கும் நெருக்கடி தந்தது சவூதி.

தூதர்களை வாபஸ் பெறும் அளவுக்கு சவூதி கத்தார் இடையே பிரச்சினை முற்றிய போது, மிஷ்அல் இப்படி அறிவித்தார். நான் கத்தாரை விட்டு செல்ல தயார்.

கத்தார் அமீர் தமீம் இப்னு ஹம்திடம் இது குறித்து கேட்கப்பட்ட போது அவர் சொன்னார். மிஷ்அல் கத்தாரை விட்டு செல்ல வேண்டாம். பாலஸ்தீனம் மற்றும் காசாவுக்கு தேவையான உதவிகளை கத்தார் செய்யும். மறுநாள் காசாவுக்கான 110 மில்லியன் டாலர் உதவிகளை அமீர் அறிவித்தார். (ரஃயுல் யவ்ம் மார்ச் 6 -13)

**வளைகுடா உச்சி மாநாடு**

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் கடந்த மார்ச் 25-ல் குவைத்தில் தொடங்கியது வளைகுடா உச்சி மாநாடு. சவூதி, பஹ்ரைன், ஓமன், அமீரகம், நாடுகளின் தலைவர்கள் அதில் கலந்து கொள்வதை தவிர்த்த நிலையில், கத்தார் அமீர் அதில் கலந்து கொண்டார்.

மாநாட்டில், காசாவுக்கும், எகிப்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் கத்தாரின் ஆதரவு தொடரும் என்றார்.

முன்னதாக கடந்த மாதம் துருக்கி சென்ற தமீம் அந்நாட்டு பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகானை சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**காசாவின் மீது போர் தொடுக்க இஸ்ரேல் தயங்குவதேன்?**

ராணுவ எகிப்தும், சவூதியும் இஸ்ரேலுக்கு ஆதரவாக காசா பகுதி மக்களுக்கு துரோகம் செய்து வரும் நிலையில், காசா மக்களுக்கு ஆதரவாக துருக்கியும், கத்தாரும் மட்டுமே நிற்கின்றன.

காசாவின் மீது தாக்குதல் நடத்திட வாய்ப்பு கிடைத்தும் இஸ்ரேல் தயங்கி வருவதற்கு துருக்கியே காரணமாகும். 2010-ம் ஆண்டு இஸ்ரேல் ஹமாஸ் போரின் போது காசா பகுதி மக்களுக்கு துருக்கி அனுப்பி வைத்த மாவி மர்மரா நிவாரண கப்பலை தாக்கி 9 துருக்கியர்களை கொன்றது இஸ்ரேல்.

அதன் விளைவாக 1996 இஸ்ரேல் துருக்கி ராணுவ ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டது துருக்கி. மத்திய தரைக்கடல் பகுதியில் துருக்கியின் ஒத்துழைப்பு இன்றி இஸ்ரேலால் அணுவையும் அசைக்க இயலாது.

கடந்த இரண்டு வருட காலமாக ஒப்பந்தத்தை புதுப்பிக்குமாறு துருக்கியிடம் மன்றாடி வருகிறது இஸ்ரேல். 20 மில்லியன் டாலர் வரை நஷ்டஈடு தரவும் முன்வந்து விட்டது. அத்துடன் (எகிப்து மருந்து அனுப்ப மறுத்த பிறகு) துருக்கி அனுப்பி வைத்த 570 மருந்து கண்டெய்னர் லாரிகளை காசாவுக்குள் 27.0.3.14 அன்று அனுமதிக்கவும் செய்தது. ஆனால், சவூதி எகிப்து- இஸ்ரேல் முத்தரப்பு உறவு அம்பலப்பட்ட பிறகு காசா முற்றுகையை நீக்க வேண்டும் என்றொரு புதிய நிபந்தனையை விதித்து விட்டது துருக்கி. (www.daily sabah 27-03-14)

●

கவர் ஸ்டோரி - 2



# நாட்டுக்கு வேட்டு



**கட்டைப்** பஞ்சாயத்தில் தொடங்கி, சாராய சாம்ராஜ்யம்வரை நடத்திக் கொண்டிருக்கும் நமது அரசியல்வாதிகள், நம் நாட்டு இயற்கை வளங்களைத் தாராளமாகச் சுரண்டி தங்கள் சொந்த சொத்துகளை வளர்த்து வருகின்றார்கள்.

இதில் கர்நாடகாவின் ரெட்டி சகோதரர்கள் என்ற பாரதீய ஜனதா கட்சியின் எடுபிடிகள் தங்கள் கன்னட மாநிலத்தையும் தாண்டி அண்டை மாநிலமான ஆந்திராவிலும் தங்கள் கொள்ளைகளைத் தொடர்ந்தனர்.

அது போதாது என்று அந்நிய நாட்டு முதலீட்டாளர்களுக்கு நம் நாட்டு இயற்கை வளங்களையும் நிலங்களையும் தாரை வார்த்துத் தந்து லஞ்சங்களாக லட்சக்கணக்கான கோடிகளைப் பெற்றார்கள்.

இந்த அந்நிய முதலீட்டாளர்களுக்கு நாம் எழுதித் தந்த நிலங்களுக்கு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்று பெயர் (Special Economic Zones).

இந்தச் சிறப்பு பொருளாதார மண்டலங்களில் நம் நாட்டுச் சட்டங்கள் செல்லுபடியாக மாட்டா.

### மோடியின் விளையாட்டு

இப்படி நம் நாட்டு நிலங்களைத் தாரை வார்த்துத் தந்ததில் முதல் இடத்தையும் முன் இடத்தையும் பிடித்தவர் நரேந்திர மோடி.

அதே போல், அம்பானிகள், டாட்டா நானோ கார் தயாரிக்கும் நிறுவனத்தை முதலில் கம்யூனிஸ்டுகளின் கிடுக்கிப் பிடியிலிருந்த மேற்கு வங்கத்தில் நிலைநாட்டச் சென்றார்கள். இவர்களுக்கு இடம் தந்திடுவதற்காக அங்கு பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த கிராமவாசிகளை விரட்டினார்கள். மறுத்தபோது, அவர்களை கொலை செய்தார்கள். இது நந்திதாமில் நடந்தது.

பின்னர் குஜராத் முதலமைச்சர் மோடி எங்கள் ஊருக்கு வாருங்கள் என அம்பானிகளை அழைத்தார். அங்குள்ள மக்கள் எதிர்க்க ஆயத்தமானார்கள். அவர்களை ஈவிரக்கமின்றி சிறையிலடைத்தார். சுமார் ஓராண்டுக்குப் பின்னர் தான் சிறையிலடைத்த செய்தி வெளிவந்தது. வைகறை வெளிச்சம் இதழில் இதனை விளக்கமாக வெளியிட்டிருந்தோம்.

டாட்டாக்கள் இந்த நானோ கார் கம்பெனிக்கு முதலீடு செய்தது 2500 கோடி. ஆனால், மோடி அரசு அவர்களுக்குக் கொடுத்த கடன் 9500 கோடி. இது 1% வட்டியில் வழங்கப் பெற்றது. அவர்கள் இரண்டாண்டுகளுக்குப் பின் இந்த வட்டியை வழங்கத் தொடங்கினால் போதும்.

ஆனால், மோடியைப் பெரிதாகவும், பிரதமராகவும் காட்டிட நியமிக்கப்பட்ட "ஆப்கோ வேல்டு வைடு" கம்பெனிக்கு (இது யூதர்களின் கம்பெனி) பணம் கொடுத்திட வேண்டும். கொடுத்தார்கள். மோடி மிளிர்கின்றார். குஜராத் மக்கள் மாளுகின்றார்கள்.

நிலத்தைப் பறிகொடுத்த விவசாயிகள் நிலம்தான் எங்கள் உயிர் எங்கள் கண்ணியத்தின் அடையாளம். நாங்கள் தொட்டு வணங்கித்தான் அதில் விவசாயம் செய்யவே இறங்குவோம். அதுவே பறிபோன பின்

நாங்கள் ஏன் வாழ்ந்திட வேண்டும் எனத் தங்களை மாய்த்துக் கொண்டார்கள்.

மோடிக்கு விளம்பரம் தேடித் தரும் ஆப்கோ நிறுவனம், செய்தியை ஒட்டு மொத்தமாக மறைத்தது. ஆனாலும், சில பத்திரிகைகள், அந்த உண்மைகளைக் கொண்டு வந்தன. அவற்றை நாம் வைகறை வெளிச்சம் இதழில் விளக்கமாக வெளியிட்டிருந்தோம்.

**காங்கிரசின் முதலாளித்துவம்**

மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருந்த காங்கிரஸ் அரசு ரூ.50க்கு சமையல் வாயுவைத் தயார் செய்து 550 ரூபாய்க்கு விற்பனை செய்தது. 11 சிலிண்டருக்கு மேலே போனால் ரூபாய் 1200 என்றது.

இடையே முதலாளிகளை நுழைய விட்டது. மக்களை வதைத்து, அவர்களை வாழ வைத்தது.

வக்கற்றோர் வகையற்றோர் அதிகமாக வாழ்ந்திடும் நம் நாட்டில் எரி வாயுவை எட்டாத பொருளாக்கிய பின்னர் பெட்ரோல், டீசல் விலையை நிர்ணயிக்கும் விலையைத் தனியார்க்குத் தாரை வார்த்துத் தந்தது.

நாட்டின் இயற்கை வளங்களை நிலக்கரி அலுமினிய தாது, இரும்புத் தாது இவற்றையெல்லாம் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில் ரெட்டி சகோதரர்கள் கொள்ளையடித்தார்கள். அதை காங்கிரஸ் ஆட்சியில் அவர்களுக்கு வேண்டிய முதலாளித்துவ நிறுவனங்கள் கொள்ளை அடித்தன.

வைகறை
வெளிச்சம்
இதழில் விளம்பரம்
செய்து
பயனடையுங்கள்.

தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு நாட்டின் இயற்கை வளங்களைத் தாரை வார்த்துத் தந்தார்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு வரிச் சலுகைகளையும் வாரி வழங்கினார்கள்.

நடுத்தர வர்க்கத்தின் மீதும், உழைக்கும் மக்களின் மீதும் வரிகளை விதித்து விட்டு பண முதலைகளுக்கு வரிச் சலுகைகளை வாரி வழங்குகின்றீர்களே எனக் கேட்டிருக்க வேண்டும் எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி. ஆனால், அந்தக் கேள்வி அவர்களின் அன்புக்குரிய அம்பானிகளுக்கு சென்றிருக்கும். அதனால் பா.ஜ.க கேள்வி கேட்கவில்லை. காரணம், அவர்கள் வரிச் சலுகைகளைப் பெற்ற அம்பானிகளிடம் லஞ்சத்தை வாங்கிக் கொண்டு மௌனமாக இருந்துவிட்டன.

பத்தாண்டுகளாக எதிர்க்கட்சியாக இருந்த பாரதீய ஜனதா கட்சி, கேள்விகளைக் கேட்பதற்குப் பணம் வாங்கிய கட்சி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நேரு காலத்திலிருந்தே இராணுவத்திற்குத் தேவையான தளவாடங்களை வாங்குவதில் ஊழல்கள். இதில் இராணுவ வீரர்கள், இறந்தால் அவர்களைப் புதைத்திட வாங்கிடும் சவப் பெட்டியில் கூட எங்களால் லஞ்சம் வாங்கிட இயலும் எனக் காட்டிய கட்சி காங்கிரஸ் கட்சி.

**சவப்பெட்டி ஊழல்**

ஆட்சியிலிருந்து போது, கார்கில் போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு சவப் பெட்டிகளை வாங்கிடு வதில் லஞ்சம் வாங்கி சாதனை படைத்த கட்சி பா.ஜக. இவர்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலை ஒழிப்பார்களாம்!

இப்படி லஞ்சத்தில் ஊறித் திளைக்கும் அரசியல்வாதிகள் சர்ச்சில் சொன்ன இரண்டாவது தகுதியான freebooters they will not stop at any thing என்பதை உண்மையெனக் காட்டி விட்டார்கள்.

விரைவில் நாம் சுவாசிக்கும் காற்றுக்கும் வரி விதிக்கப்படலாம்.

ஆக, சுதந்திர இந்தியாவில் நம்மவர்கள், ஊழல் செய்யாத தலமுமில்லை, நிலமுமில்லை.

# ஜனநாயகம்

ஜனநாயகம்!

ஜனநாயகத்தில் அரசியல் என்பது தேர்தலுக்கு முன் ஆட்சிக்கு வந்தால் அடுத்த நாள் என்ன நடக்கும்?

அடுத்த வாரம் என்ன நடக்கும்?

அடுத்த மாதம் என்ன நடக்கும்?

அடுத்த வருடம் என்ன நடக்கும்? என்பனவற்றைச் சொல்லும் திறமையைப் பெற்றவருக்கும் தேர்தலுக்குப் பின் அவையெல்லாம் ஏன் நடக்கவில்லை என்பதை விளக்கிச் சொல்லிடும் ஆற்றலைப் பெற்றவருக்கும் சொந்தம்! சொகுசு!

இந்த இரண்டு திறமையும் இருந்து விட்டால் போதும், ஜனநாயகத்தில் எங்கேயும் ஆதிக்கம் செலுத்தலாம்.

இதையும் சர்ச்சிலே சொன்னார். இது தான் நடந்து கொண்டிருக்கிறது - தேர்தல் வாக்குறுதி என்ற போர்வையில் என்பதை நாம் அறியலாம்.

இப்போது நம் நாட்டில் ஜனநாயகம் என்ற பெயரில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை சற்று ஏறெடுத்துப் பார்ப்போம். நமது ஜனநாயகத்தின் மிகப் பெரிய தூணாக நமது அரசியல் நிர்ணயச் சட்டம் கருதப் படுகின்றது.

ஆனால், நமது அரசியல் நிர்ணயச் சட்டம், அது அங்கீகரித்த மக்கள் பிரதிநிதித் துவச் சட்டம் இவையெல்லாம் நாட்டைக் காத்திடும் என நம்பிய மக்களுக்கு பெருத்த ஏமாற்றமே!



**இந்தியாவின் முதல் பயங்கரவாத நிகழ்ச்சி:**
**மகாத்மா காந்தியைக் கொலை செய்தவர்களுக்கு ஆட்சி நடத்த அருகதையில்லை.**

மதச்சார்பின்மையைப் பீற்றும் நமது நாட்டில் மதத்தின் பெயரால் வாக்குகளைக் கேட்பதும், பெறுவதும் தவறு. அப்படிக் கேட்டு வாக்குகளைப் பெற்று யாரேனும் வெற்றி பெற்றால் அவர் பெற்ற வெற்றி செல்லாது எனச் சொல்லி அவரது பதவியைப் பிடுங்கி விடலாம்.

நீதிமன்றங்களுக்குச் சென்றால், அவை மதத்தின் பெயரால் பெற்ற வாக்குகளைச் செல்லாது என அறிவிக்கும் மக்களின் பெயரால் இயங்கும் கட்சிகளுக்குத் தேர்தல் கமிஷன் அங்கீகாரம் தராது; தரக் கூடாது.

ஆனால், இவையெல்லாம் இந்துத்துவ வாதிகளைப் பொறுத்தவரை செல்லாத சட்டங்கள்.

பாரதீய ஜனதா கட்சி மதவெறியைத் தூண்டி அரசியல் நடத்திக் கொண்டிருக் கின்றது. வாக்காளர்களை இந்து என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரிக்கின்றது. இதில் கிறிஸ்தவர்களையும் கூட அந்நியப்படுத்து கின்றது. இப்படி மதத்தின் பெயரால் - இன்னுஞ்சொன்னால் மதக் கலவரங்களின் பெயரால் கட்சி நடத்திக் கொண்டிருக் கின்றது பாரதீய ஜனதா கட்சி.

இதனை எதிர்த்து பல முறை நீதிமன்றங் களுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், நீதிபதிகள் நாங்களும் மதவாதிகள்தாம் என்பதையே எடுத்துக்காட்டினரே அல்லாமல் அரசியல் நிர்ணயச் சட்டப்படி அது, அங்கீ கரித்து செயலில் விட்டிருக்கும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி இப்படி யொரு கட்சி இந்திய அரசியலில் இடம்பெற முடி யாது, அதனால் கூடாது எனச் சொல்லிட வில்லை.

காலப் போக்கில் நீதிபதிகள் இந்துத்துவ அடிவருடிகளாகவே செயல்படத் தொடங்கி விட்டார்கள்.

### இந்துத்துவா தீர்ப்பு

'இந்துத்துவா' என்பது மதவாதம். அதன் கொள்கை இந்தியாவின் அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு எதிரானது என வலுவான வாதங்கள் 1995-ல் முன்வைக்கப் பட்ட போது, உச்சநீதிமன்ற நீதிபதிகள் J.S.வர்மா, N.P.சிங், J.வெங்கடசாமி ஆகியோர்

அடங்கிய பெஞ்ச், "இந்துத்துவா ஒரு வாழ்க்கை முறை" எனத் தீர்ப்பு வழங்கி, இந்துத்துவாவை அதாவது மதவாதத்தை நியாயப்படுத்தினார்கள்.

இந்த அநியாயத் தீர்ப்பிற்காக அவருக்கு ஓய்வுக்குப் பின்னர் பல பதவிகள் வழங்கப் பெற்றன.

அதற்கு முன்னரே மும்பை உயர் நீதி மன்றம் மனோகர் ஜோஷி என்ற சிவசேனா உறுப்பினர், மதத்தின் பெயரால், ஓட்டுக் கேட்டார் என்பதால் அவரைப் பதவி நீக்கம் செய்தது. ஆனால், உச்சநீதிமன்றம் அவரைப் பதவியில் அமர்த்தியது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அனைவரையும் ஆச்சர் யத்தில் ஆழ்த்தியது. விமர்சனங்கள் வந்தன. எந்த அளவுக்கு நடுநிலையாளர்களும், அரசியல் சட்ட வல்லுநர்களும் விமர்சித் தார்கள் என்றால் உச்சநீதிமன்ற நீதிபதி களையே குற்றவுணர்வைப் பெற்றார்கள். பின்னர் தாங்களே முன்வந்து ஒரு தன்னிலை விளக்கத்தைத் தந்தார்கள். அந்த விளக்கம் இன்னும் அதிக குழப்பத்தை ஏற்படுத்தியது.

இவையெல்லாம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற விண்ணப் பத்தை இன்றளவும் கண்டுகொள்ளவே இல்லை. (ஆதாரம்: SC Verdict on Hindutva - Dec.11, 1995)

உச்சநீதிமன்றத்தின் இந்தத் தன்னிலை விளக்கம் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத் தியது. சில மூத்த வழக்கறிஞர்கள் இந்த விளக்கம் உச்சநீதிமன்ற நீதிபதிக்குக் கூடப் புரியாது எனக் கிண்டலடித்தார்கள்.

இப்படி உச்சநீதிமன்றம் மேலும் கிண்ட லுக்கும் ஆளானதே அல்லாமல் தான் செய்த தவறை சீர் செய்யவில்லை. அவ மானமே வந்தாலும் இந்துத்துவாவின் பக்கம், அதாவது அநீதியின் பக்கம் உறுதி யாக நிற்போம் என்பதைத் தெளிவுபடுத் திற்று.

இவற்றையெல்லாம் இந்துத்துவத் தீர்ப் புகள் என ஒன்றாய்த் திரட்டி வெளியிட்டிருக் கின்றது IOS என்ற Institute of Objectives Studies. டாக்டர் தாஹிர் முன்னாள் இந்திய சட்டக் குழுமத்தின் தலைவர் தான் தொகுத்து வழங்கியுள்ளார். நாம் அவற்றை பல கட்டுரை களாக வைகறை வெளிச்சத்தில் வெளியிட் டிருக்கின்றோம்.

இந்த நிலை இந்துத்துவ சக்திகளை உற்சாகப்படுத்திற்று. எந்த அளவுக்கு அவர்கள் நெஞ்சுரம் பெற்றனர் என்றால்,

> **கர்கரேயைக் கொலை செய்தவர்களை நமது நிர்வாக இயந்திரமும், நீதிமன்றங்களும் தப்பிக்க விட்டன. இவையெல்லாம் தான் மோடியை எல்லாக் குற்றங்களிலிருந்தும் காப்பாற்றின. இந்நிலையில் நாட்டை மீட்டிடும் பாரதூரமான பொறுப்பும் கடமையும் முஸ்லிம்களுக்குண்டு. அதே போல் அவர்களிடம் 1400 வருட பாரம்பரியமிக்க சீலமிகு நிர்வாக முறையும் எல்லோருக்கும் எல்லாவற்றையும் பெற்றுத் தரும் ஆட்சி முறையும் உண்டு.**

அத்தனை கலவரங்களுக்குப் பின்னரும், படுகொலைகளுக்குப் பின்னரும் நாட்டை ஆளும் நெஞ்சுரத்தைப் பெற்றார்கள்.

இப்போது வகுப்புக் கலவரங்களை தொடர்ந்து நடத்தினால் ஆட்சியை மீண்டும் கைப்பற்றலாம் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். Riots is our Route Riots for Votes – வகுப்புக்கலவரங்களே வழி. வாக்குகளைப் பெற வகுப்புக் கலவரங்கள் என்றாக்கி விட்டார்கள். இதனை நாம் ஜனவரி, பெப்ருவரி 2014 இதழ்களில் வெளியிட்டிருந் தோம்.

இதில் நாம் நீட்டி முழக்காமல் தெரிந்திட வேண்டியது என்னவெனில், இந்த நாட்டை வகுப்புவாதிகளின் கைகளில் ஒப்படைத்ததில் உச்சநீதிமன்றத்திற்கு முக்கிய பங்குண்டு.

இதனால் இந்த நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டம் பின்னுக்குத் தள்ளப் பட்டது. இப்படி, இங்கு செயலில் வாழ்ந்தது இந்த ஜனநாயகம். இங்கே சிறுபான்மை யினர், தலித்துகள், இவர்களுக்கு என்றைக்கும் ஜனநாயக உரிமைகளோ நீதியோ கிடைத் திடாது.

பாசிசம் தனது வேரை ஆழமாகப் பதித்து விட்டது. R.S.S-இன் முன்னாள் தலைவர்

சுதர்சன் சொன்னார்: "இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் ஆங்கிலேயர்களின் ஆக்கம். அதனை எடுத்து வீசிவிட்டு வேதங்களின் அடிப்படையில் சட்டங்கயை இயற்ற வேண்டும்" என்றார்.

**இஸ்ரேலில் இருந்து இயங்கும் இந்து ராஷ்டிரா**

அதை அவர்கள் இயற்றிவிட்டார்கள். தேசியக் கொடிக்கு மாற்றமான கொடியையும் தயாரித்துவிட்டார்கள். பாசிசத்தின் ஆட்சி, அதாவது இந்து ராஷ்டிராவின் ஆட்சி ஒன்று திரை மறைவில் நடந்து கொண்டிருக்கின்றது. அதன் தலைமையகம் யூதர்களின் நாடாகிய இஸ்ரேலின் தலைநகரில் இருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதாவது, டெல் அவிவிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதனை புரோகித்தின் மடிக் கணிணிகள் நமக்குச் சொல்லின.

இந்தப் புரோகித் யார்? நமது இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டு, இராணுவக் கிட்டங்கிகளிலிருந்து ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்களைத் திருடி அபிநவ் பாரத், விஷ்வ இந்து பரிஷத் ஆகியவற்றின் வழி நாடெங்கும் குண்டுகளை வெடிக்க வைத்தவர்.

மாலேகான் 2008 குண்டுவெடிப்பை ஆய்வு செய்த ஹேமந்த் கர்கரே என்ற மராட்டிய காவல்துறையின் தீவிரவாத தடுப்புப் படையின் தலைவர் கண்டு பிடித்தார். இதனால்தான் கர்கரேயைக் கொலை செய்தார்கள்.

கர்கரேயைக் கொலை செய்தவர்களை நமது நிர்வாக இயந்திரமும், நீதிமன்றங்களும் தப்பிக்க விட்டன. இவையெல்லாம் தான் மோடியை எல்லாக் குற்றங்களிலிருந்தும் காப்பாற்றின.

இந்நிலையில் நாட்டை மீட்டிடும் பாரதூரமான பொறுப்பும் கடமையும் முஸ்லிம்களுக்குண்டு.

அதே போல் அவர்களிடம் 1400 வருட பாரம்பரியமிக்க சீலமிகு நிர்வாக முறையும் எல்லோருக்கும் எல்லாவற்றையும் பெற்றுத் தரும் ஆட்சி முறையும் உண்டு.

அந்த ஆட்சி அத்தனை மக்களுக்கும் நீதியைப் பெற்றுத் தரும். இது வெற்று வேதாந்தமல்ல. உலகின் ஒரு பெரும் பகுதியில் செயல்படுத்திக் காட்டிய அனுபவமும் பாரம்பரியமும் மிக்கது.

ஆனால், முஸ்லிம்கள் கண்ணில் கண்ட கட்சிகளே காட்சி; அதுவே நமக்கும் கதி என பணம், நேரம் அனைத்தையும் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்னே பரிதாபம்!

இவற்றிற்கெல்லாம் மேலாக இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதும், இஸ்லாமிய ஆட்சிமுறையை நடைமுறைப் படுத்துவதும் மனித இனத்தை நரகத்திலிருந்து மீட்பதுமே முஸ்லிம்களின் பணி. இந்தப் பணியில் எடுத்து வைக்கும் முயற்சிகள் உங்களுக்கு மறுமையில் வெற்றியைத் தரும்.

இனிமேலாவது எழுங்கள்! இந்தியாவைக் காத்திட!

**முடிவாக...**

நாம் மேலே தந்த தகவல்கள் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்தும் நம் நாட்டின் பன்முகத் தன்மையை மனதிற்கொண்டு எல்லோருக்கும் நீதியும் நியாமும் நிம்மதியும் கிடைக்கும் வகையில் அமைந்த ஓர் ஆட்சி அமைப்பு தேவை.

## ஜனநாயகம் : சர்ச்சிலின் கருத்து

Many forms of Government have been tried and will be tried in this world of sin and woe. No one pretends that democracy is perfect or all-wise. Indeed it has been said that democracy is the worst form of Government except all other forms that have been tried from time to time.

பாவமும் பரிதாபமும் நிறைந்த இந்த உலகில் பல ஆட்சி அமைப்புகளை நடைமுறைப்படுத்திப் பார்த்து ஜனநாயகம்தான் நிறைவான அரசியல் அமைப்பு என்று யாரும் சொல்லிடவில்லை. உண்மையில், இதுவரை முயற்சி செய்து பார்த்த இதர அரசியல் முறைகளைத்தவிர ஜனநாயகம் தான் மிகவும் மோசமான அரசியல் அமைப்பு.

Winston Churchilll : The British Prime Minister 1940 - 45 and 1951 - 1955. Source: Questions of Winston churchill.

வரலாற்றை நாம் ஆராய்ந்தவரை இப்படி ஒரு ஆட்சி அமைப்பை இஸ்லாத்தின் வரலாற்றில்தான் காண்கிறோம்.

அங்கேதான் ஆட்சியாளரின் பொறுப்பும் கடமையும் வரையறுத்துக் காட்டப்படுகின்றது.

குடிமக்கள் அனைவருக்கும் அரசு நிர்வாகம் முதற்கொண்டு அனைத்திலும் உரிய உரிமைகளும் பதவிகளும் வழங்கப் பெற்றன. குடிமக்களையும் ஆட்சியாளர்களையும் மனித மாண்பு மிக்கவர்களாக ஆக்கிக் காட்டிடும் ஆன்மிக வழிகாட்டுதலும் அதற்கு அங்கேதான் கிடைத்தன. அங்கேதான் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் இல்லாமல் மக்கள் குறிப்பாக பெண்கள் உரிமைகளைப் பெற்றார்கள்.

இதனால்தான் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களையும் இஸ்லாமியச் சட்ட அமைப்புகளையும் ஆய்வு செய்த அமெரிக்க உளவு நிறுவனம் CIA இஸ்லாம் ஜனநாயகத்தை விட சிறந்தது என்றும் – Islam is more than democracy – அது வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் ஒட்டுமொத்தமாக முழுமையாக வழிகாட்டிடும் மார்க்கம். அதனால் அது நமது அரசியல் அமைப்பு சட்டத்தை எடுத்து விழுங்கிவிடும். அது தரும் விசாலமான வழிகாட்டுதல்களைப் பார்க்கும் மக்கள் தானாக மனமுவந்து ஏற்றிட முன் வருவார்கள். ஆகவே, இனிவரும் நாட்களில் அரசியல் அமைப்பிற்கு ஒரு பெரும் ஆபத்தாக அமையலாம் என அறிவித்தது.

Team ‘B’ report of CIA என்ற அமெரிக்க மத்திய உளவுத்துறை தான் இரகசியமாக தாக்கல் செய்த அறிக்கையில் கூறியுள்ளது. இதனை வைகறை வெளிச்சம் ஜனவரி 2012-ல் அட்டைப்படக் கட்டுரையாக வெளியிட்டிருந்தோம்.

இறைவனின் அருட்கொடையாக, நாம் போராடாமலும், உண்ணா விரதங்களை நடத்தாமலும், சிறைகளை நிரப்பாமலும் கிடைத்த இந்த வாழ்க்கை நெறியை அதன் அரசியல் நெறிமுறையை மக்களிடையே பிரச்சாரம் செய்வோம். புரிந்திடச் செய்வோம். வேதனைக்குரிய வகையில் இதனைச் செய்திட வேண்டிய சமுதாயம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கின்றது. இதன் பாதையை மாற்றுவோம் இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

வாசகர்கள் மேலும் படிக்க: ‘துடிக்கும் குஜராத்: அதில் துடிக்கும் மக்கள்’ (வைகறை வெளிச்சம் ஆக-செப்-2013), ‘வளர்ச்சிப் பாதையில் குஜராத் உண்மை என்ன?’ (வைகறை வெளிச்சம் அக்.-நவ.-2011), ‘மோடியின் ஆட்சியில் தலித்துகளின் நிலை’ (வைகறை வெளிச்சம் பிப்.2014)

MGM

# இன்னாலில்லாஹி.....

தேனியைச் சேர்ந்த சகோதரர் A.**ஹிதாயத்துல்லாஹ்** அவர்களின் துணைவியார் H.**ஆயிஷா நாச்சியார்** அவர்கள் கடந்த 17-03-2014 அன்று மாரடைப்பினால் இறப்பெய்தினார்கள். அன்னார் 2011-ல் இருதய அறுவை சிகிச்சை செய்திருந்தார்.

இவரது கணவர் A.ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் 13-03-2006 அன்று இவ்வுலகை விட்டுப் பிரிந்து விட்டார்.

இவர் தம் கணவருக்கு எல்லாச் சூழ்நிலைகளிலும் பக்கபலமாக இருந்தார். மு.குலாம் முஹம்மது அவர்களை டிரஸ்டியாகக் கொண்டு செயல்பட்டு வந்த அறிவகம் மதரஸா, அறிவகம் மெட்ரிக் ஸ்கூல் மற்றும் தாவா பணிகளில் A.ஹிதாயத்துல்லாஹ் அவர்களுக்கு இவர் ஆதரவும், ஊக்கமும், ஆர்வமும் கொடுத்தது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இவரது இழப்பு அக்குடும்பத்தார்களை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியிருக்கிறது. அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு பொறுமை காக்கும்படியும் அவருக்காக அல்லாஹ்விடம் துஆ செய்யும்படியும் நாம் கேட்டுக் கொள்கிறோம். அல்லாஹ் அன்னாரின் மண்ணறை வாழ்க்கையையும் மறுமை வாழ்க்கையையும் சிறப்பானதாக ஆக்கி வெற்றி பெறச் செய்வானாக என வைகறை குழு துஆ செய்கிறது.

# சென்னையில் நடந்த புத்தக வெளியீட்டு விழா

## 26/11 PROBE
### WHY JUDICIARY ALSO FAILED



26/11 வழக்கு நீதித்துறையும் தோற்றது ஏன்? என்ற புத்தகத்தை மஹாராஷ்டிர முன்னாள் ஐ,ஜி முஷ்ரிஃப் வெளியிட பெற்றுக்கொள்பவர் சென்னை உயர்நீதி மன்ற மூத்த வழக்கறிஞர் திரு. காந்தி அவர்கள்

**இந்தியாவைக்** காவு கொள்ள பாசிசப் பரிவாரம், அதாவது சங்கப் பரிவாரம் ஒரு பெரும் சூழ்ச்சியைச் செய்தது. அதுதான் ஓர் இராணுவப் புரட்சியின் வழி இந்தியாவைக் கைப்பற்றுவது.

இந்தியாவிலிருக்கும் ஆட்சியமைப்பை தூக்கி வீசிவிட்டு அந்த இடத்தில் ஓர் இந்துத்துவ ஆட்சியை நிலைநாட்டுவது.


இதற்காக அவர்கள் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு மாற்றமாக அதாவது பாசிச ஆட்சியை நிலைநாட்டுவதற்காக ஓர் சட்டத்தை எழுதிவிட்டார்கள்.

நமது தேசியக் கொடி அல்லாத வேறொரு கொடியை வடிவமைத்து விட்டார்கள்.

தாங்கள் இந்து ராஷ்டிரா என அழைக்கும் அந்த அரசுக்கு தலைமைச் செயலகம் ஒன்றையும் கண்டு கொண்டார்கள்.

அந்தத் தலைமைச் செயலகம் யூத நாடாகிய இஸ்ரேலின் தலைநகராம் டெல் அவிவில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அங்கே இஸ்ரேலில் இயங்கிடும் இந்த




இந்து ராஷ்டிரம் நமது இந்தியாவின் மீது ஒரு பெரும் போரைத் தொடுத்துக் கொண்டிருக் கின்றது. அதுவே நாடெங்கிலும் வெடித்த குண்டுகளும் மடிந்த மக்களும்.

இந்த உண்மைகளையெல்லாம் கண்டு பிடித்து, உலகுக்கு அறிவித்தவர்தான் ஹேமந்த் கர்கரே என்ற மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி. இவர் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படையின் (ATS - Anti Terrosim Squad) தளபதி.

எங்கள் சதிகளைக் கண்டுபிடித்தவரை உயிரோடு விட்டு வைத்திட மாட்டோம் என்ற அடிப்படையில் அவரைக் கொலை செய்து விட்டார்கள் மும்பை என்ற பம்பாயில் வைத்து.

இந்த பயங்கர லட்சியத்தை அடைந்திட ஏற்பாடு செய்யப்பட்டதே, மும்பை தாக்குதல் என்ற Mumbai Attack. அந்த நாளே 26/11 என அடையாளப்படுத்தப்பட்டு அழைக்கப்படுகின்றது. அதாவது நவம்பர் 26, 2008 ஆம் நாள் என்னே பாதம்? தேசத் துரோகம்.

இந்த உண்மையை ஆய்ந்தறிந்து கர்கரே என்ற வீரமகனைக் கொலை செய்தது வெளிநாட்டிலிருந்து வந்த தீவிரவாதிகள் அல்ல. அவர்கள் நம் நாட்டில் உள்ள சங்கப் பரிவாரப் பிரிவாகிய அபிநவ் பாரத் என்ற அமைப்புதான். மொத்த நிகழ்வையும் இயக் கியது நமது நாட்டின் தலையெழுத்தை நிர்ண யித்துக் கொண்டிருக்கும் மத்திய உளவுத் துறை (IB)தான் என்பதையெல்லாம் கண்டெ டுத்து, உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றம் என எல்லா நீதிமன்றங்களுக்கும் கொண்டு சென்றார். எஸ்.எம்.முஷ்ரிஃப்.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களும் அதே மராட்டிய காவல்துறையைச் சார்ந்தவர்தாம்.

அதன் முன்னாள் ஐ.ஜி (IG) Inspector General of Police.

நீதி மன்றங்கள் இழுத்தடித்துக் கொண்டிருந்தன. 26/11 என்ற மும்பைத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்கும் துணிவும் நீதிமன்றங்களுக்கில்லை.

அதனால் இந்த உண்மைகளையெல்லாம் மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்தார்கள். எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள். அதுதான் அவர் வெளியிட்ட 'கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்' என்ற நூல்.

இந்த நூல் வெளிவந்தபோது, 'கசாப்' என்ற ஓர் அப்பாவிக் குழந்தையை (juvenile) தூக்கில் போட்டு மொத்த விவகாரத்தையும் புதைத்து விட்டார்கள்.

இந்நிலையில் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய முதல் நூலின் நிலை என்ன? என்ற கேள்வி எல்லோருடைய மனதிலும் எழும்.

ஆனால், எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் வேறொரு விவகாரத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். அது எப்படி கர்கரேயைக் கொலை செய்தவர்கள் தப்பித்தார்கள். எப்படி நீதிமன்றம் பொய்களையும் புனைந்துரைகளையும் சாட்சியங்களாகவும் ஆவணங்களாகவும் ஏற்றுக் கொண்டன என்பதே அந்தக் கவலை.

கசாப் என்ற அப்பாவி பாலகனுக்கு எதிராக எந்த சாட்சியமுமில்லையே அவனை எப்படி தூக்கில் போட சட்டம் படித்தவர்கள் ஒத்துக் கொண்டார்கள்? இந்த வினா அவரைக் குடைந்தெடுத்தது?

உச்சநீதிமன்றத்தில் கசாபின் மேல்முறையீடு நிலுவையிலிருந்தபோது, அவர் தனது கண்டுபிடிப்புகளையும் உண்மையான ஆவணங்களையும் அமிகஸ் கூரி என்ற நீதி மன்ற நண்பர் (இது உச்சநீதிமன்றம் நியமித்தது) வழி அனைத்தையும் தெளிவுபடுத்தினார். அப்படி இருந்தும் நீதிமன்றங்கள் ஏன் அநீதி இழைத்தன.

இந்த வினாவை ஆய்வு செய்தார். தீர்ப்பை முழுமையாகப் படித்தார். எல்லாவற்றையும் ஆய்வு செய்தார். அதனை நீதிமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் சமர்ப்பித்தார்.

மக்கள் மன்றத்தில் அதனை ஓர் நூலாக சமர்ப்பித்தார். அதுதான் 26/11 Probe why judiciary also failed.

இந்த நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் 16-03-2014 அன்று மாலை திருவல்லிக் கேணியிலுள்ள அல்மாலிக் மேரேஜ்ஹாலில் நடைபெற்றது.

**நிகழ்ச்சியை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டும் வேர்கள் வெளியீட்டகமும் இணைந்து நடத்தின.**

நிகழ்ச்சி தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் பொருளாளரும் மந்தைவெளி ஈத்கா பள்ளிவாசலின் தலைமை இமாமுமான பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

**நூல் அறிமுகம்**

வைகறை வெளிச்சம் மாத இதழின் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் நூலை அறிமுகப்படுத்தி தமிழில் உரையாற்றினார்கள்.

நூலை அதன் ஆசிரியர் எஸ்.எம். முஷ்ரிஃப் முன்னாள் ஐ.ஜி மகாராஸ்டிரா வெளியிட்டார்கள். முதல் பிரதியை சென்னை உயர்நீதி மன்றத்தின் மூத்த வழக்கறிஞர் R.காந்தி அவர்கள் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்கள்.

உரையில் இந்துத்துவ தீவிரவாதிகளும் மத்திய உளவுத்துறையும் சேர்ந்து நடத்திய கொலைதான் கர்கரே கொலை.

தொடர்ந்து ரூபாய் ஒரு லட்சத்துடன் கூடிய கர்கரே விருது வழங்கப் பெற்றது.

விருதை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் அதன் தலைவர் மு.குலாம் முஹம்மத் அவர்கள், அத்தனை எதிர்ப்புக் கிடையேயும் - நீதிக்கான தனது போரை தொடரும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களுக்கு வழங்கினார்கள்.

விருதுடன் கூடிய ரூபாய் ஒரு லட்சம் பொற்கிழியை வாங்கிட மறுத்து விட்டார்கள்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் "இந்துத்துவ தீவிரவாதிகளும், மத்திய உளவுத்துறையும் இணைந்து நடத்திய கொலைதான் கர்கரே கொலை.

மும்பை தாக்குதலின் இந்தப் பகுதியை மீண்டும் ஆய்வுக்கும் புலனாய்வுக்கும் உட்படுத்திட வேண்டும் என நாம் வைத்த மனுக்கள் எல்லாம் நீதிமன்றத்தில் அப்படியே கிடக்கின்றன. அந்த மனுக்கள் அப்படியே இருக்கும் போது 2006இலிருந்தே நமது

உளவுத்துறையின் கையிலிருக்கும் கசாபை இரகசியமாக தூக்கில் போட்டு எல்லாம் முடிந்தது என்று கூறிவிட்டார்கள். இதில் உச்சநீதிமன்றமும் துணை போனது எம்மைப் பெரிய வேதனையில் ஆழ்த்துகின்றது.”

“நமது முதல் நூலைப் படித்துவிட்டு நீதிமன்றங்களிலே வழக்குகளைத் தொடுத்து பெரும் போர் ஒன்றை நடத்திக் கொண்டிருப்பவர் இராதாகாந்த் யாதவ் (இவர்தான் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டின் முதல் கர்கரே விருதைப் பெற்றவர்.) உச்சநீதி மன்றத்தில் எல்லா உண்மைகளையும் எடுத்துச் சொன்னார்கள். இந்த வகையில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அமிகஸ் கூரி என்ற நியாயத்தின் நண்பர் ராஜீவ் ராமச்சந்திரன் அவர்கள், இந்த உண்மைகளை நீதிமன்றத்தில் விரிவாகவே எடுத்துப் பேசினார்கள். ஆனாலும், நீதிபதிகள் உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றுவதில் மிகவும் உறுதியாக இருந்து விட்டார்கள். இது அனைவரையும் விரக்தியில் ஆழ்த்தி விட்டது.”

“நான் இந்த நூலை எல்லா நீதிபதிகளுக்கும் அனுப்பி வைத்தேன். அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டார்கள். படித்தார்கள். நூலைப் பாராட்டி எனக்குக் கடிதங்களையும் அனுப்பினார்கள்.

‘வீரமகன் கர்கரே விருது’ ஒன்றை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்படுத்தி இருக்கின்றது. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2013/2014க்கான விருதை எனக்கு வழங்கியிருக்கின்றார்கள். நான் இந்த விருதை மிகவும் பெருமைக்குரிய விருதாகவும் பெரிய விருதாகவும் பெரிய விருதாகவும் கருதுகின்றேன். எனக்கு எத்தனையோ விருதுகளை என்னுடைய பணிக்காலத்தில் மத்திய அரசும் மாநில அரசும் வழங்கின. அவற்றையெல்லாம் நான் பெற்றுக் கொள்ளவில்லை. மும்பையைச் சார்ந்த பல சமூகநல அமைப்புகள், பூனாவைச் சார்ந்த அமைப்புகள் இவை யெல்லாம் என்னுடைய பணிகளைப் பாராட்டி விருதுகளை வழங்கின. அவற்றையெல்லாம் நான் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால், கர்கரேயின் பெயரால் வழங்கப்படும் இந்த விருதே மிகப் பெரிய விருது. அதனால் அதைப் பெற்றுக் கொள்வதில் பெருமை யடைகின்றேன்.

“கர்கரேக்கு பாரத ரத்னா விருதை வழங்கிட வேண்டும் என்பது நான் நீண்ட நாள்களாக எழுப்பி வரும் கோரிக்கை. காரணம், கர்கரேதான் இந்த நாட்டை மிகப் பெரிய ஆபத்தாகிய இந்துத்துவ பாசிசத்திலிருந்து காப்பாற்றியவர். இந்துத்துவ தீவிரவாதிகளின் தேசத்துரோகச் செயல்களைத் தோலுரித்துக் காட்டியவர். அதே போல் மத்திய உளவுத்துறையின் சதிகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர். இவற் றால் தனது உயிரை நீதிக்காகத் தந்தவர்.

அவர் பெயரால் உருவாக்கப்பட்ட விருதே மிகச் சிறந்த விருது.

இப்போதும் பாரத ரத்னா விருதை அவருக்கு - கர்கரேக்கு வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்’’ என்று கூறினார்.

அடுத்து, இன்னொரு நூல் வெளியிடும் நிகழ்ச்சி இடம்பெற்றது. அதுதான் கசாபை இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? இதனை



வீரமகன் ஹேமந்த் கர்கேர விருதினை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் தலைவர் மு.குலாம் முஹம்மது வெளியிட அதனை மஹாராஷ்டிர முன்னாள் ஐ.ஜி. முஷ்ரிஃப் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

**இந்தியாவில் தீவிரவாதம் தீவிரவாதம் எனப் பேசுவதில் நமது ஆட்சியாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏராளமான இலாபங்கள் இருக்கின்றன. தீவிரவாதம் என்ற செய்தியை மக்கள் மன்றத்தில் பரப்பி மக்களைப் பதற்றத்துடன் வைத்துக் கொள்கின்றார்கள். இதனால் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்னைகளிலிருந்து அவர்களின் கவனங்கள் திசை திருப்பப்படுகின்றன.**


நிகழ்ச்சியை உன்னிப்பாக கவனித்து கொண்டிருக்கு மனித உரிமைகள் போராளி பேராசிரியர் மார்க்ஸ்

வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள்தான் எழுதியிருந் தார்கள்.

நூலை, அகில இந்திய இஸ்லாமிய அமைப்புகளின் கூட்டமைப்பாகிய மஜ்லிசே முஷாவரத் டெல்லியின் தலைவர் மில்லி கெஜட் (டெல்லி) என்ற புகழ்பெற்ற ஆங்கில மாதமிருமுறையின் ஆசிரியர் பெரோஸ் மீடியா என்ற வெளியீட்டகத்தின் உரிமை யாளர். கர்கரேயைக் கொலை செய்தது யார்?, 26/11 நீதித்துறையின் தோல்வி ஆகிய நூல் களை வெளியிட்டவர், டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் வெளியிட்டார்கள்.

முதல் பிரதியை தமுமுக-வின் செய்தி யாளர் பேராசிரியர் முனைவர் காஜா கனி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அடுத்த பிரதியை சமுதாய நற்பணிச் செயல் வீரர் செங்கிஸ்கான் அவர்களும் அடுத்த பிரதியை முஸ்லிம்களின் பாரம்பரிய மிக்க கட்சியாகிய இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் வழக் கறிஞர்கள் பிரிவு செயலாளர் ஜீவ கிரிதரன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். (இந்தக் குறு நூல் ரூபாய்25-க்குக் கிடைக்கும்)

அடுத்து, டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

அவர்கள் தனது உரையில் தீவிரவாதம் என்ற சொல்லாடலுக்குப் பின்னால் மறைந்துள்ள சில இரகசியங்களைப் பற்றிப் பேசினார். இந்தத் தீவிரவாதங்களுக்கு சர்வதேச முகம் ஒன்று உண்டு. ஐரோப் பாவைச் சார்ந்த நாடுகள் பல ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதையே தங்கள் முக்கிய வருவாயாகக் கொண்டவை. ஆகவே 'Weapon Industry' என்ற ஆயுதத் தொழில்களில்தாம் அவை அதிகமாக முதலீடு செய்கின்றன.

தாங்கள் உற்பத்தி செய்யும் ஆயுதங் களுக்கு சதா சர்வ காலமும் தேவைகள் இருக்க வேண்டும் என்றால், உலகெங்கும் போர்களும் பூசல்களும் நடந்து கொண்டே இருக்க வேண்டும் என அவர்கள் கருது கின்றார்கள். அதனால் அவர்கள் நாடுகளுக் கிடையேயும், நாடுகளுக்கு உள்ளேயும் குழப்பங்களையும் பதற்றங்களையும் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றார்கள். இதைத்தான் நாம் இப்போது உலகெங்கும் கண்டு வருகின்றோம்.

இந்தியாவில் தீவிரவாதம் தீவிரவாதம் எனப் பேசுவதில் நமது ஆட்சியாளர் களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏராள மான இலாபங்கள் இருக்கின்றன. அவர்கள் தீவிரவாதம் என்ற செய்தியை மக்கள் மன்றத்தில் பரப்பி மக்களைப் பதற்றத்துடன் வைத்துக் கொள்கின்றார்கள். இதனால் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்னை களிலிருந்து அவர்களின் கவனங்கள் திசை திருப்பப்பட்டு விடுகின்றன.

இந்தியாவில் சாதாரண மருந்துகள் கூட கிடைக்காமல் மக்கள் மடிந்து கொண்டிருக் கின்றார்கள். லட்சக்கணக்கில் மக்கள் செத்துக் கொண்டிருக்கும் பிரச்னைகளின் பக்கம் மக்கள் திரும்பிவிடாமல் இருக்கவும் தீவிர வாதத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். தீவிரவாதத் தாக்குதல்கள் இந்துத்துவா பயங்கர வாதிகளால் நடத்தப்பட்டிருக்கும் வேளையில், தீவிரவாதம் என்ற சொல் முஸ்லிம்களைக் குறிக்கும் சொல்லாக மாற்றப்பட்டுள்ளது. இது திசை திருப்பும் முயற்சியே. இது போல் இன்னும் பல புள்ளி விவரங்களை தொகுத் தளித்தார்கள்.

முடிவில் தாருல் இஸ்லாம் சார்பில் அதன் சென்னை ஒருங்கிணைப்பாளர் சாதிக் பாஷா நன்றி கூறினார்.

**நிகழ்ச்சியில்**


பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த வர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மக்களும் அரங்கத்தை நிறைத்து நிரம்ப வீற்றிருந்தார்கள்.

மனித உரிமைப் போராளி அ.மார்க்ஸ், சமுதாய வழக்கறிஞர் சங்கரசுப்பு, மூத்த வழக்கறிஞர் NGR பிரசாத், கேப்டன் அமீர் அலி, சமுதாய ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மகள் கன்ஸ்ட்ரக்ஷன் அதிபர் ஆகியோர் பார்வையாளர்கள் வரிசையில் வீற்றிருந்து நிகழ்ச்சிக்குப் பெருமை சேர்த்தனர்.

MGM

# அரசுகளை தவறான பாதையில் வழிநடத்தும் உளவுத்துறை



அஜ்மல் கசாப் அவசர தூக்கு ஏன் புத்தகத்தை மில்லி கெசட் ஆங்கில இதழ் ஆசிரியர் ஜஃபருல் இஸ்லாம் கான் வெளியிட பெற்றுக்கொள்பவர் த.மு.மு.க மாநில நிர்வாகிகளில் ஒருவரான சகோ. பேராசிரியர். ஹாஜா கனி.

**16-03-2014** அன்று சென்னையில் நடை பெற்ற கர்கரே விருது வழங்கும் விழாவில் இல்யாஸ் ரியாஜி தலைமையுரை நிகழ்த்தினார்.

இந்த ஆண்டு கர்கரே விருது பெறும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் மஹாராஷ்டிரா மாநில காவல்துறையில் ஐ.ஜியாகப் பணி யாற்றியவர். பணிக்காலங்களில் திறம்பட நேர்மையாகப் பணிபுரிந்தவர் என்று பெயரெடுத்தவர்.

தேசத்தை உலுக்கிய முத்திரைத்தாள் மோசடி வழக்கை விசாரித்து, நாட்டுக்கு முப்பதாயிரம் கோடி ரூபாயை மீட்டுத் தந்தவர். பின்னர் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றவர்.

தன்னுடன் பணியாற்றிய நேர்மையான அதிகாரியான ஹேமந்த் கர்கரே (தீவிரவாத தடுப்புப் படைத் தலைவர்) தெருவில் சுற்றித் திரியும் அநாவசியமான ஒரு மிருகத்தைப் போல சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டு மனம் பொறுக்காமல் கொதித்தெழுந்தார்.

கர்கரே கொல்லப்பட்ட கொடூரத்தில் புதைந்து கிடக்கும் மர்மங்களைத் தோண் டினார். மத்திய உளவுத் துறையான ஐ.பிதான் கர்கரேயைக் கொன்றது என்ற உண்மையைக் கண்டறிந்தார்.

'கர்கரே'வைக் கொலை செய்தது யார்? என்ற நூலின் மூலம் ஐ.பியின் முகத் திரையைக் கிழித்தெறிந்தார்.

நாடெங்கும் குண்டுகளை வெடிக்க வைத்து பழியை முஸ்லிம்கள் மீது போட்டு விட்டு தப்பித்து விடும் உண்மைக் குற்ற வாளிகளான இந்துத்துவ சக்திகளைக் கைது செய்திட கர்கரே முனைப்பு காட்டினார். அதனால் பிராமணீயவாதிகளை அதிகாரி களாகக் கொண்ட ஐ.பி எனப்படும் மத்திய உளவுத்துறை கர்கரேவைக் கொன்றது என்ற உண்மையை ஊரறிய, உலகறிய உரக்க முழங்கினார்.

**கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூல் ஏற்படுத்திய புரட்சி**

மத்திய, மாநில அரசுகளுக்குப் பொய் யான தகவல்களைத் தந்து அரசுகளை தவறான பாதையில் வழிநடத்தும் ஐ.பியின் தறிகெட்ட பயணம் கட்டுக்குள் வந்தது.

ஐ.பி தரும் தகவல்களை மட்டுமே நம்பி ஒரு முடிவை எடுக்க முடியாது என்று அரசுகள் முடிவுக்கு வந்தன.

சுதந்திரம் பெற்ற நாள் முதல் 'பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர்' என்ற பெயரில் இருந்து வந்த அநாவசியமான பதவி அகற்றப்பட்டது. அந்தப் பதவியிலிருந்து பிராமண அதிகாரி அதிகாரமற்ற வேறொரு பதவிக்குத் தள்ளப்பட்டார்.

பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் கனடா நாட்டுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். அதற்கு நம்முடைய பிரதமருக்கு எப்படிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை கனடா அரசு தந்திட வேண்டும் என்பதைக் கூறிட கனடாவுக்கு ஐ.பி. அதிகாரிகள் சிலர் சென்றிட விரும்பி, கனடா அரசிடம் விசா கேட்டனர்.

ஆனால், ஐ.பி அதிகாரிகளுக்கு விசா வழங்கிட கனடா அரசு மறுத்துவிட்டது. அதற்கு கனடா அரசு கூறிய காரணம் என்ன தெரியுமா?

ஐ.பிதான் இந்தியாவில் குண்டுகளை வெடிக்க வைக்கின்றது என்பது எங்களுக்குத் தெரிய வந்திருக்கின்றது. சொந்த நாட்டிலேயே குண்டுகளை வைக்கும் ஐ.பிக்கு நாங்கள் எப்படி விசா தர முடியும் என்று கூறிவிட்டது.

அதாவது, குண்டுவெடிப்பது இந்தியாவில். வைப்பது இந்தியர்கள் (ஐ.பி அதிகாரிகள் ஏற்பாடு செய்த இந்தியர்கள்). இதனால் மரணமடைவது இந்தியர்கள். பொருளாதார இழப்பு, உயிரிழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படுவது இந்தியக் குடும்பங்கள். பழி சுமத்தப்படுவது (அப்பாவி முஸ்லிம்கள்) இந்தியர்கள் மீது.

இவ்வளவு இழிவான வேலைகளை ஈவு, இரக்கமின்றி செய்து வரும் ஐ.பியை எங்கள் கனடா நாட்டுக்குள் அனுமதித்தால் இங்கேயும் குண்டு வைத்துவிடும். எங்கள் மானம் என்னாவது சர்வதேச அளவில். இதுவே கனடாவின் முடிவு.

மேலும் ஐ.பியில் பணியாற்றும் ஐ.பி.எஸ் பட்டம் பெற்ற அதிகாரிகள் இருபத்து ஆறு பேர் ஒரே நேரத்தில் பணி மாற்றம் செய்யப்பட்டனர். மொத்தம் முப்பது பேர் பணி மாற்றம் எனும் தண்டனைக்கு உள்ளாயினர். சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மத்திய உளவுத்துறையின் உயரதிகாரிகள் இவ்வாறு தண்டிக்கப்படுவது இதுவே முதல் முறை.

மேலும், ஐ.பி.யின் வரலாற்றில் இதுவரை ஒரு குறிப்பிட்ட (பிராமண) சாதியினரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். ஒரு முஸ்லிம் கூட ஐ.பியில் இருந்ததில்லை. இப்போது ஒரு முஸ்லிம் ஐ.பியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேலும், ஐ.பியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அதற்கு இணையான இன்னொரு புலனாய்வு முகவாண்மை (N.I.A - National Investigation Agency) ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐ.பியின் கட்டுப்பாடற்ற அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஐ.பி தனது உளவுத் தகவல்களை பத்திரிகையாளர்களிடம் நேரடியாகக் கூறிடக் கூடாது என்று மைய அரசு ஐ.பியிடம் கூறிவிட்டது. (இந்தியாவைத் தகர்க்க ஜெய்ஷ்-இ-முஹம்மது சதி, மோடியைக் கொல்ல இந்திய முஜாஹிதீன் திட்டம், கெஜ்ரிவாலைத் தீர்த்துக் கட்ட பகீர் பிளான் போன்ற அதிரடி புருடாக்களை இனி பத்திரிகையாளர்களிடம் ஐ.பி கூறக் கூடாது என்று அரசு கூறியதை மீறி ஐ.பி அடாவடியில் ஈடுபட்டு வருகிறது.)

மேலும், மத்திய அரசில் (ரயில்வே உள்ளிட்ட நாட்டுக்கு எக்கச்சக்கமான வருமானத்தை ஈட்டித் தரும் வளம் கொழிக்கும் துறையில்) பணியாற்றிய நேர்மையான அதிகாரிகளை நாட்டிலுள்ள லட்சக்கணக்கான காவல்நிலையங்களில் ஒன்றில் கூட ஒரு எஃப்.ஐ.ஆர் (முதல் தகவல் அறிக்கை) கூட இல்லாதவர்களையெல்லாம் கூட தீவிரவாதி என்று வீண் பழி சுமத்தி பணி நீக்கம் செய்வதும் நீதிபதிகளைக் கூட மிரட்டுவதுமாக (பாபரி மஸ்ஜித் வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளை தீர்ப்புக்கு முன் ஐ.பி மிரட்டியதாக இந்தியா டுடே இதழ் கூறியுள்ளது.) அடாவடித்தனம் செய்யும் ஐ.பி.யை கண்டித்து எழுதிடும் துணிச்சல் பத்திரிகைகளுக்கு வந்துள்ளது.

இதுவெல்லாம் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய நூல் (கர்கரேயைக் கொலை செய்தது யார்) ஏற்படுத்திய புரட்சி.

**இந்த நிகழ்ச்சியின் நோக்கம்**

இந்தியா பல்வேறு இன, சாதி, மத மக்கள் வாழும் நாடு. ஆனால், இங்கே முஸ்லிம்கள் மட்டும் நிம்மதியாக வாழ முடியவில்லை. இது ஏன்?

தினந்தோறும் காலையிலே படுக்கையை விட்டு எழும்போதே முஸ்லிம் பெற்றோர்களை பீதி கவ்விக் கொள்கிறது.

நேற்று எங்கே குண்டு வெடித்ததோ? எந்தப் பாவி எங்கே குண்டு வைத்தானோ? நம் வீட்டுப் பிள்ளைகளை காவல்துறை பிடித்து விடுமோ? விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட நம்முடைய பிள்ளை உயிரோடு வருவானா? மறுநாள் செய்தித் தாளில் தீவிரவாதியாகக் காட்டப்பட்டு விடுவானா என்ற பீதியோடும் பதைபதைப்போடும் வாழ்ந்து கொண்டிருந்தனர் இந்திய முஸ்லிம்கள்.

இன்னும் இந்த பீதி முழுமையாக நீங்கிவிடவில்லை என்ற போதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கும் குண்டுகள் வெடிக்கவில்லை.

(பீகாரில் புத்த கயாவிலும் கர்நாடகா மாநிலத் தலைநகர் பெங்களூருவில் பாரதீய ஜனதா கட்சி அலுவலகம் அருகிலும் வைக்கப்பட்ட குண்டுகளைத் தவிர. பீகாரில் அந்த வழக்கில் இந்துத்துவ தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஐ.பி இந்த

வழக்கை விசாரிக்கவில்லை. என்.ஐ.ஏதான் விசாரிக்கிறது. பெங்களூர் வழக்கில் ஐ.பி தலையிடக் கூடாது. என்.ஐ.ஏ-தான் விசாரிக்க வேண்டும் என்று முஸ்லிம் கூட்டமைப்பு சார்பில் தாருல் இஸ்லாம் தலைவர் மு.குலாம் முஹம்மது கோரிக்கை வைத்துள்ளார். விரைவில் ஐ.பி முகத்திரை கிழியும்.)

ஆக, 'கர்கரேயைக் கொலை செய்தது யார்?' என்ற நூல் இந்தியாவில் குண்டு வெடிப்புகளை நிறுத்தி இந்தியர்கள் அநியாயமாகக் கொல்லப்படாமல் காப் பாற்றியிருக்கிறது. குண்டுகள் வெடித்தாலும் உண்மைக் குற்றவாளிகளை நோக்கி விசாரணையும் தண்டனையும் திரும்பிட வழி வகுத்திருக்கிறது.

இது முஸ்லிம்களின் குற்ற உணர்வை அகற்றி தைரியத்தையும் நம்பிக்கையையும் பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்தி யுள்ளது. இப்படியொரு மறுமலர்ச்சியை மக்களுக்குப் பெற்றுத் தந்திடவே தாருல் இஸ்லாம் பாடுபட்டு வருகிறது. அதன் தன்னலமற்ற இயக்கவாதிகள் உழைத்து வருகின்றனர்.

இப்பேற்பட்ட ஒரு சாதனையை நிகழ்த் தியதோடு தன் அடுத்த நூல் (26/11 விசாரணை நீதித்துறை தோற்றது ஏன்?) வழியாக ஐ.பி எப்படியெல்லாம் நீதித் துறையை ஏமாற்றி முஸ்லிம்களுக்கு தண்டனை வாங்கித் தருகிறது என்பதை பாரறியச் செய்திரக்கும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களுக்கு இந்த ஆண்டு 'கர்கரே விருது' வழங்குவதில் தாருல் இஸ்லாம் பெரும் மகிழ்ச்சி கொள்கிறது.

தாருல் இஸ்லாமின் லட்சியங்களுள் ஒன்று இந்தியாவில் முஸ்லிம்கள் மற்ற சாதி, சமய மக்களைப் போல் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும். அவர்கள் மீது வீணாகச் சுமத்தப்படும் தீவிரவாதப் பழி அகற்றப்பட வேண்டும் என்பது. இந்த நிகழ்ச்சியின் நோக்கமும் அதுவே.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் முதல் நூல் குண்டுவெடிப்புகளைத் தடுத்தது. அதில் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப் படுவதை நிறுத்தியது. அவரின் இரண்டாவது நூல், நீதித் துறையைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் தண்டிக்கப்படுவதை நிறுத்தும் வலிமை கொண்டது இன்ஷா அல்லாஹ். ஐ.பி.யின் நீண்ட கொடுங்கரங்களிலிருந்து நீதித்துறையைக் காப்பாற்றிடும் திறன்



நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் இன்னொரு பகுதி

மிக்கது.

தாருல் இஸ்லாமின் லட்சியப் பயணத்துக்கு ஊக்கம் தரும் நூல்களை வரலாற்று ஆவணங்களாக எதிர்காலத் தலைமுறைக்கு வழங்கியிருக்கும் எஸ்.எம்.முஷ்ரிஃப் இவ்வாண்டுக்கான 'கர்கரே விருது' பெறுகிறார்.

**டாக்டர் ஜஃபருல் இஸ்லாம்கான்**

விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிட டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்களை அழைத்த விழாத் தலைவர் இல்யாஸ் ரியாஜி கூறியது:

இந்தியாவில் முஸ்லிம்களுக்கென வரும் ஒரே ஆங்கில இதழ் 'மில்லி கெஜட்.' இதன் ஆசிரியர்தான் ஜஃபருல் இஸ்லாம் கான்.

உலகின் முதல் பயங்கரவாத நாடான இஸ்ரேல், பாலஸ்தீன மக்களுக்கு எதிராகச் செய்துவரும் அநியாயங்களை பாலஸ்தீன மக்களின் பிரச்னைகளை ஆய்வு செய்து உலகுக்குத் தெரிவித்தவர். அதற்காக டாக்டர் (முனைவர்) பட்டம் பெற்றவர்.

பாலஸ்தீன முஸ்லிம்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வந்தபோது, அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தந்தவர்.

உயிர் காக்கும் மருந்துகளைக் கூட பாலஸ்தீன மக்களுக்குக் கிடைத்துவிடாமல் பயங்கரவாத இஸ்ரேல் அரசு தடுத்த போது, இந்திய முஸ்லிம்களிடம் பணமும் மருந்தும் வசூலித்து கோடிக் கணக்கில் அங்கே அனுப்பி இஸ்லாம் ஏற்படுத்திய சர்வதேச சகோதரத்துவத்தை இஸ்ரேல் அரசால் ஒழிக்க முடியாது என்பதை செயலில் கட்டியவர்.

முஸ்லிம்களுக்கு எதிரான அரச

பயங்கரவாதத்தை தோலுரித்துக் காட்டும் அரிய நூல்களை துணிச்சலுடன் பதிப்பித்து வெளியிட்டு வருபவர்.

அசாமிலும் உ.பி.முசாபர் நகரிலும் கலவரத்தால் பாதிக்கப்பட்டு உள்நாட்டி லேயே அகதிகள் முகாமில் வாழும் முஸ்லிம்களுக்குத் தேவையான அடிப்படை உதவிகளைச் செய்து வருபவர்.

நிதிச் சுமைகளுக்கு மத்தியிலும் தன் 'மில்லி கெஜட்' ஆங்கில இதழை இந்துத்துவ பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முழக்கமாக நடத்தி வருபவர்.

மேற்கு வங்காளத்தின் எல்லையோர கிராமங்களில் வாழும் வங்காள மொழி பேசும் முஸ்லிம்கள் இந்தியர்களல்ல. அவர்கள் வங்காளிகள். பங்களாதேஷி லிருந்து சட்ட விரோதமாகக் குடியேறிய வர்கள் என்றொரு மகாப் பொய்யை இந்துத்துவ சக்திகள் கூறி வருகின்றன. மைய அரசின் சில துறைகளும் அதை வழி மொழிவது போல் பேசி வருகின்றன. இந்துத் துவாவின் ஊது குழலாக.

இந்த படுபயங்கர பாதகச் செயலுக்கு எதிராகக் களம் இறங்கினார். அங்கே அரசின் அனுமதியுடன் பள்ளிக் கூடங்களைத் திறந்தார். அங்கு பயின்று முடித்தவர்களுக்கு பள்ளிக் கூடச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தப் பள்ளிக் கூட சான்றிதழ் அவர்கள் அரசின் குடியுரிமை பெறுவதற்கான சான்றாக ஏற்கப்பட்டது.

இப்படி இவர் ஆற்றிய பணி, இந்திய முஸ்லிம்களை, 'வெளிநாட்டிலிருந்து வந்தேறி அந்நியர்கள்' என்று காட்டிட முயன்ற இந்துத்துவ சக்திகளின் திட்டத்தை முறியடித்தது. இதன் மூலம் இந்தியாவில் பிறக்கும் முஸ்லிம்கள் 'தாம் இந்தியர்கள்' என்று நிரூபித்திடவே பெரும் சட்டப் போராட்டம் ஒன்றை நடத்திட வேண்டிய அவலத்திலிருப்பதை உலகுக்குக் காட்டினார்.

'கர்கரேயைக் கொலை செய்தது யார்?', '26/11 விசாரணை நீதித்துறை தோற்றது ஏன்?' ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவது இன்றைய காலகட்டத்தில் எவ்வளவு பெரிய சிக்கலான சவாலான பணி என்பதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல் இந்துத்துவாவுக்கு எதிரான பணிகளை தைரியமாக ஆற்றி வருபவர்.

மேற்கண்ட நூல்களை தமிழில் வெளியிடும் உரிமையை எமது வேர்கள் வெளியீட்டகத்துக்கு வழங்கியுள்ளார். எமது அழைப்பை ஏற்று சிறப்புரையாற்ற வருகை தந்துள்ளார்.

கற்பது கடமை!

இனியவை எதிலும் முதலிடம் என்பதே எங்களின் இலக்கு

# RDB COLLEGE OF ARTS AND SCIENCE

**(ISO 9001 : 2000 CERTIFIED COLLEGE)**
**(FOR GIRLS ONLY)**

PAPANASAM-614 205, THANJAVUR DT. TAMILNADU. 04374-222123, CELL : 9787766002

**RDB**
**MATRICULATION H.Sc.SCHOOL +1 ADMISSION STARTED GOVT. APPROVED**

## 2014 - 2015
## ADMISSIONS STARTED FOR ALL COURSES
~
## பெண்கள் மட்டும்

**B.Ed., M.Ed., D.T.Ed., NCTE & GOVT. OF TAMIL NADU APPROVED ACCREDITED WITH B GRADE FROM NAAC**

| UNDER - GRADUATE COURSES | | | |
|---|---|---|---|
| 1. | B.Sc., (Information Technology) | 8. | B.A., (English) |
| 2. | B.C.A, (Computer Application) | 9. | B.B.A., (Business Administration) |
| 3. | B.Sc., (Computer Science) | 10. | B.Com., (Commerce) |
| 4. | B.Sc., (Microbiology) | 11. | B.Lit., (Tamil) |
| 5. | B.Sc., (Biochemistry) | 12. | B.Sc., (Visual Communcation) |
| 6. | B.Sc., (Mathematics) | 13. | B.Sc., (Bio-Technology) |
| 7. | B.Sc., (Physics) | 14. | B.Sc., (Hotel Management & Catering Science) |
| **PART - 1 SUBJECTS : TAMIL, HINDI, ARABIC** | | | |
| ஆலிமா (முபல்லிகா) முஸ்லிம் பெண்களுக்கு மட்டும் மாலையில் நடத்தப்படும். | | | |
| **POST GRADUATE COURSES** | | | |
| 1. | M.Sc.,(Information Technology) | 3. | M.B.A.,(Business Administration AICTE Approved) |
| 2. | M.Sc., (Computer Science) | 4. | M.Com., (Commerce) |
| **RESEARCH COURSES** | | | |
| 1. | M.Phil., (Computer Science) | 3. | M.Phil., (Commerce) |
| 2. | M.Phil, (Management) | | |
| **COLLEGE WORKING HOURS 9.00 A.M. TO 1.30 P.M.** | | | |

*Under the Management of* : **Prof. Dr. M.A. DAWOOD BATCHA, Ph.D.,** *(Secretary & Correspondent)*

Prof. Dr. **M.Mohamed Siddiq** Ph.D., (Principal)
Prof. Dr. **M.Arunachalam,** Ph.D., (Director)
Prof. Dr. **R.Jayachandran,** Ph.D.,
Prof. Dr. **T.Abdur Rahman** Ph.D., (Adviser)
Prof. **M.Mohamed Umar** M.A., M.Phil., (Adviser)

**M.B.A., STUDENTS WILL GET LAPTOP TO USE IN THE CLASS ROOM**

# RDB மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி

பாபநாசம் - 614 205, தஞ்சை மாவட்டம் போன் : (04374) 317424, 222123

# RDB நேஷனல் மழலையர் பள்ளி

ராஜகிரி - 614 207, தஞ்சை மாவட்டம், போன் (04374) 252455

**தமிழக அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்**

**2014-2015ஆம் கல்வியாண்டிற்கு PRE.KG முதல் +2 வரை மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெறுகிறது.**

**மற்ற பள்ளிகளில் உள்ள அனைத்து வசதிகளோடு**

## எங்கள் பள்ளியின் கூடிய சிறப்பு அம்சங்கள்

1. இயற்கை எழிலல்மிகு சூழல்
2. படிப்பதற்கேற்ற சகல வசதிகள்
3. பெண்கள் கல்வி எனும் இலக்கு
4. வெளிநாட்டு இந்தியர் நலன் கருதி வெளிநாட்டு இந்தியரால் நடத்தப்படும் கல்வி நிறுவனம்!
5. தகுதி பெற்ற திறமை மிக்க ஆசிரியர்/ஆசிரியைகள்
6. தினந்தோறும் இஸ்லாமியக் கல்விப் பயிற்சி
7. நவீனமயமாக்கப்பட்ட ஆய்வுக்கூடங்கள், கணினிக்கூடம்
8. கல்லூரி வளாகத்தில் தனிப் பள்ளிவாசல்!
9. தமிழ், அரபி, இந்தி இவற்றை இரண்டாம் மொழியாகத் தேர்வு செய்யும் வசதி!
10. LCD Projetor மற்றும் கணினி மூலம் பயிற்சி
11. பொழுதுபோக்கு மற்றும் அறிவுத் திறன் வளர்ச்சி
12. கராத்தே, யோகா, தோட்டக் கலை, செஸ் பயிற்சி
13. சிறந்த பஸ்/வேன் வசதி
14. பாதுகாப்புமிக்க சிறந்த தங்கும் விடுதி
15. ஊட்டமிக்க உணவு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
16. இலவச கல்விச் சுற்றுலா மற்றும் 24 மணி நேர மருத்துவ வசதி
17. மாணவர்களுக்கு ரூபாய் ,50,000/- விபத்து இன்சூரன்ஸ்
18. மிகுந்த ஆர்வத்தைத் தூண்டக்கூடிய நூலகம்.

இவ்வாய்ப்பினை பயன்படுத்தி உங்கள் குழந்தைகளின் வாழ்வில் ஒளி ஏற்ற உங்களை அன்புடன் அழைக்கின்றோம். இக்கல்வி முறை பற்றிய விபரம் அறிய, மின் அணு வகுப்பறைகளைக்காண நேரில் வருகை தாருங்கள்.

**(ராசிபுரத்தையும், நாமக்கல்லையும், திருச்செங்கோட்டையும் தாண்டி சிறப்பான கல்வி தரப்போகின்ற ஒரே பள்ளி)**

விபரங்களுக்கு : தலைவர் / செயலர்

# RDB கல்வி நிறுவனங்கள்

பாபநாசம் 614 205, தஞ்சை மாவட்டம் தொலைபேசி (04374) 222123

# முஸ்லீம் பெண்களே!

## சிறப்பான எதிர்கால வாழ்விற்கு நீங்கள் தயாரா?

திருமணத்திற்குப்பின் தங்கள் தங்கள் மகள் தமிழகத்தில் ஏதாவது ஒரு கிராமத்திலோ, நகரத்திலோ அல்லது வெளிநாட்டிலோ தான் தனது கணவருடன் இல்வாழ்க்கை நடத்துவார். அத்தகைய இடத்தில் அல்லது அதற்கு அருகாமையில் ஒரு பள்ளிக்கூடம் உறுதியாக இருக்கும். உங்கள் மகள் தன்னை ஆசிரியைப் பணிக்கு தகுதிப்படுத்திக்கொண்டால் அவர் அப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்ற முடியும் என்பது உறுதி. எனவே +2 முடித்த உங்களது மகளை ஆசிரியர் பட்டயப்பயிற்சி (D.T.Ed.,) மற்றும் பட்டப்படிப்பு படித்த தங்களது மகனை B.Ed., படிப்பு படிக்க வைத்தால் திருமணத்திற்குப்பின் அவர்களுக்கு ஆசிரியையாகும் வாய்ப்பு உறுதியாகக் கிடைக்கும். இவ்வாய்ப்பு திருமணத்திற்குப்பின் உங்கள் மகளுக்கும் அவரின் எதிர்கால குழந்தைகளுக்கும் பாதுகாப்பான மற்றும் நிறைவான வாழ்க்கையையும், பொருளாதார முன்னேற்றத்தையும் கொடுக்கும் என்பது மறக்க இயலாத உண்மை, இவ்வாய்ப்பு உங்கள் மகளின் எதிர்கால நல்வாழ்விற்காக முன் கூட்டியே செய்யும், தொடர்ந்து வருமானம் தரக்கூடிய சீதனம் என்பதில் ஒரு சிறிதேனும் ஐயமில்லை. எனவே உங்கள் மகளை தகுதியான ஆசிரியையாக மிகப்பாதுகாப்பான RDB ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் D.T.Ed., வகுப்பில் / RDB கல்வியியல் கல்லூரியில் B.Ed., வகுப்பில் சேர்த்து பயனடையுமாறு தங்களை பேரன்புடன் அழைக்கின்றோம்.

| NCTE - பெங்களூரு மற்றும் தமிழக அரசு பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்று தொடர்ந்து நடத்தப்படும் வகுப்புகள் | | |
|---|---|---|
| **RDB Teacher Training Institute** | **RDB COLLEGE OF EDUCATION** | |
| **D.T.Ed.,** | **B.Ed.,** | **M.Ed.,** |
| | **Aceredited with B Grade from NAAC** | |
| **இரண்டு ஆண்டுகள்** | **ஒரு ஆண்டு** | **ஒரு ஆண்டு** |

- ★ D.T.Ed., B.Ed., M.Ed., கல்வியை தருகின்ற ஒரே முஸ்லீம் ஸ்தாபனம்.
- ★ மாணவிகளுக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான விடுதி கல்லூரி வளாகத்திலேயே உள்ளது.

விபரங்களுக்கு : தலைவர் / செயலர்

## RDB கல்வி நிறுவனங்கள்

பாபநாசம் 614 205, தஞ்சை மாவட்டம் தொலைபேசி (04374) 222123

தலையங்கம்

# பாலாறும் தேனாறும் ஓட வேண்டுமா?

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்கள் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

எல்லா அறிக்கைகளும் மக்களின் பொருள்வளத்தைப் பெருக்குவோம் என்பதை பக்கம் பக்கமாக விளக்குகின்றன.

மனிதன் பொருளால் மட்டுமே வாழ்ந்திடும் ஓர் பொருளாதார மிருகமல்ல. மாறாக, அவன் ஆன்மாவும் கொண்டு வாழ்ந்திடும் ஓர் அழகிய படைப்பு.

அவன் பசியால் வாடுவது போலவே நல்ல ஆன்மிகத் தேட்டங்களுக்காகவும் வாழ்ந்திடுபவன்.

பசித்தால் வாடிப் போவான்.

ஆனால், அநீதியால் அவன் அவதியுறுவான். அடிமைப்பட்டுப் போவான். வெகுண்டெழவும் செய்வான்.

இந்தியாவின் மிகப் பெரியதொரு பகுதியில் அநீதி மட்டுமே நடப்பிலிருக்கின்றது. அடிமைப்பட்டு வாழ்ந்த மக்கள், பொங்கி எழவும் தொடங்கி இருக்கின்றார்கள்.

நமது உச்சநீதிமன்ற நீதிபதிகளே, நாங்கள் வழங்கிய தூக்கு தண்டனைகளில் பல தவறானவை என்பதை ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஏறத்தாழ எட்டு மாவட்டங்களில் சிறப்புச் சட்டங்களின் வழி மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நியாயப்படுத்தி வருகின்றோம். வேறு சொற்களால் சொன்னால் அந்த மக்களின் குரல்வளைகளை நெறுக்கி வருகின்றோம்.

நாம் கட்டவிழ்த்துவிட்ட அநியாயங்களைப் பொறுக்க மாட்டார்கள். பொங்கி எழுந்து நியாயம் கேட்டால் சுட்டுக் கொல்லுகின்றோம்.

இந்த வகையில் Armed Forces Special Powers Act என்ற ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் ஒரு பெரும் அநீதி.

நம் நாட்டின் கிழக்குப் பகுதியில் இந்தச் சட்டத்தை எதிர்த்து 11 ஆண்டுகாலமாக இம்ரோம் ஷர்மிளா என்ற பெண்மணி உண்ணாவிரதம் இருக்கின்றார்.

உண்ணாவிரதங்கள், ஆட்சியாளர்களின் ஆன்மாவையும் இதயத்தையும் தொடும். அதனால் ஆட்சியாளர்கள், அந்தப் பிரச்னையின் பக்கம் முகந்திரும்புவார்கள். பிரச்னையின் ஆழத்தை ஆய்ந்து அநீதியை அகற்றி நீதியை நிலைநாட்டுவார்கள் என மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால், அந்தப் பெண்மணியின் மீது தொடர்ந்து வழக்குகளை ஜோடித்துக் கொண்டே இருக்கின்றது நமது அரசு.

இதே சட்டம்தான் கஷ்மீர் மக்களை கற்பழித்துக் கொலை செய்யும் நமது இராணுவத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. இந்தச் சட்டத்திற்கெதிராக எந்த இயக்கங்களையும் காணவில்லை.

இது போன்ற அநியாயங்களை முழு அளவில் கட்டவிழ்த்து விட்டு பொருளாதார வாக்குறுதிகளால் விளையப் போவது எதுவுமில்லை. அந்த மக்கள் நமது நீதிமன்றங்களில் நீதி கேட்ட போது நாம் அவர்களை விரக்தியின் விளிம்பிற்கே அனுப்பி விட்டோம்.

இந்த நிலை தவிர்த்து நீதி நிலைக்க வேண்டும். அதற்கு இறைவனை அஞ்சி வாழ்பவர்களின் ஆட்சி வந்திட வேண்டும். இறைவனின் இறுதித்தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: 'ஓர் ஆட்சியாளன் தன் அலுவலகத்தில் அமர்ந்து ஒரு நாள் நீதி செலுத்தினால், அது அவனது ஓராண்டு இறைவணக்கத்திற்குச் சமம்.' (நபிமொழி புகாரி, முஸ்லிம்)

இறைவன் இவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னான்:

**முஃமின்களே! நியாயத்தை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே (தக்வாவுக்கு) பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(அல்குர்ஆன் 5:8)